கல்கி

KALKI 25.10.98 ரூ.4.50



கிரீடம் சூடிய சென்னைக்கிளி!

பார்க் டவுன் பெனிபிட் பண்டு லிமிடெட்

மத்திய அரசாங்க அங்கீகாரம் பெற்ற ''நிதி'' கம்பெனி

துவக்கம் 1985. பதிவு எண்: 11600/85

பதிவு அலுவலகம்

223, தெற்கு தங்க சாலை தெரு, சென்னை - 600 003.

✆ 5352676, 5355472, 5359316

கிளைகள்

2, கிழக்கு மாட வீதி, திருவான்மியூர், சென்னை - 600 041.

✆ *413582, 416417, 4416417, 4413582, 4425518*

995-P II அவின்யூ, 12வது மெயின் ரோடு ஜங்ஷன்,

அண்ணாநகர், சென்னை - 600 040. ✆ *6262656, 6280750*

73 & 74 ஆற்காடு ரோடு, முதல் மாடி கோடம்பாக்கம்,

சென்னை - 600 024. ✆ *4846528, 4843017*

215, எம்.டி.எச். ரோடு, முதல் மாடி அம்பத்தூர்,

சென்னை 600 053, ✆ *6357725, 6255733*

73, ரங்கநாதன் தெரு, பேஸ்மெண்ட், தியாகராயர் நகர்,

சென்னை - 600 017. ✆ *4344319, 4332378*

537, T.H.ரோடு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை - 600 021.


✆ 5965208, 5965256

22. நந்திகோயில் தெரு, தெப்பக்குளம், திருச்சி - 620 002.

✆ *0431 706187, 706681, 706368.* (செவ்வாய் விடுமுறை)



● நகைகள் மற்றும் வீடுகளின் பேரில் கடன் வழங்கப்படும்



நிர்வாக இயக்குநர்

Dr. P. பாலசுப்ரமணியம் B.Sc.,

இயக்குநர் குழு தலைவர்

Dr. R. விவேகானந்தன் B.com., MBA.,

அலுவலக நேரம்

காலை 8.30 மணி முதல் 12.30 மணி வரை

மாலை 2.00 மணி முதல் 6.00 மணி வரை

ஞாயிறு: காலை 8.30 மணி முதல் 12.00 மணி வரை

• வார விடுமுறை வெள்ளிக்கிழமை •



பொண்ணு வீட்டுக்காரன்

சத்யராஜ் (சபாஷ்)

சிறப்பான நடிப்புக்கு மட்டுமல்ல; ஓர் இளைய கதாநாயகப் பட்டாளமே வந்த பிறகு இன்னமும் மரம் சுற்றி நடனங்கள் போணியாகாது என்பதைப் புரிந்து கொண்டதற்கும். (இரட்டை வேடம் என்ற போர்வைக்குள் நுழையாததற்கு இன்னொரு பாராட்டு.)

ப்ரீதா (கீப் இட் அப்)

பொருத்தமான, சிறப்பான நடிப்பு.

கவுண்டமணி (ச்சே!)

'இவ்வளவு மட்டமான ரோலில்தான் ஒருவர் வர முடியும்' என்று நினைத்திருந்தால் அதையும் தாண்டிப் பாதாளத்தில் பாய்கிறார்! அப்பா 'கிழத்தை' நாய், பேய் என்று ஏசுவதும் (அப்பா – செந்தில் அல்ல) அவர் மேல் காறித் துப்புவதும்... சகிக்கவில்லை!

கதைச் சம்பவங்கள் (மாறாத பிடிவாதம்!)

ப்ரீதாவின் மறுமணத்திற்கு அவர் மாமனார் பச்சைக்கொடி காட்டுவாரா என்பதை, அவருக்கு ஏற்கெனவே அறிமுகமான சத்யராஜும், கவுண்டமணியும் எப்படி அறிவார்கள்? நரிக்குறவர் போல் வேடமிட்டுச் சென்று அவரிடம் பேசி!

ப்ரீதாவை மறுமணம் செய்து கொள்ளத் துடிக்கும் வெளிநாட்டில் படித்த, கோடீஸ்வர இளைஞன் அவர் மனதை எப்படி மாற்றுவார்? ப்ரீதா வீட்டில் சமையல்காரனாக வேடமிட்டு!

இந்த வேடந்தாங்கல்கள் 'தமிழ் சினிமா மாறி வருவதாக நினைத்தோமே' என்று தலையிலடித்துக் கொள்ள வைக்கின்றன.

வாசு (சூப்பர் புரட்சிவீரர்!)

புதிய வார்ப்புகளெல்லாம் எப்போதோ வந்துவிட, விதவை மறுமணம் புதுமையல்ல! இருந்தும் நல்ல கருத்து என்று பாராட்டலாமென்றால் 'முகூர்த்தம் முடிந்து சாந்தி முகூர்த்தம் நடக்காத' இளம் விதவைகளே மறுமணத்திற்குத் தகுதி என்பது போன்ற 'பத்தினி' ஃபார்முலாவும், ஆங்காங்கே ஏற்படும் தொய்வுகளும், 'போங்கய்யா நீங்களும் உங்க அரைவேக்காட்டுப் புரட்சியும்' என்று சொல்ல வைக்கிறார்.

— ஜி

கல்கி இண்டர்நெட் முகவரி: www.kalkiweekly.com ஈ மெயில்: kalki@md2.vsnl.net.in



• மண் தோண்டப்பட்டதால் உண்டான பள்ளத்தில் நீர்!

பூந்தமல்லிக்கருகே

சென்னை பூந்தமல்லியிலிருந்து இருபது கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் ஊர்கள் 'திருமணம், திருமழிசை, வயலாநல்லூர்', அன்னம்பேடு, கருணாகரச்சேரி. ஒரு காலத்தில் பச்சைப் பசேல் என்று வயல்வெளியாய் இருந்த இந்தப் பகுதி இன்று சம்பல் பள்ளத்தாக்கு மாதிரி காட்சியளிக்கிறது. சாலையின் இரண்டு பக்கமும் பெரிய பெரிய பள்ளங்கள். ஆங்காங்கே தோண்டியெடுத்து குவியல் குவியலாய்ப் போட்டு வைத்திருக்கும் மணல் குன்றுகள். இப்பகுதியில் காளான் மாதிரி முளைத்து வரும் செங்கல் உற்பத்தியாளர்களின் கைவண்ணம்தான் இது. செங்கல் தயாரிக்கத் தோதாய் மண்ணும், நிலத்து மண்ணை விலைக்குத் தரத் தயாராய் விவசாயிகளும் கிடைத்துவிட, செங்கல் உற்பத்தியாளர்கள் இங்கே நிரந்தரமாய் டேரா போடத் துவங்கி விட்டார்கள். இதில் நம்மை மிகவும் வேதனைப்படுத்துகிற விஷயம் என்னவென்றால், இந்தப் பகுதி முழுவதுமே நன்கு பயிர் வளரக் கூடிய விளை நிலங்கள் என்பதுதான்.

ஒரு ஏக்கர் நிலத்தில், ஒரு அடி மண் தோண்டி எடுத்துக் கொள்ள ஐம்பதாயிரத்திலிருந்து ஒரு லட்ச ரூபாய் வரை கிடைக்கிறது. பிறகென்ன, உழுது, நாத்து நட்டு, தண்ணீர் பாய்ச்சி உரம் போட்டு, களை பறித்து கிடைக்கிற வருமானத்தைவிட இது எவ்வளவோ அதிகம் என்று விவசாயிகள் தங்கள் நிலத்து மண்ணை விற்கத் துவங்கி விட்டார்கள்.


"விளைநிலத்தில் மண் தோண்டக் கூடாது. எப்படிப்பட்ட நிலமாயிருந்தாலும் 3 அடிக்கு மேல் மண் தோண்டக் கூடாது" என்று அரசு விதிகள் சொன்னாலும், இந்தப் பகுதியில் யாரும் கண்டு கொள்வதாகத் தெரியவில்லை. 8 அடியிலிருந்து 15 அடி ஆழம் வரை மண் தோண்டி எடுக்கிறார்கள். இந்தப் பகுதிகள் முழுக்கப் பள்ளங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து சின்னச் சின்ன ஏரிகளாய் மாறி இருக்கின்றன. ரோட்டில் போகும்போது, இரண்டு பக்கமும் பள்ளங்களைப் பார்த்தால், கொடைக்கானல் மலையில் பிரயாணம் செய்கிற மாதிரி பிரமை.

நகர் மயமாதலைக் கண்டிக்கிற அமைப்புகளும், சுற்றுப்புறச் சூழல் பற்றிப் பேசுகிற அமைப்புகளும் இந்தப் பகுதியில் விளை நிலங்கள் பாழாகிக் கொண்டிருப்பதை, இது வரை கண்டு கொண்டதாகத் தெரியவில்லை. இதையெல்லாம் விடப் பெரிய கொடுமை, இந்த நிலங்களில் செங்கல் உற்பத்தியாளர்கள் வருவாய்த் துறை, சுரங்க மற்றும் கனிம வளத் துறையினரின் முழு பாதுகாப்புடன் இயங்கிக் கொண்டிருப்பதுதான். பக்கத்திலேயே சென்னை மாநகரம். நகரத்துக்குத் தேவையான

ஒரு சம்பல் பள்ளத்தாக்கு!

மொத்த செங்கலும் இங்கிருந்துதான் போகிறது. கோடிக்கணக்கில் புரள்கிற வியாபாரம். வருவாய்த்துறை அதிகாரிகளின் வருமானம் பற்றிச் சொல்ல வேண்டுமா. நிறைய அதிகாரிகள் இந்தப் பகுதிக்கு மாற்றலை விரும்பிக் கேட்டு வாங்கி வருகிறார்களாம்.

"120–க்கும் மேற்பட்ட செங்கல் உற்பத்தி நிறுவனங்கள் இருக்கின்றன. பூந்தமல்லி தொகுதி எம்.எல்.ஏ. சுதர்சனத்திற்கு மட்டும் சொந்தமாக நான்கு செங்கல் உற்பத்தி நிறுவனங்கள் இருக்கின்றன என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்" என்கிறார் பட்டாபிராமைச் சேர்ந்த ஒரு விவசாயி.



• வரதன்



• சந்தானம்

பூந்தமல்லி நுகர்வோர் பாது காப்புச் சங்க செயலாளர் நா. வரதன் நம்மிடையே பேசுகையில், "எங்க சங்கத்து மூலமா ஏற்கெனவே நிறைய மனு கொடுத்திருக்கோம். முதலமைச்சர் வரைக்கும் மனு போயிருக்கு. ஆனா, அரசுத் தரப்பிலிருந்து எந்த ரெஸ்பான்சும் இல்லை. கெடைச்ச வரைக்கும் லாபம்னு சுருட்டத்தான் நெனைக்கிறாங்களே தவிர, எந்த அதிகாரியும் நடவடிக்கை எடுக்கற மாதிரி தெரியலை. 1997, ஜனவரி மாதம் கலெக்டர் ஜெயஸ்ரீகிட்ட ஒரு மனு கொடுத்தோம். அவங்களும் அதும்போல நடவடிக்கை எடுத்தாங்க. ஆனா, உடனே வேற இடத்துக்கு மாற்றப் பட்டாங்க" என்கிறார்.

ஆங்காங்கே விவசாயம் செய்து கொண்டிருப்பவர்கள் கூட, பக்கத்து நிலத்துக்காரர்களைப் பார்த்து, தங்கள் நிலத்து மண்ணை விற்கத் துவங்கி விட்டார்கள். பக்கத்து நிலம் ஆழமாய்த் தோண்டப்பட்டவுடன் நிலத்து நீர் கீழ்மட்டத்துக்குப் போய் விடுவதும் ஒரு காரணம்.

'திருமணம்' கிராமத்தில் பாண்டிய மன்னன் சுந்தரபாண்டியன் காலத்தில் கட்டப்பட்ட புராதனமான ஈஸ்வரன் கோவிலும், சுந்தராஜ பெருமாள் கோவிலும் பராமரிக்கப்படாமல் வெறிச்சோடிக் கிடக்கின்றன.

"இந்தக் கோயிலுக்கு சொந்தமா 92 ஏக்கர் நிலம் இருக்கு. குத்தகைக்கு எடுத்த விவசாயிங்க இரண்டொருவரைத் தவிர யாரும் சரியா குத்தகைப் பணம் கொடுக்கறதில்ல. அதுலயும் 30 ஏக்கர் நிலத்து மண்ணைத் தோண்டித் தோண்டி வித்துட்டதுதான் கொடுமையான விஷயம். நாங்களும் அரசாங்கத்துகிட்ட இந்த நிலங்களை விக்கறதுக்கு அனுமதி கேட்டுப் பார்த்தோம். கிடைக்கலை. அப்படி வித்தாலாவது அதுல வர்ற காசுல கோயில நல்லா பராமரிக்கலாம். அரசாங்கமே இந்த நிலங்களை எடுத்துக்கிட்டு, ஏதாவது பணம் கொடுத்தால் கூடப் போதும். கோயிலுக்கும் சேராம, அரசாங்கமும் எடுத்துக்காம இடையில யாரோ சாப்பிட்டுப் போறதுதான் வேதனையா இருக்கு" என்கிறார் கோவில் தர்மகர்த்தர் சந்தானம்.

உலக வங்கியின் நிதி உதவியுடன், ஜப்பான் கூட்டுமுயற்சியில் 400 அடி ரோடு ஒன்று மீஞ்சூரிலிருந்து, வண்டலூர் வரை போடப் போவதாக அரசு அறிவித்தது. அரசு நிலத்தை எடுத்துக் கொண்டால் வருமானம் போய் விடும் என்று பயந்து இப்போதே நிலத்து மண்ணை விற்க ஆரம்பித்து விட்டார்கள் விவசாயிகள். ரோட்டின் இரண்டு பக்கமும் படு பாதாளமாய்க் காட்சி அளிக்கிற பரிதாபம்.

கருணாகரச்சேரியைச் சேர்ந்த பாரத இளைஞர் நற்பணி மன்றத்தினர், சமீபத்தில் முதலமைச்சர் தனிப்பிரிவின் சிறப்பு அதிகாரிக்கு ஒரு மனு கொடுத்திருக்கிறார்கள். அதன் சுருக்கம்:

"ஐயா, எங்கள் ஊரைச் சுற்றிப் பள்ளம் தோண்டித் தோண்டி எங்களுக்குச் சொந்தமான சுடுகாடு எங்கிருக்கிறது என்றே தெரியவில்லை! தயவு செய்து அடையாளம் காட்டுங்கள்!"

— கே. பாலசுப்ரமணியன்

படங்கள்: ஆர். வேல்முருகன்

கிரீடம் சூடிய சென்னைக்கிளி!

மிஸ். யுனிவர்ஸ், மிஸ் வோர்ல்டு போலவே ஆண்டுதோறும் ஜப்பானில் நடத்தப்படும் அழகிப் போட்டியில், உலக நாடுகள் பலவற்றிலும் இருந்து அழகிகள் கலந்து கொள்கிறார்கள். வெற்றி பெறும் அழகிக்கு 'மிஸ் இன்டர்நேஷனல்' என்ற கிரீடம் சூட்டப்படுகிறது. சமீபத்தில் நடந்த இவ்வாண்டுக்கான மிஸ். இன்டர்நேஷனல் அழகிப் போட்டியில் சென்னையைச் சேர்ந்த ஓர் அழகி கலந்து கொண்டார். மூன்றாம் இடம் பெற்றார். அவர் பெயர் ஸ்வேதா ஜெய்சங்கர். சென்னை எத்திராஜ் கல்லூரியில் மூன்றாம் வருடம் பி.ஏ. மாணவி.

அழகான கண்கள். தீர்க்கமான மூக்கு. நல்ல உயரம் (ஐந்தடி பதினோரு அங்குலம்) அம்மா டாக்டர். அம்மாவும் அப்பாவும் இணைந்து ஒரு மருந்து தயாரிக்கும் கம்பெனி நடத்துகிறார்கள். (அவர்களிடமிருந்து வந்ததுதான் இந்த உயரம்) வீணை வாசிக்கத் தெரியும், பரதம் தெரியும், டென்னிஸ், பாஸ்கட் பால் (உயரத்தின் சௌகரியம்) விளையாடுவார். நிறைய படிப்பார்; டீவி. பார்ப்பார். இதுதான் ஸ்வேதா.

"அழகிப் போட்டியில் வென்றபோது எப்படி இருந்தது ஸ்வேதா?"

"ஓ! வாட் எ மெமரபிள் மொமண்ட்! வானத்தில், மேகங்களுக்கிடையே மிதப்பது போல உணர்ந்தேன். அந்த சந்தோஷத்தின் தாக்கம் இன்னமும் கூட என்னைவிட்டு விலகவில்லை."

முகத்தில் சந்தோஷச் சிரிப்பு.

"உங்கள் பெற்றோரின் ரியாக்ஷன் என்ன?"

"டோக்கியோவில் மாலை ஐந்து மணிக்கு அழகிப் போட்டி ஆரம்பம். மூன்று மணி நேரம் நிகழ்ச்சி. நான் தோல்வியடைந்தால், எட்டு மணிக்குப் போன் பண்ணுகிறேன். ஜெயித்தால், அதனைத் தொடர்ந்து இன்னும் ஒரு மணி நேரம் போல் நிகழ்ச்சி இருக்கும் என்று என் பெற்றோரிடம் சொல்லி வைத்திருந்தேன். நான் மூன்றாமிடம் பெற்று, கிரீடம் கிடைத்ததால், போன் பண்ண முடியவில்லை. ஆக நான் போன் பண்ணி, ஜெயித்த விஷயத்தைச் சொல்லாமலேயே, என் பெற்றோர்களுக்கு விஷயம் தெரிந்து விட்டது. லேட் நைட் போன் செய்து தகவலை உறுதிப் படுத்தினேன்."

"என்ன உடை அணிந்து கொண்டீர்கள்?"

"முதல் ரவுண்டில் அந்தந்த நாட்டுப் (மொத்தம் 45 நாட்டுகளிலிருந்து அழகிகள் வந்திருந்தனர்) பாரம்பரிய உடை. நான் வித்தியாசமாக, சரித்திரப் புகழ் வாய்ந்த ஜான்ஸி ராணி போலப் பிரத்யேகமாய் வடிவமைக்கப்பட்ட உடையை அணிந்து, கையில் நீண்டதொரு வாள் ஏந்தி, நடந்து சென்றபோது, எனக்குப் பெருமை பிடிகொள்ளவில்லை. அடுத்த ரவுண்டு, நீச்சலுடை ரவுண்டு. மூன்றாவது ரவுண்டில், மாலை நேரத்து உடை. எனக்கு மிகவும் பிடித்த ஜெய்ப்பூர் நகரத்துக்குரிய பிங்க் நிறத்தில், கவுன் போல, பிரத்யேகமாய் வடிவமைக்கப்பட்ட உடையை அணிந்து சென்றேன்."

"அழகிப் போட்டியில், புத்திசாலித்தனத்தைச் சோதிக்கும் கேள்விகளைக் கேட்டார்களா?"

"அந்த விதத்தில், இந்தப் போட்டியில் போலித்தனம் எதுவுமில்லை. மறு பிறவியில் யாராகப் பிறக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள்?" என்று கேட்பதும், "அன்னை தெரசாவாக" என்று பதிலளிப்பவர் வெற்றி பெறுவதும், போட்டியில் வெற்றி பெற்றால், "பரிசுத் தொகையை என்ன செய்வீர்கள்?" என்றால், "அனாதைக் குழந்தைகளுக்குக் கொடுப்பேன் என்று பொய் சொல்லுவதுமான போலித்தனம் இல்லாமல், நடுவர்கள் தனித்தனியே பங்கேற்பவர்களிடம் பேசினர். அவர்கள் என்ன மாதிரி நபர் என்று தெரிந்து கொண்டு மதிப்பீடு செய்தனர்."

"அழகிப் போட்டி வெற்றியை, சினிமாப் பிரவேசத்தின் முதல் படி என்று சொல்லலாமா?"

"நோ... நோ.. அதில் எனக்கு உடன்பாடு கிடையாது. எனக்கு சினிமா பார்க்கப் பிடிக்கும் என்றாலும், சினிமாவில் நடிப்பதற்கு எனக்குச் சிறிதும் விருப்பமில்லை."

"இப்படித்தான் முதலில் எல்லாரும் சொல்வார்கள். சான்ஸ் வந்தால்..."

"நெவர்! நான் சினிமாவில் நடிக்க ஒரு போதும் சம்மதிக்க மாட்டேன். வேண்டுமானால், ஸ்டாம்ப் பேப்பரில் எழுதி, கையெழுத்துப் போட்டுத் தரட்டுமா?"

குரலில் செல்லக் கோபம். "நான் இப்போதும் சென்னையின் முன்னணி மாடல்தான். நல்லி, குமரன், கோ-ஆப்டெக்ஸ், சன்ரைஸ் காப்பி, பிரின்ஸ் ஜுவல்லரி என்று நிறைய விளம்பரங்களுக்கு மாடலிங் செய்திருக்கிறேன்."

"முதல் மாடலிங் வாய்ப்பு எப்படி வந்தது?"





"நான் முதலில் தோன்றியது ஒரு கம்ப்யூட்டர் நிறுவனத்தின் பத்திரிகை விளம்பரம். திடீரென்று எங்கள் கல்லூரி மாணவி ஒருத்தி, 'ஒரு விளம்பரத்துக்காக மாடல் தேடிக் கொண்டிருக்கிறார் என் அப்பா! நீங்கள் அதற்குப் பொருத்தமாய் இருப்பீர்கள்' என்று கூறி அழைத்தார். நான் அந்தப் புதிய அனுபவத்துக்குச் சம்மதித்தேன்."

"மாடலிங் துறையில் தொடருவீர்களா?"

• வலது கோடியில் ஸ்வேதா

"ஆறு மாதத்தில் டிகிரி முடித்து விடுவேன். அப்புறம் ஒரு வருஷம் சீரியஸாய் மாடலிங். அத்துடன் குட்பை சொல்லிவிட்டு, எம்.பி.ஏ. படிக்கப் போகிறேன். மார்க்கெட்டிங் அண்டு ஃபைனான்ஸில் ஸ்பெஷலைஸ் செய்யப் போகிறேன்."

"ஸ்வேதா! சுஷ்மிதா சென், ஐஸ்வர்யா ராய், டயானா ஹேடன் மூவரில் உங்களைக் கவர்ந்தவர் யார்?"

"ஜப்பானில் நடந்த அழகிப் போட்டிக்கு அனுப்ப இங்கே ஒரு தகுதிப் போட்டி நடக்கும். அது சண்டிகரில் நடந்தபோது, நடுவர்களில் ஒருவர் சுஷ்மிதா சென். அவருடன் பேசிய போது, பழக அன்பானவர் சுஷ்மிதா என்று தெரிந்தது. டோக்கியோவில் நான் வெற்றி பெற்றபோது எனக்குக் கிரீடம் சூட்டினவர் டயானாதான். ஆனால், அழகுன்னா அது ஐஸ்வர்யாதான். அதுவும் 'ஐஸ்'ஸின் 'Eyes' - ஓ! வாவ்!" ●

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**

அட்டை வண்ணப்படம், படங்கள் : **ஸ்ரீஹரி**

"மனிதர்களுக்குத்தான் ஓய்வு;

டென்ஷன்... டென்ஷன்... படு டென்ஷன்! சாப்பிடக் கூட நேரம் இருக்காது. தீபாவளிக்கு பத்துப் பதினைந்து நாட்களுக்கு முன்பிருந்து துவங்கும் பிஸியான வியாபாரம், தீபாவளிக்கு அடுத்த நாளில் எப்படி இருந்தது? கடைகள் காற்றாடினவா..?
ஸேல்ஸ்மேன்களும், வுமன்களும் 'ராசிபலனை'ப் படித்துப் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தார்களா? வியாபாரப் பிரபலங்களையும் ஒரு தையல்காரரையும் சந்தித்தோம்.

சுகுமாரன்: (லலிதா ஜுவல்லரி)

தீபாவளி அன்றுகூட கண்டிப்பாய்க் கடை உண்டு. சில ஸெண்டிமெண்ட்ஸ் காரணமாக அன்று மாப்பிள்ளைகளுக்கு நகை வாங்கித் தரும் மாமனார்களும், மனைவிக்கு நகை போட்டு அழகு பார்க்கும் கணவன்மார்களும் விசிட் செய்வார்கள். தீபாவளிக்கு அடுத்த நாள் அரை நாள் விடுமுறை. நகை வியாபாரம் என்பது தீபாவளியுடன் நேரடியாக சம்பந்தப்பட்டது கிடையாது. அந்த சமயத்தில் மக்களிடம் பணப் புழக்கம் இருக்கும். சிலர் தங்கத்தில் முதலீடு செய்வார்கள். அவ்வளவுதான். போன வருடத்தைவிட இந்த வருடம் விற்பனை பிரமாதம். தீபாவளிக்கு ஒரு வாரத்திற்கு முன்பே ஊழியர்களுக்கு போனஸ் கொடுத்து விட்டோம்!

* ஆறுமுகம்

வசந்தகுமார் (வசந்த் அண்ட் கோ)

தமது புதிய மூன்று மாடி ஷோரூமை, இன்னமும் அழகூட்டுவது எப்படி என்று யோசித்துக் கொண்டிருந்த வசந்த், நாம் கேள்வியைக் கேட்டதும் படபடத்தார். ''மனிதர்களுக்குத்தான் ஓய்வு. நிறுவனங்களுக்குக் கிடையாது. எங்கள் நிறுவனங்கள் திறந்தே இருக்கும்! இப்போதுதான் போட்டி போட்டுக் கொண்டு மக்கள் மின்னணு சாதனங்

* சுகுமாரன்



நிறுவனங்களுக்குக் கிடையாது!"

களை வாங்கிக் குவிக்கிறார்களே! தீபாவளிக்கு அடுத்த நாள் வியாபாரம் கொஞ்சம் குறைந்ததே தவிர கவலைப் படும் அளவுக்கு இல்லை.. ஆனால், விடுமுறை எடுத்துக் கொள்ளும் ஊழியர்களை நான் தடுக்கவில்லை.''

பி.ஆர். சுப்பிரமணியன் (குமரன் சில்க்ஸ்)

துணி வியாபாரம் வருடத்திற்கு 300 நாள் பிஸியாகவே இருக்கும். தீபாவளியைத் தொடர்ந்து கல்யாண ஸீஸன்களை கட்டுவதால் கடை தொடர்ந்து திறந்தே இருந்தது. ஊழியர்களுக்கு ரொட்டேஷனில் விடுமுறை கொடுத்தோம். மார்வாரிகள் லட்சுமி பூஜைக்கு பட்டுப் புடைவைகள் எடுப்பார்கள். தீபாவளிக்கு அடுத்த நாள் அமாவாசை வருவதால் அன்று திருமணத்திற்குச் சிலர் துணி எடுத்தார்கள். எனவே விடுமுறை என்பது மூச்... வியாபாரம் கொஞ்சம் முன்னே... பின்னே இருக்கலாம், அவ்வளவுதான்!

ஆறுமுகம் (தையல்காரர்)

நம்ம பொழைப்பு கொஞ்சம் கஷ்டம் தாங்க. தீபாவளிக்கு இரண்டு மூன்று நாட்கள் முன்பிருந்தே இராவெல்லாம் வேலை செய்ய வேண்டியிருந்தது. தீபாவளி அன்று காலை எண்ணெய் தேய்த்துக் குளித்துவிட்டு வந்து உடைகளை வாங்கிச் செல்பவர்களும் உண்டு. பெரும்பாலான தீபாவளி நாட்களில் எங்களுக்கு குளிக்கக் கூட நேரம் கிடைக்காது. அதற்கு அடுத்த நாள் என்னை மாதிரி ஓனர்கள் கடையைத் திறந்து வைத்துக் கொண்டு உட்கார வேண்டும். ஏனென்றால், விடுபட்டுப் போனவர்கள் வருவார்கள். தீபாவளிக்கு ஒரு செட்டைத் தைக்கக் கொடுத்தவர்கள் தைக்காமல் வைத்திருந்த இன்னொன்றைக் கொடுக்க வருவார்கள். வருடா வருடம் இப்படித்தான் கடை ஓடுது. ஆனால் வேலையாட்களுக்கு தீபாவளி வேலை முடிந்து செல்லும்போது திருப்தியாகப் பணமும் கொடுத்து விடுமுறையும் கொடுத்து அனுப்புவோம். ஒரு வாரம் வரை அவர்கள் விடுப்பு எடுத்துக் கொள்வார்கள்!

— ஸ்ரீநிவாசன்

படங்கள்: ஸ்ரீஹரி



• வசந்தகுமார்

• சுப்பிரமணியன்

சிரிக்காவிட்டால் அபராதம்! (அல்லது)

"சென்னை நகரில் ஆடு, மாடு, பன்றிகளைத் தெருவில் திரிய விடக் கூடாது. மீறினால் ஐயாயிரம் ரூபாய் வரை அபராதம் அல்லது இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனை. உரியவர் வரும்வரை குறிப்பிட்ட மிருகம் காவலில்"

— செய்தி






சிறை தண்டனை!
சட்டம் செல்லுபடியாகலே.
அதனால அண்ணா சாலையிலே ஐந்து லேன்களா மாத்திட்டாங்க!
இப்போ என் மாட்டை எவன் பிடிக்கிறான்னு பார்க்கிறேன்!
காதலர் சிறை
காதலர் சிறையா? அதென்ன?
எருதுகளையும் பசு மாடுகளையும் ஒரே லாக்கப்பில் அடைக்கிறாங்க!
இந்த சோடுவோட மாடு மட்டும் எப்படியோ தப்பிச்சுருச்சு!

ஒரு படத்தின் பிரதி சென்சார் ஆபீசுக்குப் போய், தணிக்கை செய்யப்படும்போது, எப்படியெல்லாம் முடிவுகள் எடுக்கிறார்கள்...? இதோ சில உதாரணங்கள் :

கட் கட்!



• அறுபதுகளில், இருந்த அந்த சென்சார் அதிகாரி நல்ல மனிதர்; கடமையில் ஸ்டிரிக்ட்டானவர். சினிமாக்காரர்களுக்கு அவர் மீது மிகவும் மரியாதை. நாகேஷ் நடித்த ஒரு படத்தைப் பார்த்தார் அவர். அந்தப் படத்தில், நாகேஷுக்கு திக்குவாய் கேரக்டர். படம் முடிந்து, ஓ.கே. ஆகி விட்டது. நாகேஷும் அப்போது அங்கே வந்திருந்தார். சென்சார் அதிகாரி, "நாகேஷ்! நான் உங்கள் ரசிகன். இந்தப் படத்தில் உங்கள் கேரக்டரில் நகைச்சுவை இருந்தாலும், அதனை என்னால் ரசிக்க முடியவில்லை. திக்கித் திக்கிப் பேசினீர்களே... உண்மையில் திக்குவாய் இருப்பவர்கள், அதைப் பார்த்தால், தங்களைக் கேலி செய்வதாய் நினைத்து, மனம் புண்பட மாட்டார்களா? அல்லது, படம் பார்ப்பவர்கள், திக்குவாய்க்காரர்களிடம் போய் இது போலப் பேசிக் காட்டினால் அவர்கள் மனசு வேதனைப்படாதா? நட்பு முறையில் இதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்" என்றார்.

நாகேஷ் நெகிழ்ந்து போனார். இனி அப்படி யார் மனமும் புண்படாதபடி பார்த்துக் கொள்ளுவதாய்க் கூறினார்!

• அந்த சீனியர் இயக்குனரின் டைரக்ஷனில் பெண்கள் பிரச்னையைச் சொல்லும் படம். பல பிரச்னைகளால் பாதிக்கப்பட்ட பெண்கள் சிலர் ஒன்றாய் வசிக்கிறார்கள். பொருளாதார நெருக்கடி தாக்கிய சூழ்நிலை என்றாலும் அவ்வப்போது தமாஷ், கேலி, கிண்டல் என்று அவர்களுக்குள்ளே உண்டு. அப்படித்தான், பெண்களின் உள்ளாடையை, ஒரு சங்கேதப் பெயரால் அவர்கள் குறிப்பிட்டுக் கொள்ளுவார்கள். படம் சென்சாருக்கு வந்தது. உள்ளாடையை சங்கேதப் பெயரில் குறிப்பிட்டது விதிகளின்படி ஆட்சேபகரமானதில்லை என்பது படம் பார்த்த உறுப்பினர்களுடைய கருத்து. எனவே அனுமதிக்கப்பட்டு விட்டது. ஆனால், ஒரு பெண் உறுப்பினர் டைரக்டரிடம் கேட்டுக் கொண்டதன் பேரில் சங்கேத வார்த்தை நீக்கப்பட்டது. "அந்த சங்கேத வார்த்தையை, பஸ்களிலும், பொது இடங்களிலும் பயன்படுத்தி பெண்களை கேலி செய்ய வாய்ப்பு உண்டு" என்பதைச் சுட்டிக் காட்டியதால் டைரக்டரும் அந்தக் கருத்தை மதித்துச் செயல்பட்டார்.

• வழக்கமாக, ஒரு மொழியில் வெளி வந்த படம், வேறு மொழிக்கு டப் செய்யப்படும்போது, ஒரிஜினலில் இருந்த காட்சிகள் அனைத்தும் டப்பிங் படத்திலும் இடம் பெறுவதே மரபு. ஆனால் 'பம்பாய்' படம் விதிவிலக்கு. சமூகவிரோதிகளால் தீ வைக்குக்



• 'பம்பாய்' இது வெட்டுப்படாத காட்சி!)





கொளுத்தப்படும் வீட்டினுள் ஊனமுற்ற பெண் ஒருத்தி சிக்கி, மரணமடைவதாக ஒரு காட்சி. தமிழில் இது அனுமதிக்கப்பட்டாலும், இந்தியில் கட்! காரணம், மும்பையில் கலவரங்கள் நடந்தபோது, உண்மையில் இப்படி ஒரு சம்பவம் நடந்தது. அதை நேரடியாய் திரையில் காட்டினால், அப் பெண்ணின் சமூகத்தாரை மீண்டும் தூண்டக்கூடும். சில பிரச்னைகள் எழலாம் என்று சென்சார் போர்டு கருதியதால், இந்த முடிவு. அதனை டைரக்டரும் ஏற்றுக் கொண்டார்.

● அரசாங்க இயந்திரத்தைக் கடுமையாகக் குறை கூறிய அந்தப் படத்தில் நிறைய வெட்டுகள் விழும் என்று எதிர்பார்த்தார்கள்... ஆனால் படத்தைப் பார்த்த சென்சார் போர்டு பிராந்தியத் தலைவர், சின்ன கட் கூட சொல்லாமல், 'யு' சர்டிபிகேட் கொடுத்தது மட்டுமின்றி டைரக்டர் பாலசந்தரிடம் இப்படி ஒரு நல்ல படம் எடுத்ததற்காகப் பாராட்டவும் தவறவில்லை! அந்தப் படம் தண்ணீர் தண்ணீர்!

● சமீபத்தில் ஹிட்டான கிராமத்துப் படம். இரட்டைப் பிறவியான பெண்களை, பெண் பார்க்க வரும் மாப்பிள்ளை, "என்ன ஒரு பெண்ணைக் கட்டிக்கிட்டால் இன்னொண்ணு இலவசமா?'' என்று கமெண்ட் அடிப்பார். ஒரு பெண் உறுப்பினர் இந்த வசனத்தை ஆட்சேபித்தார். டைரக்டர் தரப்பில், ஒரு நகைச்சுவைக்கான பஞ்ச் டயலாக்தான் அது. அந்தக் காட்சியில் இருதார மணத்தை ஆதரிக்கவில்லை' என்றெல்லாம் வாதாடினார்கள்! பயனில்லை. கடைசியில் டயலாக் கட்!

● தேசியப் பிரச்னையொன்றைத் தொட்டுக் காட்டிய படம். ஒரு ராணுவ அதிகாரிக்கு முக்கியத்துவம் கொடுத்து எடுக்கப்பட்ட காட்சி. படு டென்ஷனான தருணம். ராணுவ ஆபீசர் சிகரெட் பிடிப்பார். புகையை ஊதியபடி குறுக்கும், நெடுக்குமாய் நடப்பார். இந்தக் காட்சியை லோக்கல் சென்சார் அனுமதித்து விட்டாலும், ராணுவத் தரப்பிலிருந்து ஆட்சேபணை வந்தது. ராணுவ அதிகாரி, டியூட்டியில் இருக்கிறபோது, சிகரெட் பிடிக்கக் கூடாது என்கிற விதி சுட்டிக் காட்டப்பட்டது. காட்சி கட்! ◉

(படம் ரோஜா : அதிகாரி நாசர்!)

— பாரதி

"டாக்டர் ஊசி கட்டாயம் போட்டுத்தான் ஆகணுமா?''

"ஊசி போடாம, நூறு ரூபாய் ஃபீஸ் கேட்டா, கொடுக்க உங்களுக்கு மனசு வருமா?!''

— யமுனா ரெங்கநாதன்



முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சாரியார்

தெய்

ருக்மிணியினுடைய ஹ்ருதயத்திலே பகவான் தன்னுடைய ரூபத்தைத் தானே எழுதிவிட்டான். கிருஷ்ணனை ருக்மிணி பார்க்கவேயில்லை. பார்க்காவிட்டாலும் ரூபம் ஹ்ருதயத்திலே வந்து விட்டதே! அவனைப் பற்றி கேட்டுக் கேட்டே வந்து விட்டது! ஆகையினால், பகவான் சங்கல்பித்தால் அவன் எதை வேண்டுமானாலும் பண்ணுவான். அவன் நினைத்தால் எதை வேண்டுமானாலும் பண்ண முடியும். நாம் ஒன்றைச் செய்ய நினைத்தால் பல விதிமுறைகளுக்குட் பட்டுத்தான் செய்ய முடியும். அவனோ சர்வ சுதந்த்ரன். ஆகையால் விதிமுறைகளை மீறியும் அவனால் செயல்பட முடியும்.

அப்படி அவன் சில இடங்களில் செயல்பட்டதை ஆசார்யர்கள் உகந்து, "நீ ஏன் அவ்வாறு பண்ணினாய்?" என்று கேட்கிறார்கள். அதற்கு அவன் பதில் சொல்லாமலே கூட இருக்கிறான். அதன் மூலம் அவன் சுவதந்தரத்தைக் காட்டுகிறான். அவனை விசேஷமாகப் பற்றக் கூடியவர்களிடத்திலே அவனுக்கு அதிகமாகப் பற்று ஏற்படுகிறது. 'என்ன ஆனாலும் சரி' என்று அவன் திருவடியைப் பிடித்துக் கொள்கிறார்கள் பாருங்கள்... அவர்கள் விஷயத்தில் அவனுக்கு இருக்கிற காருண்யத்தைச் சொல்லி முடியாது!

ஒரு விசேஷம் - இந்த கிருஷ்ணாவதார

81

காலத்திலே, பகவான் பல இடங்களிலே தேடி ஓடியும் வெண்ணெய் கிடைக்கவில்லையாம் அவனுக்கு.

அஸ்தமன நேரத்தில் ஒரு கிரஹத்துக்கு வந்து அந்த கிருஹத்தைத் திறந்து பார்க்கிறான்...

அதற்குள்ளே கோபஸ்த்ரீகளெல்லாம் யசோதையிடத்துப் போய்ச் சொல்லி 'உன் பிள்ளை எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு போய் விட்டான்- இதோ இந்தத் தெரு வழியே தான் ஓடினான்- என்று சொல்கிறார்கள்.

உடனே யசோதையும் கோபிகைகளும் கிருஷ்ணனைத் தேடிக் கொண்டு ஓடி வருகிறார்கள்.

பரமாத்மா கிடுகிடுவென்று ஓடி, ஒரு வீட்டுக்குள் புகுந்தானே... அங்கே...

எம்பெருமானுக்கென்று எடுத்து வைத்து எடுத்து வைத்து... பானை பானையாக வெண்ணெய். அப்படியப்படியே இருக்கிறது! அந்த வீட்டு எஜமானன் ததிபாண்டன், பகவானுக்கென்று இன்றைக்குத் தயிர் எடுத்து வைப்பான்... ஆனால் பரமாத்மா வரமாட்டான். மறுபடியும் மறுநாள் எடுத்து வைப்பான்- அப்போதும் பரமாத்மா வர மாட்டான்...

தயிருக்கு ஒரு விசேஷமிருக்கிறது- தயிரால் ஹோமம் பண்ணவேண்டும் என்று சாஸ்திரத்திலே சொல்லியிருக்கிறது. அதனால் நரசிம்ஹனுக்குக் கூட தினமும் தயிரால் ஹோமம் நடக்கிறது. பாலால் ஹோமம் பண்ண வேண்டும். தேனால் ஹோமம் பண்ண வேண்டும். நெல்லால் ஹோமம் பண்ண வேண்டும்... என்று எல்லா தானியங்களையும் வேதம் குறிப்பிடுகிறது. ஏனென்றால் எல்லா தானியங்களும் உலகத்திலே எப்போதும் கிடைக்க வேண்டும். அதன் பொருட்டு அந்த எம்பெருமானுக்கு அது விநியோகமாக வேண்டும்.

- இங்கே, அவதார காலத்திலே பகவான் நேரே தயிரைச் சாப்பிடுகிறான். முழுவதும் வெண்ணெய் அனைத்து தொட்டுண்ணும் வெண்தயிர்



ன்றுமில்லை

சோர்ந்த செவ்வாயும் அழுதையும் அஞ்சி நோக்கும் அந்நோக்கும்...

யசோதை வந்து அவன் காதைப் பிடித்துக் கொண்டு விட்டாள். வாயில் தயிர் தோய்ந்திருக்கிறதாம். வெண்ணெயை முழுங்கி விட்டது குழந்தை! 'அம்மா என்ன செய்வானோ' என்று அவளைப் பார்த்து அஞ்சி பயப்படுகிறதாம்!- அஞ்சி நோக்கும் அந்நோக்கும்!

அவனைப் பிடித்துக் கட்ட வேண்டும் என்று வந்தவள் அவனிடத்திலே கட்டுண்டாள். என்ன ஏற்பட்டது அவளுக்கு...? தொல்லை இன்பத்தின் இறுதி கண்டாளே! யசோதை தன் ஆனந்தத்தின் முடிவைக் கண்டாள்! ஆனந்த மயமான எம்பெருமானை நேரே அனுபவிக்கக் கொடுத்து வைத்தாளே அவள்.





அருள்வாக்கு

நல்ல ஸத் விஷயங்களில் பிடிமானம், படிப்பு, பயிற்சி, பக்தி, பூஜை, த்யானம் உள்ளவர்களைத் தவிர மற்ற பெரும்பாலாரின் மனஸு கெட்டதுகளில் போகாமல் தடுப்பதற்குச் சரீர உழைப்புதான் ஸாதனமாகிறது. நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு ஏதோ எழுதுகிறோம். யோசனை பண்ணுகிறோமென்றால்

– இவ்வாறு பரமாத்மாவின் அவதார காலத்திலே, எப்போதும் வெண்தயிர் அவன் வாயிலே இருந்து கொண்டே இருக்குமாம்.

அதனால் குழந்தை கிருஷ்ணனுக்கு என்று தினமும் தயிர் எடுத்து வைத்தார்கள் அந்த வீட்டிலே. ஒரு நாள் கூட அவன் வராததால் தயிர், பானை பானையாகச் சேர்ந்து போய் கிடக்கிறது. இப்போது, குழந்தை பயந்து கொண்டு ஓடி வருகிறது! எங்காவது ஒளிந்து கொள்ள இடம் கிடைக்காதா என்று அந்த வீட்டிலே நுழைந்து தேடுகிறது. ஒவ்வொரு பானையாகத் தேடிப் பார்த்துவிட்டு, காலியாக இருந்த ஒரே பானைக்குள் குதித்து ஒளிந்து கொள்கிறது.

இந்தக் கதையை நான் முன்பே சொல்லியிருக்கிறேன்... அந்த வீட்டு எஜமானன் ததிபாண்டன், கிருஷ்ணன் ஒளிந்து கொண்ட பானைமீது ஏறி அமர்ந்து, அவனை ஒளித்து வைத்ததையும், யசோதை அவனைத் தேடி வந்தபோது 'கிருஷ்ணன் இங்கு வரவேயில்லை' என்று பொய் சொன்னதையும் அப்படி அவன் பொய் சொன்ன போதிலும் அதிலிருந்த விசேஷ தர்மம் கருதி அவனுக்கு அவன் விரும்பிய மோட்சத்தை பகவான் அருளியதையும்; அவனோடு சேர்ந்து, அவனை மறைத்த பானையும்கூட மோக்ஷத்தை அடைந்ததையும் சொல்லியிருக்கிறேன். 'ததி பாண்ட மோக்ஷதாயினே நம': என்று நாமாவளிகூட உண்டு!

தர்க்க சாஸ்திர ரீதியாக நமக்கெல்லாம் பானை என்றே பெயர். யாராவது தர்க்க சாஸ்திரம் படித்தவர்கள் பேசினால், 'இன்றைய தினம் ஆஸ்திக சமாஜத்துக்கு உபன்யாசம் கேட்க எத்தனை கடங்கள் வந்திருந்தன...?' என்று கேட்பார்கள்!

பானைக்கு உண்டான குணமெல்லாம் நமக்கும் இருக்கிறது – அதிலே ஜலத்தை நிரப்பலாம்; உடலிலேயும் ஜலம் நிறைந்திருக்கிறது. அதிலேயும் மண்– இதிலேயும் மண்! அதிலும் ஆகாசம் இருக்கிறது; இதிலும் ஆகாசம்... கடாகாசம் என்று பெயர். அதுவும் சூடு! இதுவும் சூடு! அதிலே என்னென்ன உண்டோ... இதிலே அத்தனையும் இருக்கிறது!

அசித் பதார்த்தங்களிலேயே ரொம்ப தத்வார்த்தம் பெற்றதாகயிருக்கிறது பானை!

ஆச்ருத பரதந்த்ரனான பரமாத்மா அசித் பதார்த்தங்களுக்குக்கூட மோட்சத்தைக் கொடுக்கக் கூடியவன்.

அப்படிப்பட்ட காருண்யம்மிக்கவனான பரமாத்மாவின் வடிவழகிலே ஈடுபட்டு அவன் திருவடியை ஆச்ரயிக்கக் கூடிய எந்த பதார்த்தமானாலும் உயர்ந்த கதியை அடைந்துவிடும். அப்படிப்பட்ட வள்ளல் அவன் என்பது கிருஷ்ணாவதாரத்திலும் தெரிகிறது; ராமாவதாரத்திலும் தெரிகிறது.

அதனால் அந்தந்த அவதாரத்தைச் சொல்லி, அந்தத் திருவடியிலே நாம் நிலைத்தோமானால், சித்தத்துக்கு அவலம்பனம். ரூபத்தோடு இருக்கிற பரமாத்மாவின் வடிவழகு மிகவும் விசேஷமானது என்று காட்டித் தருகிறான்– அதுதான் சுபாஷ்ரயத்வம் என்கிற குணம்.

இதைத்தான் ஈசாவாச்ய உபநிஷத்தில் சொல்லியிருக்கிறது.

ஆசார்யர்கள் சொல்கிறார்கள்– பகவானைத் தவிர வேறு எந்த விஷயத்தை நாம் அனுபவித்தாலும் மீதி எந்த வஸ்துவினிடத்திலே போனாலும் அதிலே ஏழு விதமான தோஷங்கள் இருக்கின்றன. பகவானிடத்திலே மட்டும்தான் தோஷம் கிடையாது. அவனை விட்டு மற்ற விஷயங்களில் போய் முனைந்தோமா

அப்போதும் மனஸ் அது பாட்டுக்கு அவ்வப்போது இதை விட்டுவிட்டு ஓடிக் கொண்டுதானிருக்கும். அதுவே சரீரத்தால் கார்யம் செய்கிறோமென்றால் அப்போது அப்படிப்பட்ட கார்யத்திலேயே மனஸ் அதிகம் ஈடுபட்டுவிடுகிறது. அதனால் கண்ட கண்ட நினைப்புகளுக்கு ஓடாமலிருக்கிறது. இது 'நெகடிவ்'தான் என்று ஒப்புக் கொள்கிறேன். அதாவது சரீர உழைப்பால் சித்தம் கெட்டதில் போகவில்லையே தவிர, நல்லதில் ஈடுபட்டு உத்தம அநுபவங்களைப் 'பாஸிடிவ்' ஆகப் பெறவில்லைதான். ஆனால் முதலில் இந்த நெகடிவ் ஸ்டெப்பில் அடி வைத்துத்தான் பாஸிடிவுக்குப் போயாக வேண்டியிருக்கிறது. ஆசாரியாள் அதனால்தான் முதலில் கர்மாநுஷ்டானம், அப்புறம் இதனால் ஏற்படும் சித்தசுத்தியினால் மனஸ் உத்தமமாகவே போகிற பக்தி, அதற்கப்புறம் மனஸே போய்விடுகிற ஞானம் என்று படிவரிசை போட்டுக் கொடுத்தார்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

னால், ஏழு தோஷங்கள் சம்பவிக்கின்றன. என்ன ஏழு தோஷங்கள்..? அல்பத்வம், அஸ்திரத்வம், துக்க மூலத்வம், துக்க மிச்ரத்வம், துக்கோதர்கத்வம், துக்க மூல மஹாவிஸர்ஜனத்வம்; சுவாபாவிக ஆனந்த விருத்தத்வம்.

பகவானைத் தவிர்த்த மற்றைய விஷயங்களை நாம் அனுபவிக்கிறபோது இந்த ஏழு தோஷங்கள் சம்பவிக்கிறது! பகவத் விஷயத்திலேதான் தோஷம் என்பதே கிடையாது.

முதல் தோஷமான அல்பத்வத்தை எடுத்துக் கொள்வோம். பகவான் தவிர்த்த மற்ற அனைத்துமே அல்பம்தான். தர்ம, அர்த்த காம, மோக்ஷங்கள் இருக்கின்றனவே.. அவை கூட அல்பம்தான்! இவற்றைக்கூட அல்பம் என்று தள்ளி வைத்துவிட்டு அவனையே ஆச்ரயிக்க வேண்டும் என்கிறார் சுவாமி தேசிகன்.

அப்படிச் செய்தால் கட்டாயம் மோட்சம் தானாகவே கிடைக்கும்.

யாருக்காவது கிடைத்திருக்கிறதா என்றால், ஜடாயுவுக்குக் கிடைத்திருக்கிறது.

எம்பெருமான் பொருட்டு தன்னையே அர்ப்பணித்து, சீதைக்காக ராவணனுடன் போராடி இறக்கை இழந்து வீழ்ந்தான் ஜடாயு.

தன்னுடைய நெருங்கிய பந்துக்கள் காலமானால் எப்படி துக்கமடைவாளோ, அந்த மாதிரி துக்கமடைந்தானாம் சீதா பிராட்டி. ஜடாயுவைத் தொட்டுத் தடவிக் கொடுத்து கட்டிப்பிடித்துக் கொண்டு அழுகிறான்.

பின்னால் அந்த ஜடாயுவை ராமன் பார்க்கிறான். பார்த்து ஒரு பெரிய அனுக்கிரஹம் பண்ணுகிறான்.

(தொடரும்)


"என்னதான் அரசியல்வாதியாயிருந்தாலும் அவருடைய 'ஜால்ரா'க்கள் இப்படியா கோஷம் போடறது?"

"எப்படி போடறாங்க?"

"தலைவர் தலை தீபாவளி கொண்டாடக் காரணமாயிருக்கும் 'அண்ணன் நரகாசுரன்' வாழ்க!' அப்படின்னு."

— சீர்காழி கே.ஆர்.வி







1998 அக்டோபர் 25
வெகுதான்ய ஐப்பசி 8
மலர் : 57
இதழ் : 13

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

டீ பார்ட்டி அரசியல்!


கூட்டணி ஆட்சிக்கான முதிர்ந்த மனோநிலை நமது அரசியல்வாதிகளிடம் இல்லை என்பது மீண்டும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

மத்திய அமைச்சரவை விரிவாக்கத்தைப் பிரதமர் தம் விருப்பப்படி நிறைவேற்ற முடியாமல், தலைக்குத் தலை முட்டுக்கட்டைப் போட்டன கூட்டணிக் கட்சிகள். விளைவு...? பிரதமர், அமைச்சரவை விரிவாக்கத்தையே ஒத்தி வைத்து விட்டார்!

தமது அமைச்சரவையில் யார் யார் இடம் பெற வேண்டும்; அவர்களில் யாருக்கு எந்தப் பொறுப்பு என்று தீர்மானிப்பது பிரதமரின் உரிமை. நிர்வாகச் சௌகரியம் கருதியும் உறுப்பினரின் அனுபவம் மற்றும் பின்னணியைப் பொறுத்தும் நியமனங்கள் செய்வார் பிரதமர். தம்முடைய சிந்தனையுடனும் செயல்படும் முறையுடனும் ஓரளவேனும் ஒத்துப் போகக் கூடிய நபர்களைத் தேர்ந்தெடுத்துத் தமது அணியை அமைத்துக் கொள்வார். கூடியவரை அனைத்துக் கட்சிகளுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கவும் முயற்சி செய்வார்.

அவ்வாறு செயல்பட அவரை அனுமதிக்காமல், கூட்டணிக் கட்சிகள் தங்கள் இஷ்டத்துக்குத் தலைக்குத் தலை நிபந்தனைகள் விதிப்பதென்பது சுயநலம் மட்டுமல்ல; சிறுபிள்ளைத்தனமான நடத்தையும் கூட.

தமது கட்சியின் ஆதரவின்றி பிரதமருக்குப் பெரும்பான்மை இருக்காது என்கிற நிலைமையைக் கேவலமாகப் பயன்படுத்திக் கொண்டு ஜெயலலிதா பேரம் பேசியிருக்




கிறார். சேடப்பட்டி, ஆர்.கே. குமார் – இவர்களுக்குப் பதில் நியமிக்கப்படவிருந்த இரு அ.தி.மு.க. அமைச்சர்கள் தவிர, மேலும் இருவருக்கு (அ.தி.மு.க.) அமைச்சர் பொறுப்பு தரப்பட வேண்டும் என்று பிடிவாதம் பிடித்திருக்கிறார்! அது மட்டுமல்ல... வாழப்பாடி ராமமூர்த்தியிடமிருந்து பெட்ரோலியத் துறை வாபஸ் பெறப்பட வேண்டும் என்றும் அது அ.தி.மு.க. அமைச்சருக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் விபரீதமான கோரிக்கை வைத்திருக்கிறார்.

பிரதமருடன் ஒரு மணி நேரம் உரையாட ஆறு விஷயங்களைக் குறித்துக் கொண்டு போனவர், இந்தப் பேரம் பேசுவதற்கே மொத்த நேரத்தையும் செலவிட்டுத் திரும்பி யிருக்கிறார் – மற்ற ஐந்து விஷயங்கள் விவாதிக்கப்படவேயில்லை!

ஜெயலலிதா காட்டிய வழியிலேயே அகாலிதளம், சமதா கட்சி போன்ற கட்சிகளும் செயல்பட்டன. அக்கட்சித் தலைவர்களும் கூட, தங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு அமைச்சர் பதவி தரப்பட வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டிருக்கிறார்கள். நல்ல வேளையாக த்ரிணமூல் காங்கிரஸ் கட்சியில் உட்பூசல் மிகுதியாயிருந்தது. இல்லா விட்டால், மம்தா பானர்ஜியும் தம் பங்குக்கு நிபந்தனைகள் விதித்து, பிரதமரை மேலும் விழி பிதுங்கச் செய்திருப்பார்!

அத்தனைப் பேரின் கோரிக்கைகளுக்கும் சம்மதம் தெரிவித்துத் தலையாட்டவும் விரும்பாமல் கூட்டணிக் கட்சிகளிடம் 'NO' சொல்லவும் முடியாமல், பிரதமர் வேறு வழியின்றி விரிவாக்கத்தையே ஒத்தி வைத்தார்!

இவ்வாறு ஒத்திவைப்பது தாற்காலிகமான தீர்வுதான். மீண்டும் விரிவாக்க முயற்சியை அவர் மேற்கொள்வாரேயானால், மீண்டும் இதே கோரிக்கைகள் இதைவிட அழுத்தமாகவும் பிடிவாதத்துடனும் முன்வைக்கப்படலாம். அந்த சந்தர்ப்பத்தில் பிரதமர் என்ன செய்ய முடியும்?!



அமைச்சரவை என்பது சரக்கு ரயில் அல்ல... இஷ்டத்துக்கு சரக்கு வண்டிகளை ஒன்றன் பின் ஒன்றாக இணைத்து ஓட விடுவதற்கு! நாட்டின் நிர்வாகம் என்பது வியாபாரமும் அல்ல – பேரம் பேசி இடம் பிடிப்பதற்கு! அமைச்சரவை என்பது ஒரு 'டீம் ஸ்பிரிட்டுடன்' உற்சாகமாகவும் சந்தோஷமாகவும் செயல்பட வேண்டிய ஒன்று. இவை இல்லாத பட்சத்தில் அமைச்சரவையின் ஆற்றலும் நிர்வாகத்திறனும் பாதிக்கப்படவே செய்யும்.

இன்றைய அரசியல் கலாசாரத்தில் இதைப் பற்றியெல்லாம் யோசிக்கிற மனோ நிலையும் பக்குவமும் தலைவர்களுக்கு இல்லை. மக்களின் பிரதிநிதிகளாகச் செயல்படத்தான் அவர்கள் பாராளுமன்றத்துக்குத் தேர்வு செய்யப்படுகிறார்கள். இந்த ஆதார உண்மையை மறந்துவிட்டு, சொந்த விருப்பு - வெறுப்புகளை மையமாக்கி அரசியல் நடத்துகிற போக்கும் தனிச் செல்வாக்கை எப்போதுமே பறைசாற்றிக் கொள்ளும் மலிவான விளம்பர வேட்கையும் சகிக்க முடியாத எல்லைகளுக்குப் போய்க் கொண்டிருக்கின்றன. அமைச்சரவை விரிவாக்கத்துக்கு முட்டுக்கட்டை போட்டதுமல்லாமல், தேநீர் விருந்து நாடகமொன்றையும் நடத்தி, தேநீர் தொண்டைக்குள் இறங்கும் முன், 'காங்கிரஸுடன் கூட்டு வைத்துக் கொள்ளத் தயார்' என்று அடுத்தத் தேர்தல் பற்றிய அறிக்கை முத்துக்களை உதிர்த்து... தமது டெல்லி விஜயத்தை நிறைவு செய்திருக்கிறார் ஜெயலலிதா!

நாட்டின் பிரதம நிர்வாகியை ஆட்டி வைக்கும் ஆற்றல் தமக்கு இருப்பதாக அவர் பெருமை கொள்ளக் கூடும்... அதையே ஓர் உயர் தகுதியாக பறைசாற்றிக் கொண்டு அடுத்தத் தேர்தலில் அவர் வாக்கு கேட்டாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை.

அத்தகைய நேரத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டியவர்கள் வாக்காளர்கள் மட்டுமல்ல... அ.தி.மு.கவுடன் கூட்டு வைத்துக் கொள்வது குறித்து யோசிக்கக்கூடிய கட்சிகளும்தான்! ○









அவள் பிறந்தபோதே

இந்த நல்லநாள் நிச்சயம்

வரும் என்று

எல்லாத் தந்தைமார்களைப்

போலவே

உங்களுக்கும் தெரியும்.



சுமையான சுகம்!

சுப்ர.பாலன்



முன்பெல்லாம் அவனுக்குப் பத்துக் காசு, இருபது காசு நாணயங்கள் சோதனை பண்ணும். இப்போது நாலணா, எட்டணா நாணயங்கள் அந்தத் திருப்பணியில்!

பேருந்தில் ஏறி நோட்டைக் கொடுத்துப் பயணச் சீட்டு வாங்குகிற ஒவ்வொரு நேரமும் அவனுக்குச் சோதனை. என்னமோ எட்டணா, நாலணா சில்லறை இல்லாவிட்டால் ஈனப் பிறவி, இழி பிறவி என்று நினைத்து முகஞ்சுளித்து முணு முணுக்கிற நடத்துனர்களின் ராஜ்ஜியம்!

இன்றைக்குச் சோதனை இரவு பத்து மணி வாக்கில். என்னமோ பேரணி, பெருமாள் அணி என்று நகரத்தில் தேங்கியாகி விட்டது. மின்சார வண்டியும் ஓடாத கூடுதல் சங்கடம். தாம்பரம் சானடோரியம் போயாக வேண்டும். ஏதோ ஒரு கவனக் குறைவாகத் தொண்டை வறள்கிறதே என்று பால் வாங்கிச் சாப்பிட்டது தவறு என்று பேருந்துக்கு நிற்கும்போது உறைக்கிறது.

சில்லறைக்காகப் பையை நெருடுகிற போது கையில் கிடைப்பது ஐம்பது காசு மட்டும். பரிதாபமாகப் பார்த்தால் ஐம்பது காசு, ஐந்து ரூபாய் ஆகிவிடுமா என்ன? சுற்றுமுற்றும் பார்த்தால் சோதனை மேல் சோதனை! தெரிந்த முகத்தை இருட்டில் தேடுவது அவ்வளவு சுலபமா? அதுவும் கிண்டி பஸ் நிறுத்தத்தில் காஞ்சிபுரம், வேலூர், மதுரை, திருச்சி பேருந்துகள், போனால் போகிற தென்று நகரப் பேருந்துகள் என்று மொய்த்துக் கிடக்கும். நமக்குத் தேவைப்படுகிற பேருந்தில் தவறிக்கூட ஏறிவிடக் கூடாது என்கிற சிரத்தையோடு வழி மறிக்கும் ஆட்டோக்கள், லாரிகள்...

பேருந்துக்காக ஒரு பத்து நிமிடம் இங்கும் அங்கும் ஓடினால் நல்ல பயிற்சி. உடம்பில் சதை ஏறாது! நல்ல ஆரோக்கியம் கிட்டும். பிளட்பிரஷர் ஏறினால் அதற்கு நீங்களே பொறுப்பு!

அவனிடம் பணம் கணிசமாக இருக்கிறது. மூன்று நூறு ரூபாய் நோட்டுக்களும் ஒரு ஐம்பது ரூபாய் நோட்டும்! இரண்டே முக்கால் ரூபாய்ச் சீட்டுக்காக ஐம்பது ரூபாய் நோட்டை நீட்டினால் என்ன மாதிரி பதில் கிடைக்கும் என்பது

தெரியும். பால் சாப்பிட்ட போதே மாற்றியிருக்க வேண்டும். மறுபடியும் கடைக்குப் போய் எதை வாங்கிச் சில்லறை மாற்றுவது என்கிற யோசனை.

வந்தது வரட்டும் என்று கூடுவாஞ்சேரி போகிற பேருந்தில் ஏறியாகி விட்டது. அவ்வளவாய்க் கூட்டமில்லை என்பதில் ஒரு தைரியம் வந்தது...

சத்தம் போடாமல் ஐம்பது ரூபாய் நோட்டை நீட்டினான். 'சானடோரியம்...'

"எத்தினி?"

"ஒண்ணுதான்..." என்று சொல்வதற்குள் அவனுக்கு வியர்த்து விட்டது. ஐம்பது ரூபாய் நோட்டை வாங்கிக் கொண்டு முணுமுணுக்காமல் சீட்டைக் கிழித்துக் கொடுத்தார் நடத்துநர்.

'பாக்கிச் சில்லறை?' கேட்கத் துணிச்சல் வரவில்லை. தருவார் என்கிற ஜனநாயக வாக்காளனின் நம்பிக்கை இருந்தது. விமான நிலையம், பல்லாவரம், குரோம்பேட்டை என்று காத்திருந்து நம்பிக்கை தளர்ந்தது. கவலையில்லாமல் நடத்துநர் தோல் பையிலிருந்த நோட்டுக்களை எண்ணி அடுக்கிக் கொண்டிருந்தார்.

கூட்டி விழுங்கிக் கொண்டு கேட்டான். "கண்டக்டர் சார்! சில்லறை பாக்கி தரல்லே..."

"சானடோரியம்தானே... இருங்க..." படு சாதாரணமாக எரிச்சல் இன்றி பதில் வந்தது ஓர் ஆச்சரியம்.

சரி.... 'தாம்பரம் வாங்க...' என்று சொல்லப் போகிறார் என்று எண்ணிக் கொண்டு தாம்பரத்தில் இறங்கி சானடோரியம் வரை நடக்க வேண்டியதை நினைத்து மனசைத் திடப்படுத்திக் கொண்டான்.

"சானடோரியம்...." விசில் கொடுத்துப் பேருந்து நின்றது.

"இந்தாங்க சில்லறை பாக்கி. வூட்டுக்குப் போய்ச் சாவகாசமா எண்ணிப் பாருங்க... சரியா இருக்கும்..."

கை நிறைய, மடி நிறைய என்கிற மாதிரி எட்டணா, நாலணா, ஒரு ரூபாய் என்று நாணயங்கள்...

"தப்பா நெனைச்சுக்காதீங்க... இன்னைக்கு அம்புட்டும் சில்லறை. எண்ணி மாளலே..." நடத்துநர் சிரித்தார்.

கனவு மாதிரி இறங்கி நடந்தான் அவன். 'சுகமான சுமை' என்பது இது தானா?

'நோபல் சென்!'



டாக்டர் அமார்த்திய சென்னுக்குப் பொருளாதாரத் துறையில் இந்த வருடத்துக்கான நோபல் பரிசு கொடுக்கப்பட இருக்கிறது.

இந்த வருடம் நிச்சயம், அடுத்த வருடம் கட்டாயம் என்று நாலைந்து வருடங்களாகவே அமார்த்திய சென் பெயர் அடிபட்டுக் கொண்டிருந்தது. (நியூயார்க் ஓட்டலிலிருந்து இந்தியாவிலுள்ள சாந்தி நிகேதனில் வசிக்கும் தம் தாயாரிடம் இந்த மகிழ்ச்சியான விஷயத்தைச் சொன்னாராம் சென். "இதைக் கேட்டுக் கேட்டு அலுத்துப் போச்சு. பேப்பரில் செய்தி வரட்டும். அப்பத்தான் நம்புவேன்!" என்று அவரிடமே சொல்லி விட்டாராம் அம்மா!)


ஒரு டஜனுக்கு மேற்பட்ட பொருளாதாரப் புத்தகங்கள் எழுதியிருந்தாலும், 'கலெக்டிவ் சாய்ஸ் அண்ட் சோஷியல் வெல்ஃபேர்' என்ற நூலும், 'பாவர்ட்டி அண்ட் ஃபாமின்ஸ்' என்ற நூலும்தான் சென் பெயரைப் பல பொருளாதார நிபுணர்களின் மத்தியில் புகழ்ச்சிக்கு ஆளாக்கியது. அதிலும் இரண்டாவது நூல் பெரும் பரபரப்பையே ஏற்படுத்தியது. காரணம், பஞ்சத்துக்கும் பட்டினிக்கும் உணவு உற்பத்திக் குறைவு மட்டுமே காரணம் என்று கண்ணை மூடிக் கொண்டு அது வரை சொல்லிக் கொண்டிருந்தவர்களின் வாதத்தைத் தகர்த்தது அந்த நூல். "பஞ்சத்துக்கு வேறு பல காரணங்கள் உண்டு. உணவு உற்பத்தி மட்டுமல்ல... உணவு உற்பத்தி குறைந்து போன எல்லா கால கட்டங்களிலும், பஞ்சமும் பட்டினியும் நிகழ்ந்ததாகக் கூறுவதற்குப் போதிய ஆதாரமே இல்லை" என்று புள்ளி விவரங்களுடன் இந்த நூலில் சொல்லியிருந்தார் அமார்த்திய சென்!

அமார்த்திய சென்னின் தாத்தா பெரிய சம்ஸ்கிருதப் புலவர். அதனால் அமார்த்திய சென்னுக்கும் சம்ஸ்கிருதத்தில் நல்ல தேர்ச்சி உண்டு. "என்னுடைய வளர்ச்சிக்கும், எனது பணிக்கும் சம்ஸ்கிருத இலக்கியம் ஒரு முக்கிய காரணம்!" என்று ஒரு பேட்டியில் அவரே சொல்லியிருக்கிறார். கௌடில்யரின் அர்த்த சாஸ்திரமும், அரிஸ்டாடிலின் தத்துவங்களும் இவரது ஃபேவரிட்ஸ்!

ஹார்வர்டு, ஆக்ஸ்ஃபோர்டு, லண்டன் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸ் எல்லாவற்றிலும் போதித்தவர் சென். தற்போது கேம்ப்ரிட்ஜில் உள்ள ட்ரினிடி கல்லூரிப் பேராசிரியர். 64 வயதாகும் 'சென்'னை, அவர் அம்மா ஆசையுடன் அழைக்கும் செல்லப் பெயர் பப்லு!

அமார்த்திய சென் என்று பெயர் வைத்தவர் இந்தியாவில் முதல் நோபல் பரிசு பெற்ற கவியரசர் ரவீந்திரநாத் தாகூர்.

— எஸ்.வி.என்.



டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி

கிராமங்களை கவனிப்போம்!

மக்கள் சக்தி இயக்கம் அமைதியாகச் செயல் புரிகிறது. ஈடுபாடுடைய நல்ல இளைஞர்கள் இருக்கிறார்கள். அத்துடன் அறிஞர்களாலும் நிபுணர்களாலும் ஆன ஒரு அருமையான நிர்வாகக் குழு இருக்கிறது.

நாளைய நாடு நலம் பெற வேண்டுமானால் இன்று என்ன செய்ய வேண்டும் என்று எண்ணிக் காரியங்களைச் செய்கிறோம். இன்று ஊரிலே சப்தம் அதிகமாயிருக்கிறது; எனவே எங்கள் செயல் உங்கள் காதில் விழுவதில்லை!

செயல் - அதாவது செய்வதை - கர்ம யோகமாக - செய்து கொண்டே போவது தான் பொருளால் ஆன இவ்வுலகின் தர்மம் - நியதி. எனவேதான் நாங்கள் இப்போது நடக்கும் பல விஷயங்களையும் அரசியல் நிலைமை பற்றியும்கூட அறிக்கை விடுவதில்லை. ஏனெனில் இன்று பொய்யெல்லாம் மெய்யெனப் பேசும் வாய் ஜாலக்காரர்களாலும், நெறி பிறழ்ந்தவர்களாலும் அரசியல் உலகம் ஆட்கொள்ளப்பட்டிருக்கிறது. கடந்த முப்பது ஆண்டுகளாக அரசியலும் சினிமாவுமே மக்கள் மனத்தை நிரப்பிக் கொண்டிருக்கின்றன!

சரி, மக்கள் சக்தி இயக்கம் என்ன செய்து வருகிறது?

நம் நாட்டில் 65 சத மக்கள் விவசாயிகள்; 70 சத மக்கள் கிராமத்தில் வசிக்கிறார்கள். அவர்களில் பாதிக்கு மேற்பட்டவர்களுக்குப் படிப்புமில்லை, வருமானமுமில்லை.

ஏழைமையான நாடுகளை வரிசைப் படுத்தினால் மிகவும் ஏழைமையான நாடுகளில் ஒன்றாக இருக்கிறது இந்தியா. ஏன் ஏழைமையைப் போக்கக் கூடாது? ஏன் அடித்தள மக்களின் அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடாது?

முதலாவதாக நம் நாட்டின் ஜீவன்

விவசாயம்; அவர்களிடம் ஏர் கலப்பை இருக்கிறது. உழைக்கும் கரங்கள் இருக்கின்றன. அவர்களுக்குத் தண்ணீர் கொடுங்கள். நேற்று பொட்டல் வெளியாய்க் கிடந்த மண்ணில் இன்று அவன் பயிர் செய்து விளைவித்தானானால் அது நம் நாட்டிலேயே நம் விவசாயி கொண்டு வரும் புதுப்பணம். நிறைய வாயையும் வயிற்றையும் உற்பத்தி செய்யும் நாம் உணவைப் பற்றித்தான் அக்கறைப்பட வேண்டும். எனவே வீணாகக் கடலில் பாயும் கோதாவரி, மகாநதி, கங்கை, பிரம்மபுத்திராவை தாமிரபரணி வரை கொண்டு வரலாம். இதைக் கொஞ்சம் கொஞ்சமாகச் செய்தால்கூட போதும். நடக்கக் கூடிய காரியம்.

கர்நாடகத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் காவிரி நீரில் உடன்பாடு கொண்ட பா.ஜ.க.வால் இது பற்றி ஒத்தக் கருத்தை உருவாக்க முடியாதா?

தென்னக நதிகளை இணைக்கும் பெரும் பணியைத்தான் மக்கள் சக்தி இயக்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது.

ஏன் நாம் இத்தனை நாள் செய்யவில்லை? எது முக்கியம் என்று நம் தலைவர்கள் உணரவில்லை. அவ்வளவுதான்.

இரண்டாவதாகக் கல்வி: ஏழைகளின் அறிவுக் கண்களைத் திறந்துவிட நாம் முயலவில்லை; திட்டமிடவில்லை. அரசியல் சாசனம் சொல்கிறது: 14 வயதுக்கு உட்பட்டவர்கள் அனைவருக்கும் கல்வி கொடுக்கப்பட வேண்டும். எட்டாவது வகுப்பு வரையாவது அனைவரும் படித்திருக்க வேண்டும் என்று.

அதைத்தான் மக்கள் சக்தி இயக்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது. கிராமங்களில் இரவுப் பள்ளிக்கூடம் மூலம்; கிராமங்களில் நூலகம் மூலம்; கிராமங்களில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதன் மூலம்.

ஒருபடி மேலே சென்றால், நமது கல்விமுறையும் கல்வியும் சீர்திருத்தப்பட வேண்டும்; உலக அரங்கிற்கு ஈடாக நாம் உயர வேண்டும்; 21-வது நூற்றாண்டின் எதிர்பார்ப்பிற்கு நாம் நமது தலைமுறையைத் தகுதி உள்ளவர்களாக ஆக்க வேண்டும் என்று ஒரு புதிய கல்வித் திட்டத்தை இயக்கம் அறிமுகப்படுத்தி இருக்கிறது!

வால்ஸ்டிரீட் ஜர்னல் என்றொரு பிரபல அமெரிக்க நாளிதழ். அதில் ஒரு கட்டுரையில் ஓமன், கோஸ்டரீகா என்ற இரண்டு நாடுகளை ஒப்பிட்டிருந்தார்கள். ஓமன் எண்ணெய் வளம் கொழித்த நாடு; பணம் இருந்தது. எல்லோரும் வசதியாக இருந்தார்கள். சாலை வசதி இல்லை. உற்பத்தி இல்லை; முன்னேறவில்லை; உலக ஞானம் இல்லை. ஏனெனில் படிப்பு இல்லை.

கோஸ்டரீகா ஏழையாக இருந்த நாடுதான். எல்லோருக்கும் கல்வியைக் கொடுத்தார்கள். ஒரு பத்தாண்டில் அது வசதி படைத்த நாடாக முன்னேறிய நாடாக இன்று இருக்கிறது. கல்விதான் அறிவைக் கொடுக்கிறது; அறிவுதான் திறமையை வளர்க்கிறது; நம்பிக்கையை வளர்க்கிறது. திறமையும் நம்பிக்கையும் தான் ஒரு நாட்டை வேறுபடுத்திக் காட்டுகிறது.



ஏன் ஐம்பதாண்டுகள் ஆகியும் நமது மக்கள் இன்னும் 40 சதம் பேர் கல்வி அறிவு அற்றவர்களாயிருக்கிறார்கள்?

நமது தலைவர்கள் எது முக்கியம் என்பதை உணரவில்லை. வேறென்ன சொல்ல முடியும்?

நாம் அதில்தான் கவனம் செலுத்த வேண்டும். மக்கள் சக்தி இயக்கம் அதைத்தான் செய்து வருகிறது.

மூன்றாவதாக, மக்கள் அதிகமாக வாழும் இடம் இன்றும் கிராமங்கள்தான். 70 சத மக்கள் அங்கே வசிக்கிறார்கள். அங்கே பெண்கள் 70 சதம் படிக்காதவர்கள்.

கிராமவாசியின் வருமானத்தையும் நகரவாசியின் வருமானத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இருக்கும் ஏற்றத் தாழ்வு "அநியாயம்!" என்றும் "ஏழை வயிற்றில் அடிக்கப்படுகிறான்" என்றும் நாம் ஆதங்கப்படும் அளவுக்கு இருக்கிறது.

இரண்டு வேளை முழு உணவுகூட அவர்களுக்குக் கிடைப்பதில்லை. கண்கூடாகப் பார்த்தோம், கிராமங்களில். சாலை வசதி இன்றி, குடிநீர் இன்றி, மருத்துவ வசதி இன்றி, பள்ளி இன்றி இன்றும்

ஏராளமான கிராமங்கள். 1998லும்.

இதனால்தான் மக்கள் சக்தி இயக்கம் கிராமங்களை தத்தெடுத்துக் கொள்ளும் பணியில் ஈடுபட்டிருக்கிறது. இவர்களும் நம்மைப் போல் படிப்பிலும் வருமானத்திலும் நல்ல நிலைக்கு வருகிறவரையில் சமதர்ம சமுதாயம் வராது. ஏழைகளுக்கு நியாயம் செய்யாத ஒரு சமுதாயமாகத்தான் நாம் இருப்போம்.

கிராமங்களில் விஷயம் தெரிந்தவர்கள் தேவைப்படுகிறார்கள். துணை போகிறவர்கள், தேவைப்படுகிறார்கள்; துணிச்சலாக தட்டிக் கேட்பவர்கள் தேவைப்படுகிறார்கள். இதை அரசாங்கமா செய்யப் போகிறது?

பல இடங்களில் கிராம மக்களின் உலக ஞானம் கிராமத்துடன் நின்று விடுகிறது. கால்சட்டை போட்டு, காரில் சென்று இறங்கினால் அவர்கள் அதிகாரிகள் என்று எண்ணி, குறை தீர்க்க முறையிடுகிறார்கள்.

சில பெரிய விஷயங்களான ரேஷன் ஷாப் ஊழலோ, சாலை போடுகிறேன் என்று போடாமல் கணக்கெழுதப்படுவதோ, கள்ளச் சாராயப் பணத்தை கட்சிக்காரர்கள் பங்கு போட்டுக் கொள்ளும் விஷயமோ – பெரிய இடத்துக் கொள்ளை பற்றியோ ஏதுமே தெரியாமல் – இதுதான் வாழ்க்கை – என்று ஏற்றுக் கொண்டு வாழும் மக்கள்.

பாரதி பாடுகிறார்: கஞ்சி குடிப்பதிற்கிலார் – அதன்
காரணங்கள் இவை என்ற அறிவும் இலார்' என்று.

பல மாவட்டங்களில் கிராமங்களைத் தத்தெடுத்துக் கொண்டு கிராம வேள்வி என்ற திட்டத்தை அறிமுகப் படுத்தி இருக்கிறோம்.

இன்றைய கிராம மக்களுக்கு உள்ள முதல் தேவை: வேலை வாய்ப்பு; வருமானத்திற்கு வழி; அடுத்தவேளை அரிசி வாங்கக் காசு. சிறு தொழில்களில் பயிற்சிக்கு ஏற்பாடு செய்கிறோம். காந்தி கிராமம், சேலம் ராஜாஜி ஆசிரமம் போல வராதா என்று இவ்விடங்களில் கிராமங்களில் செய்யக் கூடிய 60க்கு மேற்பட்ட தொழில்கள் சொல்லிக் கொடுக்கப் படுகின்றன.

இந்த ஏழு அம்சங்கள்: 1) வேலை வாய்ப்பு, சிறு தொழில்கள் மூலம் வருமானத்திற்கான வழிகள் 2) இரவுப் பள்ளி, நூலகம் 3) சேமிப்பு மாதம் 25-50 ரூபாய். இதில் வரும் பணம் பலருக்குத் தொழில் துவங்க உதவுகிறது. 4) சுகாதாரம், கழிப்பறை, 5) மதுவிலக்கு 6) பெண்கள் உயர்வு, பெண்கள் உரிமைகள், 7) சமூக நல்லிணக்கம்.

இதில் உள்ள முதல் நான்கு அம்சங்களில்தான் துவக்கத்தில் கவனம் செலுத்துகிறோம். இந்தத் திட்டம் விசாகப் பட்டினத்தில் உள்ள டாக்டர் பரமேஸ்வரராவ் அவர்களால் நேரடியாக சுமார் 30 கிராமங்களிலும், பிறர் மூலம் சுமார் 300 கிராமங்களிலும் நடைமுறைப் படுத்தப் பட்டு பலன் தரும் திட்டம்!

என்னைப் பலர் கேட்கிறார்கள்: 'எப்படி அமெரிக்காவிலிருந்து இங்கு வரத் தீர்மானித்தீர்கள்? சொகுசான வாழ்க்கை –உங்கள் குழந்தைகள், குடும்பம், பேரக் குழந்தைகள் – என்று எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டு?' என்று. 1962ல் சென்ற எனக்கு 1963லேயே, "நம் நாடு உயர்ந்த நாடு; கெட்டிக்காரர்கள், புத்திசாலிகள் நிறைந்த நாடு. அமெரிக்காவில்



"லாவண்யஸ்ரீ இன்னும் ஃபீல்டுலே இருக்காங்கன்னா நம்ப மாட்டேன்னியே, நீயே பாரு."

— குல்லூ

பார்க்கும் நல்லனவற்றை எல்லாம் இந்தியாவிற்குக் கொண்டு செல்ல வேண்டும்'' என்ற தணியாத ஆர்வம் ஏற்பட்டு விட்டது. எல்லா தமிழ்ப் பத்திரிக்கைகளும் எனக்கு விமானத் தபாலில் வந்து கொண்டிருந்தன. எனவே தமிழ்நாட்டுடன் எண்ணங்களால் ஒன்றிவிட்டேன். இந்தியா பற்றி சொல்லிக் கொடுக்கும் அமெரிக்கப் பேராசிரியர்களுடன் நட்பு கொண்டு அவர்களுடன் பேசி மற்றவர்களது கோணத்தில் பாரபட்சமில்லாமல் நம் நாட்டை நான் பார்ப்பதுண்டு; சிந்திப்பதுண்டு.

இந்த ஆர்வம்தான், இந்த எண்ணங்கள்தான் என்னுடைய சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்தன. அண்ணா வந்த போதும், கலைஞர் கருணாநிதி வந்த போதும், அமெரிக்காவுக்கு எம்.ஜி.ஆரை அழைத்துச் செல்ல எல்லா ஏற்பாடுகளை நான் செய்த போதும் இந்த ஆழமான எண்ணங்கள்தான் காரணமாயிருந்தன. இவர்களது தொடர்பு நாட்டைப் பற்றி நான் எண்ணியதை சாத்தியமாக்க முடியும் என்ற நம்பிக்கையைத் தந்தது.

இப்படி அமெரிக்கப் பேராசிரியர்கள், நம் நாட்டுத் தலைவர்கள் என்று அமெரிக்காவில்கூட எனக்கு ஒரு சூழ்நிலை ஏற்பட்டதை எண்ணி நானே வியப்பதுண்டு. காரணம் நமது எண்ணங்கள் நம்மை மட்டும் மாற்றுவதில்லை, நம்முடைய சூழ்நிலையையே மாற்றி விடுகின்றன என்கிற மாபெரும் உண்மையைத் தெரிந்து கொண்டேன்!

இதைவிட முக்கியமாக நமக்கு ஒரு கடமை இருப்பதாக எண்ணினேன். நான் எழுதுகிறேன், நாடு அப்படி இருக்க வேண்டும்; இப்படி இருக்க வேண்டும். இது சாத்தியம், என்றெல்லாம். இப்படி ஊருக்கு உபதேசம் செய்வது சுலபம். அதற்காக நாம் இறங்கிப் பாடுபடும் போதுதான் நாம் இப்படி விமரிசிப்பதற்கு நமக்கு உரிமை உண்டு; அதுதான் முறையான காரியம் என்ற எண்ணம் என்னுள் படிந்து போயிருந்தது. இதற்கு காரணம் நான் படித்த வேதியல் படிப்பு.

இந்த விஞ்ஞானப் பாடம் எனது சொல்லுக்கும் செயலுக்கும் நெருங்கிய சம்பந்தம் இருக்க வேண்டும் என்பதை சதா என்னுள் சொல்லிக் கொண்டே இருந்தது. விஞ்ஞானப் பாடங்களின் அணுகுமுறைகள், எண்ணங்களாய்,



''அவன்தான் அந்த சினிமா டைரக்டரோட வலது கை!''

"அப்படியா?"

"டைரக்டர் யோசிக்கும்போது அவரோட தாடியை இவர்தான் உருவி விடுவாரு... நெத்தியைத் தேச்சி விடுவாரு...!"

- ஜூனியர் தேஜ்

பழக்கங்களாய் மாறி என்னுள் பதிந்து விட்டன.

அடுத்ததாக, ''எண்ணங்கள் உலகை மாற்றும்; உலகை மாற்றி இருக்கின்றன'' என்பதை பலர் வாழ்விலிருந்து நான் அறிந்தேன்.

என்னையும் சரி; என்னை இப்படி சிந்திக்கச் செய்த நல்லவர்களையும் சரி, மக்கள் யாரும் மண்டி போட்டு ''நீங்கள்தான் இந்த நாட்டைக் காப்பாற்ற வேண்டும்!'' என்று கேட்கவில்லை; கேட்க மாட்டார்கள். இதைத்தான் நமது நடுத்தர வர்க்கம் உணர வேண்டும். நம்மால் முடியுமா? மக்கள் ஒன்று சேர்வார்களா? உணர்வார்களா? என்று சந்தேகப்பட்டுக் கொண்டிருக்கவோ, தயங்கவோ நேரமில்லை.

நாம்தான் நம் தலையில் அட்சதையைப் போட்டுக் கொண்டு – ஆண்டவன் ஆசி கூறுவதாக எண்ணிக் கொண்டு – நம்மாலானதை, நாம் இருக்குமிடத்தில் செய்ய வேண்டும்; முதலில் துவங்க வேண்டும். சிந்திக்கிறேன்...

என்னைச் செதுக்கிய எண்ணங்கள்...

''பலனை எதிர்பாராதே; கடமையைச் செய்'' என்று கூறுகிறது பகவத்கீதை!

(முற்றும்)



சிலைகள் கூட ஹாய் சொல்லும்...!

கல்லூரி மாணவர்களிடையே உள்ளாட்சி அமைப்புகளின் மீதான பார்வை எப்படியுள்ளது என்பதை அறிய, இம்முறை 'மேயராக நானிருந்தால்...!' எனும் தலைப்பை எடுத்துக் கொண்டு, கோவை மேயரின் தந்தை நிர்வகிக்கும் S.N.R. அண்ட் சன்ஸ், கலை அறிவியல் கல்லூரிக்குப் போனோம். மேயர் பதவி கொடுத்ததில் கிடைத்த சில 'பன்ச்'கள்:

1. **டி. கார்த்திக் (கம்ப்யூட்டர் சயன்ஸ், மூன்றாமாண்டு) :** கார் மேல இருக்கிற 'ரெட்' லைட்டைக் கழற்றி விடுவேன். ஏனென்றால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நான், அவர்களெல்லாம் சிக்னல்களில் காத்து நிற்க, நான் மட்டும் சிக்னல்களை மீறிப் போவது சரியா...?


2. **டி. சபரி கிரிநாத் (பி.பி.எம். இரண்டாமாண்டு) :** கார்ப்பரேஷனே காலியானாலும் தப்பில்லை; லஞ்சம் வாங்கும் அதிகாரிகளை நீக்கி விடுவேன்.

3. **எஸ். பிரசன்னா ஜெகன்னாத் :** வெடிகுண்டுகள் இருக்கும் கோவையில், தீவிரவாதிகளை ஒழித்து, அமைதிக்குப் போராடும் பிளான் இருக்கு. அதனால் எனக்கு மேயர் பதவி போதாது. சி.எம். பதவி அல்லது பி.எம். பதவி ஏதாவது ஒண்ணு கொடுங்களேன்.


4. **ஏ. பீட்டர் ஆல்வின் (பி.எஸ்ஸி) :** மாமன்றத்தில் மேயருக்குரிய கவுனைப் போடுமுன் ஏழை எளியவர்களுக்கு உடுத்த ஒரு உடையாவது இருக்கிறதா என எண்ணிப் பார்ப்பேன் முதலில்.

5. **ஜெ. சார்லஸ் பாபு (இரண்டாமாண்டு, பி.எஸ்ஸி.) :** இன்றைக்கு பஸ் டிரைவர்களுக்கு பஸ் நிறுத்தம் கூடத் தெரிவதில்லை. முதலில் அவர்களுக்கொரு 'பஸ் நிறுத்தப் பயிற்சி நிலையம்' அமைக்க ஏற்பாடு செய்வேன்.

6. **எஸ். வேல்முருகன் (பி.எஸ்ஸி) :** பஸ்ஸில் சரியான சில்லறைப் பிரச்னை சார். அதைத் தீர்க்க 1000 'பொற்காசுகள்' தினமும் (1000 ரூபாய்க்கு சில்லறைகளாம்) கண்டக்டர்களுக்கு வழங்க உடனடியாக ஏற்பாடு செய்வேன்.



7. **கே.வி. ஆனந்த் (எலக்ட்ரானிக்ஸ், மூன்றாமாண்டு) :** இந்த பயங்கரவாதிகளுக்கு எதிரான இயக்கம் ஒண்ணு உருவாகணும். பொதுமக்களைத் திரட்டி, அமைதி இயக்கம் ஒண்ணு உருவாக்குவேன்.



8. **பி. சிவசுப்பிரமணியன் (பி.பி.எம்., இரண்டாமாண்டு) :** நம்ம அரசியல்வாதிக மாதிரி ஜாதி, மதம் ஒழிப்பேன்னு போலித்தனம் செய்ய மாட்டேன். மதத்தை வச்சு, ஜாதிய வச்சு தீவிரவாதிகள் உருவாகறதுன்னா, அந்த

காலேஜ் கார்னர்



நாடு சுடுகாட்டுக்குச் சமம். அதனால. பேசாம ராஜினாமா செய்துடுவேன்.

9. அகல்யா ராஜன் (எலக்ட்ரானிக்ஸ்) : மேயராகவா...? நானா.... ம்....! கார் வாங்குவேன்... வித விதமா 'இம்போர்டட்' கார்களெல்லாம் கூட..... அட்ராக்டிவ்வா பலப் பல பங்களா கட்டுவேன்... இஷ்டம் போல சம்பாதிச்சு, எக்கச்சக்கமா செலவழிப்பேன்...! ஏன் சார்... நான் நல்லது செஞ்சா மட்டும் மக்கள் என்னை தலையில தூக்கி வச்சுட்டு ஆடவா போறாங்க...? அதனால பதவி இருக்கிற வரைக்கும் பந்தாவா வலம் வருவேன்.

10. வி. செந்தில் குமார் (பி.எஸ்ஸி கம்ப்யூட்டர் சயன்ஸ்) : என் மாநகரை ஸ்விட்சர்லாந்து ஆக்காவிட்டாலும் பக்கத்துல இருக்கிற பெங்களூர் மாதிரியாவது ஆக்கிக் காட்டுவேன். தப்பித் தவறிக் கூட இன்னொரு காஷ்மீராக உருவாக விட மாட்டேன்.

11. எஸ். ராஜ்குமார் (பி.பி.எம்.) : எம் பேரை கோபாலகிருஷ்ணன்னு மாற்றிப் போட்டுக்குவேன். ஏன்னா எங்க ஊர் மேயர் ரொம்ப நல்லா பண்ணீட்டு வர்றார்.

12. கே. சுகவனம், (கேட்டரிங், இரண்டாமாண்டு) : இங்கே எல்லோருமே தமிழ்ல பேச வெட்கப்படறாங்க. தமிழ்ல பேசறது அநாகரிகம்ங்கற மாதிரி, ஒரு எண்ணம் வளர்ந்திருக்கு. அதைப் போக்க, 'மாநகர தமிழ் வளர்ச்சிக் குழு' ஒன்றை அமைத்து செயல்படுத்துவேன்.

13. பொன் திருவேங்கிடம் (எம்.சி.ஏ, மூன்றாமாண்டு) : நம்ம மாநகரங்கள்ல சாக்கடை எங்கே ஆரம்பிக்குது எங்கே முடியுதுன்னே புரியறதில்லை. அதை முதல்ல கண்டு பிடிக்க ஒரு 'சாக்கடை புலனாய்வுக் குழு' ஏற்படுத்துவேன்.

14. வெண்ணிலா (பி.எஸ்ஸி) : என் வீட்லயும்தான் தண்ணீர் வர்றதில்லே. என் வீதியும்தான் சுத்தமில்லே...!'ன்னு என்கிட்டே குறை சொல்லி வர்ற மகா ஜனங்களிடம் சொல்லி நானும் அவர்களில் ஒருத்தி என்று உணர வைப்பேன்.

15. ஜெய்ஸ்ரீ (பி.எஸ்ஸி) : வந்ததும் முதல் வேலையா டிராபிக் போலீஸ்களுக்கு சம்பளத்தை உயர்த்த அரசுக்கு ஒரு வேண்டுகோள் விடுப்பேன். மாசக் கடைசியில அவங்க காலேஜ் ஸ்டூடண்ட்ஸ்கிட்டே கையேந்தறதைப் பார்க்கவே ரொம்பக் கஷ்டமா இருக்குங்க.

16. எஸ். கனிமொழி, (மூன்றாமாண்டு பி.எஸ்ஸி) : கிறிஸ்துவர்கள் பள்ளி வாசலுக்குப் போவார்கள்... முஸ்லீம்கள் திருக்கோயில்களுக்குச் செல்வார்கள்... இந்துக்கள் மசூதியில் தொழுகை நடத்துவார்கள்... இத்தகைய மாற்றங்கள் கொண்டு வந்தாலே நான் மேயர்... இல்லையெனில் நான் லோயர்....!

17. எஸ். சபரி (பி.எஸ்ஸி) : படிப்பைக் கெடுக்கும் மின்







சார வெட்டை நீக்கிட மாநக ராட்சி மூலமாய் முயற்சி எடுப்பேன்.

18. ஆர்.டி. பத்ரி நாராயணன் (எம்.சி.ஏ.) : இங்கே கோயமுத்தூருக்குள்ள வர்றதுன்னா 'தனி விசா' வேண்டும்... அது மாதிரி ஏதாவது அறிமுகப்படுத்துவேன். ஏன்னா நிலைமை ரொம்ப மோசம் பாருங்க.

19. எம். சத்யா (எலக்ட்ரானிக்ஸ், மூன்றாமாண்டு) : "சிலைகள் கூட சிரித்து 'ஹாய்' சொல்லும்! பெண்கள் தளர்ந்த நடையின்றி, ஆஸ்துமா வியாதியின்றி, அவசரமின்றி அச்சமின்றி, அழகாய் கட்டின காட்டன் புடைவை கசங்காமல் அம்மனாய் 'வலம் வருவார்கள்...! அதி நள்ளிரவிலும் அச்சமின்றி, அதிக செலவுமின்றி 'ஆட்டோவில்' கூட மக்கள் பயணம் செய்வர்...! இது போதுமா...? இன்னும் கொஞ்சம் வேணுமா...?

20. அனுபமா. எஸ், (எம்.சி.ஏ.) : கல்வியின் முக்கியத்துவம் உணர்ந்த இந்த அறிவொளி இயக்கம் ஒன்று போதாது சார்... கோயில்களெல்லாம் பள்ளிகள் செய்து கல்விக்குக் கலங்கரை விளக்கமாய்த் திகழ்வேன்!

21. ந. காளீஸ்வரி (பி.எஸ்ஸி இரண்டாமாண்டு) : குழாய்களில் ஒழுங்காகத் தண்ணீர் வரச் செய்வதே என் முதல் பணி.

22. மோ. சத்யன் சுந்தரராஜன் (பி.எஸ்ஸி.) : அப்பா வயசுல, தாத்தா வயசுல நான் மேயரானா எப்படியோ... ஆனா இந்த வயசுல மேயரானா அவினாசிலிங்கம் ஹோம் சயின்ஸ், நிர்மலா கல்லூரி, PSGR கிருஷ்ணம்மாள் (எல்லாமே பெண்கள் கல்லூரி) கல்லூரி எல்லாவற்றையும் S.N.R. கல்லூரியுடன் இணைத்திட ஆணை பிறப்பிப்பேன். (அம்மாடி, ரொம்பத்தான் ஆசை!)

23. எஸ். கணேஷ்குமார் (எம்.சி.ஏ. மூன்றாமாண்டு) : இங்கே உட்கார்ந்தா கைதட்டல்... எந்திரிச்சா கைதட்டல்... முக்கல்-முனகல்... எல்லாத்துக்குமே கைதட்டல்... இப்படி எதுக்கெடுத்தாலும் கைதட்டரதை முதல்ல நிறுத்தச் சொல்லுவேன். எல்லோரும் புத்தியை நிலை நிறுத்தி சிந்திக்கச் சொல்லுவேன்.

24. கே. ராஜா (பி.பி.எம்.) : இந்த வெட்டிக் கற்பனையில என்ன சார் பிரயோஜனம்....? நாங்க எல்லோருமே காலேஜ் ஸ்டூடண்ட்ஸ். ஒரு மாணவனா இருந்து என்ன செய்யப் போறீங்கன்னு கேளுங்க சொல்றோம்...

25. நா. உமையாள் ராதை (பி.பி.எம்.) : போக்குவரத்துக்கு இடையூறு தரும் கட்டடங்களை உடனடியாக இடிப்பேன்.

26. பி. தேவிஸ்ரீ (எம்.சி.ஏ.) : தமிழ் நாட்டுக்கு ஜெயலலிதா... பாகிஸ்தானுக்கு பெனாசிர்... கோயமுத்தூருக்கு தேவிஸ்ரீன்னு பேர் வராமப் பார்த்துக்குவேன்.

27. ஹரீஷ் பத்மனாபன் (பி.எஸ்ஸி) : பணக்கார வர்க்கத்திற்கு ஆதரவாய் ஒரு போதும் இருக்க மாட்டேன். ஏழைகளின் குடியிருப்புகளை ஆக்கிரமிப்பானாலும் இடிக்க மாட்டேன்.

28. ஜெயவாணி (இரண்டாமாண்டு, எலக்ட்ரானிக்ஸ்) : வீடு சுத்தமா இல்லேன்னாவே பிடிக்காது. நா மேயரா இருக்கும் போது மாநகரம் சுத்தமில்லேன்னா பிடிக்குமா...? தூங்கியெந்திரிச்சதும் தினமும் நகர் வலம் வந்து பார்த்து நகரை - வீடா - கோயிலா சுத்தமா வச்சுக்குவேன். அப்புறம் தான் மத்த வேலை.

29. லக்ஷ்மி சித்ரா (கம்ப்யூட்டர் சயன்ஸ்) : மிஸ் கிளீன் எனப் பெயரெடுப்பேன். அதுதான் முக்கியம்.

30. ரோஸ்மேரி (பி.எஸ்ஸி முதலாண்டு) : ஏழை எளிய மக்களுக்கு உதவி புரியணும். பிச்சைக்காரர்களை அடியோடு அகற்றக் கவுன்சிலர்களைக் கூட்டி ஏதாவது ஒரு திட்டம் வகுப்பேன். ●

— கேயெஸ்வி

மறுபடி யுத்தம்?

ஈரான் – ஈராக் போருக்குப் பிறகு இரண்டு முஸ்லிம் நாடுகள் நேரடியாக யுத்தத்தில் இறங்கக் கூடுமென்றால் அது ஈரான் – ஆப்கானிஸ்தானாகவே இருக்கும் என்கிற அளவுக்கு இந்த இரண்டு நாடுகளுக்கிடையே பகைமை முற்றி வருகிறது!



• ரபானி : ஆதரவாளர்களுடன்



• கொலையுண்ட ஈரான் பிரதிநிதிகளின் உடல்கள் கொண்டு வரப்படுகின்றன.

பாகிஸ்தானுக்கும் ஈரானுக்கும் நடுவே அமைந்திருக்கும் ஆப்கானிஸ்தானை இப்போது பெரும்பகுதி ஆக்ரமித்திருப்பது தாலிபன் என்ற தீவிரவாத அமைப்புக் குழு. சமீபத்தில் தங்கள் நாட்டிலிருந்து ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பப்பட்டிருந்த ஒன்பது அரசுப் பிரதிநிதிகளிடமிருந்தும் எந்த விதத் தகவல் தொடர்பும் இல்லாது போனவுடன் ஈரான் அரசு கவலைப்பட்டது. முதலில் "எங்களுக்குத் தெரியாது" என்று ஆப்கானிஸ்தான் கைவிரித்தாலும் சீக்கிரமே உண்மை வெளிப்பட்டது.

அந்த ஒன்பது பேரையும் கொலை செய்து விட்டனர் தாலிபன் அமைப்பினர்.

இந்த உண்மையை ஒப்புக் கொண்டாலும் அதற்காக எந்த விதமன்னிப்பும் கேட்கத் தாங்கள் தயாரில்லை என்று தெளிவாகக் கூறி விட்டது தாலிபன்.

"தாலிபனை ஒழித்துக் கட்டினால் தான் ஆசியாவின் அந்தப் பகுதியில் நிம்மதியாக இருக்க முடியும்" என்று வெளிப்படையாகவே குமுறியிருக்கிறார் ஈரான் ஜனாதிபதி.

ஈரானுக்கும் தாலிபனுக்குமிடையே – அவை இரண்டுமே முஸ்லிம் அரசுகள்தான் என்றாலும் கூட – இப்படி ஒரு குரோதம் பாராக் காரணமே மதம்தான் என்பது விந்தையான உண்மை. முஸ்லிம் மதத்தின் இரு பிரிவுகள் சன்னி மற்றும் ஷியா. இந்த இருமதத் தலைவர்களிடையே நிறைய வேறுபாடுகள். பல நாடுகளில் இவை ஒன்றையொன்று எதிரிகளாகவே கருதுகின்றன. தாலிபன் அமைப்பைச் சேர்ந்தவர்களில் பெரும்பாலானவர்கள் சன்னி பிரிவைச் சேர்ந்தவர்கள். ஆப்கானிஸ்தானில் சுமார் ஐந்தில் ஒரு பங்கினர் ஷியா பிரிவைச் சேர்ந்தவர்கள். இவர்கள் பெரும்பாலும் வசித்து வருவது 'பாமியான்' என்ற பகுதியில். சென்ற மாதம் இந்தப் பகுதியை தாலிபன் படை



''அந்தப் பத்திரிகையோட தீபாவளி மலர் போட்டியில உங்களுக்குக் கார் பரிசு கிடைச்சிருக்கறதா சொன்னாங்களே, எங்கே?''

''வயிற்றெரிச்சலைக் கிளப்பாதய்யா. மெகா பரிசுக்குத் தடை போட்டுட்டதால பொம்மை காரைக் கொடுத்துட்டாங்க!''

– வந்தவாசி பா. ஜெயக்குமார்

கைப்பற்றியவுடன் ஈரானின் ஆத்திரம் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது (ஈரானில் பெரும்பான்மையினர் ஷியா பிரிவைச் சேர்ந்தவர்கள்).

அது மட்டுமல்ல, ஆப்கானிஸ்தானை ஏற்கெனவே ஆண்டு வந்த ரபானி அரசைக் கலைத்துவிட்டு அங்கு அடாவடியாக ஆக்ரமித்திருக்கிறது தாலிபன். ரபானி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர். அவரது அரசை ஈரான் ஆதரித்து வந்தது. சென்ற ஆண்டு தாலிபனுக்குப் படுதோல்வி ஏற்படக் காரணம், ஈரான் ராணுவம் ரபானி தரப்புக்கு உதவியதுதான்.

தாலிபான் இந்த அளவுக்கு சமீபத்தில் வெற்றி பெறக் காரணம் அமெரிக்காவும், பாகிஸ்தானும் அதற்கு உதவியதுதான். "எதிரியின் எதிரி நண்பன்'' என்பதுபோல, 'தனது எதிரியான ஈரானின் எதிரியான தாலிபன் தனக்கு நண்பன்' என்று அமெரிக்கா நினைத்தது. அரசியல் மட்டுமல்ல, அமெரிக்காவின் தாலிபன் ஆதரவுக்குப் பொருளாதாரக் காரணமும் உண்டு. டர்க்மெனிஸ்தானிலிருந்து பாகிஸ்தான் வரை ஒரு நீண்ட எரிவாயுக் குழாயை அமைக்க ஒரு அமெரிக்க நிறுவனத்துக்கு தாலிபன் அனுமதி வழங்கியிருக்கிறது!

இப்போதைக்கு தாலிபன் 'அரசு' பிற நாடுகளின் அங்கீகாரத்தைப் பெறவில்லை. என்றாலும் அது ஆப்கானிஸ்தானை முழுமையாகக் கைப்பற்றியவுடன் இந்த அங்கீகாரத்தைத் தர பிற நாடுகள் ஒன்றன் பின் ஒன்றாக முன்வரக் கூடும். இது ரொம்ப சுலபம் என்றே தாலிபன் நினைத்திருந்தது. ஆனால் சில சமீப நிகழ்வுகளால் இந்தக் கனவு ஆட்டம் கண்டு கொண்டிருக்கிறது.

சென்ற ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஈரானின் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கடாமி ஒரு மிதவாதி. பெண்களை ராணுவத்தில் அனுமதிப்பது உட்படப் பல சீர்திருத்தங்களை ஆதரிப்பவர் என்ற நிலை தோன்ற, அமெரிக்காவின் போக்கிலும் ஒரு மாற்றம் தோன்றியிருக்கிறது. இந்த இரு நாடுகளுக்கிடையே நட்பு தோன்றி விடவில்லையென்றாலும், பகைமை உணர்வு குறைந்து வருகிறது. தவிர பல அமெரிக்க தூதரகங்களுக்கு வெடிவைத்ததாக நம்பப்படும் பின்லேடன் இப்போது ஆப்கானிஸ்தானில் தாலிபனின் பாதுகாப்பில் இருக்கிறார். அவரை வெளியேற்ற மறுப்பதுடன், "அவர் எங்களது மதிப்புக்குரிய விருந்தாளி'' என்று வேறு தாலிபன் கூற, அமெரிக்காவுக்கு அதிர்ச்சி.

போதாக்குறைக்கு தாலிபனுக்கு ஆதரவு அளித்து வந்த சௌதி அரேபியா இப்போது தனது ஆதரவு நிலையை மாற்றிக் கொண்டிருக்கிறது. "மெக்கா, மெதினா ஆகிய இரு புனிதத்தலங்களும் ஒரே நாட்டின் கட்டுப்பாட்டில் இருப்பது சரியில்லை'' என்று தாலிபன் தலைவர் ஒருவர் கூறியதும் கூட இதற்குக் காரணமாக இருந்திருக்கக் கூடும். காபூலிலிருந்து தனது அரசுப் பிரதிநிதியை வாபஸ் வாங்கிக் கொண்டிருக்கிறது சௌதி அரேபியா.

ஆக, பாகிஸ்தான் தனது தாலிபன் ஆதரவை முறித்துக் கொண்டால் ஆப்கானிஸ்தானில் அமைதி திரும்பி, தேர்தல் நடந்து (வெற்றி பெறுவது ரபானியா, தாலிபனா என்பது வேறு விஷயம்) மக்களாட்சி மலரும் என்பது தற்போதைய நிலை. அமெரிக்கா பாகிஸ்தானை எப்படி ஆட்டுவிக்க நினைக்கிறது என்பதையும் பொறுத்தது இது.

— ஜி.எஸ்.எஸ்.

அவசர லண்டன் காட்சிகளும் பயமுறுத்திய இத்தாலியனும்!

ஜெயஸ்ரீ ராஜ்

எக்கச்சக்கமாக பில் போட்டு, எங்களிடமிருக்கும் பணத்தையெல்லாம் 'ஸ்வாகா' செய்து விடுவார்கள் என்று நாங்கள் கதிகலங்கிக் கொண்டிருந்த போது, "பில்லா? அதெல்லாம் ஒன்றுமில்லை! இது அரசாங்க ஆஸ்பத்திரி! எல்லாமே ஃப்ரீ" என்று அவர்கள் சொன்னபோது, அமுத மழை ஒன்று எங்கள் காதில் பொழிந்தது பாருங்கள்.... மெய் சிலிர்த்து விட்டோம். "டாக்டர், நர்ஸெல்லாம் எவ்வளவு இனிமையாகப் பேசி, அக்கறையுடன் கவனித்தார்கள்..'' என்று லலிதா ஃப்ளாஷ்பேக்கில் ஆனந்தித்தாள். இலவச மருத்துவ வசதியே இத்தனை பிரமாதமாக இருக்கிறதென்றால்... சுண்டு விரல் ஆபரேஷனுக்குக் கூட எல்லோரும் ஏன் யு.எஸ்., யு.கே. எனப் பறக்கிறார்கள் என்பது இப்போது தெரிந்தது! நாளின் ஒரு பகுதியை ஆஸ்பத்திரி விழுங்கி விட, எஞ்சியிருந்த மறுபாதியை வீணடிக்காமல் "லண்டன் ப்ரைட்" (London Pride) என்ற டூரிஸ்டு ஸர்வீசில், மேலோட்டமாக லண்டனை சுற்றிப் பார்க்கக் கிளம்பினோம். ரெட்லைன், ப்ளூலைன், க்ரீன் லைன், பிங்க் லைன் என்று விதவிதமான கலர்களில், வெவ்வேறு 'ரூட்'களில் டபுள் டெக்கர் பஸ்கள்; எல்லாவற்றுக்கும் பொதுவாக 24 மணி நேரம் செல்லுபடியாகக் கூடிய டிக்கெட்! இஷ்டப்பட்ட இடத்தில் இறங்கலாம்; சுற்றிப் பார்த்தபின் அதே ரூட்டில் வரும் பிறிதொரு பஸ்ஸில் ஏறிக் கொண்டு பயணத்தைத் தொடரலாம்.

அரை நாளுக்குள் எல்லாவற்





றையும் முடிக்க வேண்டியிருந்ததால், கோயில் கோபுரத்தை எட்டத்திலிருந்து பார்த்து விட்டு, கன்னத்தில் போட்டுக் கொண்டு போய்க் கொண்டேயிருப்போமே, அதே ரீதியில் எல்லாவற்றையும் பார்த்து விட்டு, கடைசியில் மேடம் டுஸாட்ஸின் புகழ் பெற்ற மெழுகு பொம்மை ம்யூசியத்தில் மட்டும் இறங்கிச் சுற்றிப் பார்க்கலாமென்று முடிவு செய்தோம்.

டாப்ஸெஸில் (பஸ்தான்) மதிய வெயில் சுள்ளென்று முகத்தில் அடிக்க, ஓவர் கோட்டை அலட்சியமாகச் சுழற்ற, பதிவாகி யிருந்த ஆங்கில உரையை ரசித்தபடியே, சிறிது தூரம் கூட சென்றிருக்க மாட்டோம். சிலுசிலுவென்று அடித்த குளிர் காற்று வெடவெடக்கச் செய்ய, கோட்டை மாட்டிக் கொண்டு, ஸ்கார்ஃபையும் காதைச் சுற்றிக் கட்டிக் கொண்டு, உண்மையிலேயே டாப் ஸெஸில் அமர்ந்திருந்த ஒன்றிரண்டு ஜோடி களைப் பொறாமையில் ஆச்சர்யத்துடன் நோட்டம் விட்டவாறே, பிக்கடல்லி ஸர்க்கஸ், ட்ரஃபால்கர் ஸ்கொயர், ஹைட் பார்க், பக்கிங்ஹாம் அரண்மனை, வெஸ்ட் மினிஸ்டர் ஆபே, பார்லிமெண்ட் ஹவுஸ், பீக்பென் (க்ளாக் டவர்) டவுனிங் தெரு, லண்டன் ப்ரிட்ஜ் (ஹப்பா...! என்ன பிரம் மாண்டம், என்ன தடதட!) ஷேக்ஸ்பியர் க்ளோப், ஸ்ட்ராண்ட் (தியேட்டர் மியூசியம்), க்ரீன்விச் (மீன் டைம்).. ஆக்ஸ்ஃபோர்ட் ஸ்ட்ரீட்... ஹூம்...

புகழ் பெற்ற "ஹாரட்ஸ்" கடையை விண்டோ ஷாப்பிங் செய்ய வேண்டிய நிர்ப் பந்தம் - ஷாப்பிங் ப்ரியர்களின் கற்பகத் தரு வான இதை நிறுவியவர், தமது வாழ்க் கையை ஒரு சாதாரணத் தொழிலாளியாகத் துவங்கினார் என்பதைக் கேட்டு சிலிர்த்தது - இன்று இங்கே ஒரு கர்சீஃப் வாங்கினால் கூட, பெருமை யடித்துக் கொள்ளலாம் - எல்லாவற் றையும் 'தரிசித்து' விட்டு, மேடம் டுஸாட்ஸில் இறங்கிக் கொண்டோம்.

நம்மை வரவேற்று, ஸில் வெஸ்டர் ஸ்டாலோனுடன் ஒரு ஃபோட்டோ எடுத்து குஷிப்படுத்தி னார்கள். (வெளியே வரும்போது, ஃபோட்டோ வேணுமா? 5 பவுண்டு" என்ற பேரம்!) ராஜீவ், இந்திரா காந்தி சுமார் என்றாலும், நரசிம்மராவ் 'உம்'மென்று படு "நாச் சுரல்". ராணி எலிஸபெத் குடும்பத்துடன் சிலர் ஃபோட்டோ எடுத்துக் கொள்ள, அங் கிருந்து ஸிம்பாலிக்காக ஒதுக்கி வைக்கப் பட்டிருந்த டயானாவுக்குத்தான் என்ன டிமாண்டு! வழுக்கைத் தலையிலிருந்து வயசுப் பையன் வரை அவரை அணைத்துக் கொண்டும், மண்டியிட்டும், கைகோத்தும்... எத்தனை போஸ்! காமிராக்கள் 'க்ளிக்'கியபடி யேயிருந்தன.

லண்டன் தெருக்களில் காலார நடந்து பார்க்கும் ஆவல். வெறும் காய்ந்த இலைகள் தான் கீழே கிடந்தன; அதையும் முனிசி பாலிடி அலுவலர்கள் - ஃப்ளுரஸெண்ட் ஆரஞ்சு, பச்சை நிறங்களில்தான் ட்ரெஸ்; பெரும்பாலும் நீக்ரோக்கள்தான் - சுழன்று கொண்டேயிருந்த வாக்யூம் க்ளீனர்களை சர் ரென்று இழுத்த வண்ணம் சென்று கொண் டிருந்தார்கள்.

பஸ் ஸ்டாப்பில் ஒழுங்கான க்யூ வரிசை கள். வந்து நின்ற ஒரு பஸ்ஸில் ஏறினோம் - ஓட்டுநர், ஸாரி... ஓட்டுநி ஒரு பயில்வான் சைஸ் பெண்மணி! அவள் முன் அந்த ஊர் ஆண்களே மிளகுதான் என்றால், நம்மூர் ஆண்கள் வெறும் கடுகு! சீசன் பாஸ்களை செக் செய்து, டிக்கெட்டை கொடுத்து அவளே வெறும் 'ரை... ரைட்' கொடுத்து, பட்டனை அழுத்திக் கதவுகளை மூடத்தான் போலும்!


பஸ்ஸில் கனத்த மௌனம்; சரியாக நாங்கள் இறங்குமிடம் வந்ததும், எங்களுக்கு 'பை-பை' சொல்லி இறக்கிவிட்டு, எங்கள் ஓட்டலுக்குச் செல்லும் வழியையும் சொன் னாள்.

மெயின் ரோடிலிருந்து ஒரு தெருவுக்குள்

புகுந்தோம்.

டீ.வி. பொறுத்தப்பட்டிருந்த டிபார்ட் மெண்டல் ஸ்டோர்ஸில் நுழைந்து யோக் ஹர்டும் (தயிர்தான்), வேஃபர்ஸும் (சற்றே வளைந்து, ஒரே சைஸில் வரிசையாக அடுக் கப்பட்டு, என்ன ருசி!) வாங்கிக் கொண் டோம். ஒவ்வொரு பாக்கெட்டிலும் சில் போன்ற ஏதோ ஒன்று ஒட்டப்பட்டிருக்கிறது. நாம் பில்லை செட்டில் செய்யும்போது அதை எடுத்துவிட்டுக் கொடுக்கிறார்கள். யாராவது பணம் கொடுக்காமல் ஏமாற்ற நினைத்தால், கடையை விட்டுத் தாண்டும் தருவாயில் 'கீ" என்றொரு சப்தமெழுப்பி, காட்டிக் கொடுத்து விடுமாம்!

மறுநாள் காலையே நெதர்லாண்ட்ஸ் பயணமென்பதால் சீக்கிரமே துயில் கலைந் தோம்; பக்கத்திலேயேயிருந்த டயானாவின் அரண்மனைக்குப் பொடி நடையாக ஒரு விஸிட் செய்துவிட்டுப் புறப்படுவோமே என்று கிளம்பினோம். இளம் காலைப் பொழுதில் பனிச்சென்ற நெரிசலில்லாத தெருக்களில் நடப்பதே இன்பமாக இருந்தது. தூரத்தில் ஏராள புல்வெளிக்குப் பின்னர் அரண்மனை தெரிந்தது.



• லண்டன் பிரிட்ஜ்

அந்தச் சமயம் பார்த்து, எங்களை ஒட்டி ஒரு கார் வந்து நின்றது. உள்ளேயிருந்து, ஹிப்பி போன்ற ஒரு மனிதன் வெளியே தலையை நீட்டி, "ஹலோ" என்றான். நாங் கள் ஹலோவைத் திருப்புமுன் அவன் சரித் திரத்தையே அவிழ்த்து விட்டான். "நான் இத் தாலியன்; சொந்த கார்மெண்ட் பிஸினஸ்! இங்கே "ஹாரட்ஸில்" சில ப்ளேஜர்களை ஸாம்பிள் காட்டி ஆர்டர் பிடிக்க வந்தேன். நேற்றிரவு மாண்டே கார்லோ சென்று விளையாடியதில் (பெரிய சூதாட்ட மையம்) கைப்பணமெல்லாம் கரைந்து விட்டது. ஊருக்குப் போக, பெட்ரோல் போடக் கூட காசில்லை! இதோ... இந்த ப்ளேஜர்களை வைத்துக் கொண்டு முடிந்ததைக் கொடுங் களேன்" என்று அவனுடைய பாஸ்போர்ட், மனைவி மக்களுடன் கூடிய குடும்ப ஃபோட்டோ, லைசன்ஸ், எல்லாவற்றையும் காட்டிக் கதறினான்.

இத்தாலியன் என்ற உடனேயே குலை நடுங்கியது (மாஃபியா கவலைதான்.) புத்தம் புது உயர்ரக உல்லன் ப்ளேஜர்களைப் பார்த் ததும் அதிகமாகப் பல்ஸ் அடித்தது – "ஹாரட்ஸி"லிருந்து திருடினானோ? உள்ளே ஏதாவது சாரஸ், கொகெய்ன் வகையறா பதுக்கியிருப்பானோ? போலீஸ் துரத்து கிறதோ? அதுதான் நாடகமாடி தப்பிக்கப் பார்க்கிறானோ? யாராவது ஏர்போர்ட்டில் துரத்தி வந்து பிடிப்பார்களோ? – இங்கே சந்தேக மேகங்கள் கருவுற, அங்கே அவன் கண்களிலிருந்து தேம்ஸாகப் பெருகி எங்களை அலைக்கழித்தது.

"நாங்கள் வெளியூர்க்காரர் கள்; எங்களிடம் 25 பவுண்டு கள்தான் பாக்கி இருக்கின்றது" என தப்பிக்கப் பார்த்தோம். ''போதும், இருப்பதைக் கொடுங்கள்'' என்று குறைந் தது நூறு பவுண்டுகள் இருக்கக் கூடிய ப்ளேஜரை எங்கள் கையில் திணித்ததும், அசந்தே விட்டோம்! அந்த ப்ளேஜர்களை மேலும் கீழு மாக உதறி, மல்லாக்காக பிறாண்டிப் பார்த்து, உள்ளே ஏதேனும் ரகசியப் பைகள் தைக்கப்பட்டிருக்கின்றனவா என்று பூதக் கண்ணாடி வைத்துப் பார்க்காத குறையாய் பரிசோதித்துப் பார்த்தோம். எங்களுக்குத் தெரிந்தவரை ஒன்றுமில்லை!

என்றாலும் அன்றிருந்த மனநிலையில், லண்டனுக்கு டாடா காட்டிவிட்டு நெதர் லாண்ட்ஸுக்குப் பறந்தபோது, ஹீத்ரோவில் சர்தார்ஜிகளின் சிநேகமான "இஸ்மயில்'' கூட சி.ஐ.டி. சிரிப்பாக சந்தேகிக்க வைத்தது!

(தொடரும்)

திருவிழா முடிந்து திரும்பிப் போகையில் ஒரு தோசைக்கல் வாங்கிப் போக வேண்டும் என்று மீனா நினைத்துக் கொண்டாள். இரும்புப் பாத்திரக் கடையைப் பார்க்கிறபோது மட்டும் இந்த நினைவு வரும்.

பொரி கடலைக்கடைக்காரர்கள் இரும்பு வாணலியில் கரண்டியால் 'டங்டங்'கென்று தட்டிக் கூப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். ஒரு வளையல் கடையில் ரேடியோ பாடிக் கொண்டிருக்க, உட்கார்ந்தவாக்கில் ஒரு ஆள் தூங்கிக் கொண்டிருந்தான்.

ஆளில்லாத பெரிய பெரிய ராட்சத ராட்டினங்களும், சர்க்கஸ் மற்றும் மேஜிக் கூடாரங்களும், மிருகக் காட்சிசாலையும் பார்க்க மீனாவுக்குச் சங்கடமாயிருந்தது.

இந்த வருடம் சூதாட்டத்திற்கென்று தனி இடம் ஒதுக்கியிருந்தார்கள். லங்கடாக் கட்டையிலும், மூணு சீட்டு ஆட்டத்திலும் கூட்டம் கொஞ்சமிருந்தது. பீடிக் கம்பெனிக்காரர்கள் போடும் கோடு விழுந்த இரண்டாந்தரத் திரைப்படங்களைப் பார்க்க வருகிற கூட்டம் கூடக் குறைந்து விட்டது. எது எப்படியோ, முத்துராமனுக்கு இரவில் குடிப்பதற்கு சாராயம் கிடைத்து விடுகிறது. நேற்றிரவு குடித்துவிட்டு வந்துதான் முத்துராமன் மீனாவை அடித்தான்.

திருவிழா நடக்காத ஒரு நாளில் மீனா முத்துராமனுடன் இந்த ஊருக்கு வந்திருக்கிறாள். ஆடம்பரமும், அலட்டலும், இரைச்சலும், சந்தடியும் இல்லாமல் ஆற்றை ஒட்டிய சிவன் கோவிலும் ஆற்றின் மேல் குறுக்கில் கட்டப்பட்டிருந்த பாலமும், சற்றுத் தள்ளி ரோட்டின் மேல் நின்ற அம்மன் கோவிலும், சுற்றிப் பசேலென்று தெரிகிற வயல்வெளியும் எவர் மனதையும் கொள்ளை கொள்ளும்.

மீனா பாலத்தின் மீது ஏறி நடந்தாள். தூரத்தில் இரண்டு பஸ்ஸும், ஒரு லாரியும் ஊர்ந்த மாதிரி வந்து கொண்டிருந்தன. ஆறு வருடமாக இந்த ஊர்த் திருவிழாவுக்கு வருகிறாள். இவ்வளவு குறைவான கூட்டத்தை அவள் பார்த்ததில்லை. பாலத்தின் மீது நிற்கக் கூட இடம் இருக்காது.

பாலத்துத் திண்டின் மீது ஏறி அமர்ந்து சின்ன துணி மூட்டையை பக்கத்தில் வைத்து ஆயாசமாக மூச்சு விட்டாள். நாலு மணி வெயிலில் வியர்வை ஜாக்கெட்டை மீறி சேலையை நனைத்தது. புடைவைத் தலைப்பால் விசிறிக் கொண்டாள்.

பாலத்தின் கீழ் ஆறு ஓடிக் கொண்டிருந்தது. தண்ணீர் குறைவாக இருந்தாலும், அம்மாவின் முந்தானையைப் பிடித்துக் கொண்டு நடை பழகுகிற குழந்தை மாதிரி தவழ்ந்து கொண்டிருந்தது. மாலைச் சூரியனின் ஒளி ஆற்றில் சிதறி நீரை வைரக் கற்களாய் அடித்திருந்தது. ஆற்றின் மேற்குத் திக்கில் சினிமாக்காரர்கள் வந்து அவ்வப்போது படமெடுக்கிற நீர்த்தேக்கம், நீரை குழாய்த் தண்ணீர் மாதிரி சொரிந்து கொண்டிருந்தது. பாலத்தின் கீழ் தீச்சட்டி எடுக்கிற பெண் உறுமி மேளத்தின் 'டகட டகட டண் டணக்கா' அடிக்கேற்ப ஆடிக் கொண்டிருந்தாள்.

மீனாவைப் பார்த்து ஒரு கான்ஸ்டபிள் குச்சியுடன் ஓடி வந்தான்.

"இங்கெல்லாம் ஒக்காரக் கூடாது. எந்திரி."

அவனை மனசுக்குள் திட்டியபடி எழுந்தாள். பாலத்தில் இருந்து சரிவில் இறங்கி சிவன் கோவில் பக்கம் போனாள். அந்தப் பக்கம்தான் கூட்டமிருக்காது. சீக்கிரம் குளித்துவிட்டுப் போகலாம். கன்னத்தைத் தொட்டுப் பார்த்துக் கொண்டாள். முத்துராமன் முதல் நாளிரவு அடித்ததில் உதட்டுக் கருகே ரத்தம் கட்டி வீங்கியிருந்தது. இன்றைக்கும் அடிப்பான் என்று தோன்றியது.

மீனா ஆற்றில் இறங்கி, துணியை நனைத்துப் பாறை மேல் வைத்தாள். ஆற்றில் இரண்டு மூன்று சிறுவர்கள் கல்லெறிந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். இவளுக்கு பால முருகன் ஞாபகம் வந்தது.

பாலமுருகனும் ஆற்றில்



கல்லெறிவான். எறிகிற ஒவ்வொரு கல்லும் நீர்த் திரைக்கு மேல் பட்டுத் துள்ளித் துள்ளி தவளை மாதிரி போய் விழும். ஒவ்வொரு கல்லும் ஏழெட்டுத் துள்ளலாவது துள்ளும். பாலமுருகனுக்கு நிறைய வித்தைகள் தெரியும். தென்னை மரத்தில் சரசரவென ஏறி இரண்டாள் உயரத்திலிருந்து பல்டியடிப்பான். ஆற்றில் குளித்துக் கொண்டிருக்கையிலேயே நீரில் சடக்கென கையை விட்டு மீனைப் பிடிப்பான். சமயங்களில் தண்ணீர்ப் பாம்பு கூட கிடைக்கும். பனவோ லையைப் பிய்த்துக் காற்றாடி செய்து தருவான். மாவிலையைச் சுருட்டி "பீப்பீ! பீப்பீ!" என்று சத்தம் வருகிற மாதிரி விசில் செய்து தருவான். பாலமுருகனைப் பார்த்து ஆறு வருடத்திற்கு மேலானாலும் மீனாவுக்கு நேற்றுப் பார்த்த மாதிரி இருந்தது.

மீனாவின் சொந்த ஊர் சோழவந்தானுக்குப் பக்கத்தில் உள்ளடங்கின ஒரு கிராமம். சுப்புராம் மாமாதான் பாலமுருகனுடன் இவளை மதுரை சித்திரைத் திருவிழாவிற்கு அனுப்பினார். கூடவே பக்கத்து வீட்டு 'நண்டு கோபால்'

நண்டு கோபாலின் அனத்தல் தாங்காமல் தான் 'மரணக்கிணறு' பார்க்கப் போனார்கள். மேலே இவர்களுக்கு நிற்கக் கூட இடம் இல்லாமல் அவ்வளவு கூட்டம். மீனா பெண்கள் கூட்டத்தில் சேர்ந்து கொண்டு தலையை எட்டி எட்டிப் பார்த்தாள்.

நல்ல ஆழமான கிணறு தான். அகலமான மரச்சட்டங்களால் ஆன கிணறு. இதில் எப்படி இவர்கள் மோட்டார் சைக்கிள் விடுவார்கள் என்று நினைக்க நினைக்க ஆச்சரியமாக இருந்தது.

முத்துராமனை அப்போதுதான் பார்த்தாள். நல்ல சிகப்பு நிறம். படிய வாரிய தலை. சிகப்புச் சட்டையும், பச்சைப் பேண்டும் அவன் அணிந்திருந்த ஷூவும் அவனை சினிமாக்காரனாகத் தோற்றம் காட்டியது.

மரணக் கிணற்றைச் சுற்றி மக்கள். மேலிருந்து கிணற்றில் மோட்டார் சைக்கிளில் இறங்குவதற்குத் தோதாக மரச் சட்டங்களால் ஆன ஒரு வழி. அதன் உச்சியில் கூட்டம் சேரும்வரை, மோட்டார் சைக்கிளின் ஆக்ஸிலேட்டரைத் திருகியபடி இருந்த முத்துராமன் தலைகீழாய், சர்ரென கிணற்றுக்குள் இறங்கினான். பார்க்கிற எல்லோருடைய இதயமும் படபடக்க பல சாகசங்கள் செய்தான்.

'டர்...டர்...' என்று ஒலிக்கிற மோட்டார் சைக்கிள் சப்தமும், மோட்டார் சைக்கிளின் அசைவுக்கேற்ப தடதடக்கிற மரப்பலகைகளின் ஒலியும் இவளை என்னமோ செய்தது. குறுக்கும் நெடுக்குமாய் அவன் மோட்டார் சைக்கிளை ஓட்டுகையில், 'இதோ இப்போ விழுந்துடுவான்' என்றே அவ

பாலு சத்யா

ளுக்குத் தோன்றியது. முத்துராமன் மரணக் கிணற்றுக்குள் சுற்றிச் சுற்றி வந்தான். ஒரு கையால் மோட்டார் சைக்கிளின் ஹேண்ட் பாரை பிடித்துக் கொண்டு ஓட்டியபடியே, கூட்டத்தினருக்கு சலாம் வைத்தான். மோட்டார் சைக்கிளில் கண்ணை மூடிப் படுத்துக் கொண்டான். இரண்டு கையையும் விட்டு விட்டு மோட்டார் சைக்கிளை ஓட்டிக் காட்டினான்.

காட்சி முடிந்து வெளி வருகையில், முத்துராமனின் சிரிப்பும், முகமும், சாகசமும்



''நமது கட்சியில் களை எடுத்தால்தான் கட்சிக்கு நல்லதுன்னு நான் பேசினது வம்பாப் போச்சு!''

''ஏன் தலைவரே?''

''களை எடுத்த செலவுன்னு பொருளாளர் ஐயாயிரம் ரூபாய்க்கு கணக்கு எழுதிட்டாரு!''

– அம்பை தேவா

மீனாவை வசீகரித்து, ஆக்கிரமித்து விட்டிருந்தது. அவளின் பெற்றோரின் அகால மரணத்திற்குப் பிறகு, கண்ணுக்குக் கண்ணாய் வளர்த்த சுப்புராம் மாமாவையும், முறை மாப்பிள்ளை பாலமுருகனையும் விட்டு விட்டு அவள் முத்துராமனுடன் ஓடிப் போனாள். முத்துராமன் குளத்திற்குத் தண்ணீரெடுக்க வந்த மீனாவை மோட்டார் சைக்கிளில் தூக்கிப் போனான்.

பாவாடையை மார்புக்குமேல் இறுகக் கட்டிக் கொண்டு முங்கினாள். குளிர்ந்த நீரில் முங்கியவுடன் ஏதோ பாரம் இறங்கினாற்போல் இருந்தது. இப்படியே கிடந்து விடலாமா என்று தோன்றியது. ஏற்கெனவே எரிச்சலிலிருக்கிற முத்துராமன், தாமதமானால் இன்னும் அடிப்பான் என்று தோன்ற, அவசர அவசரமாய்த் துணியைத் துவைக்க ஆரம்பித்தாள்.

நேரமாக ஆக கூட்டம் குறைந்து கொண்டிருந்தது. முத்துராமன் மைக்கில் அசுவாரசியமாய் கூட்டத்தை அழைத்துக் கொண்டிருந்தான். குரலில் போகிற வருகிறவர்களை இழுக்கிற வேகம் இருந்த அதே நேரத்தில் நம்பிக்கையின்மையும் நன்றாகவே தெரிந்தது.

மீனா கிணற்றின் மேல் தளத்தில் நின்று கொண்டு மோட்டார் சைக்கிளின் ஆக்ஸிலேட்டரைத் திருகியபடி, அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

கூட் டமே இல்லை! கலெக்ஷன் காசு பெட்ரோல் செலவுக்குக் கூடக் காணாது.

முத்துராமனின் வெறுப்பும் கோபமும் இனி தன் மேல்தான் திரும்பும் என்பது அவளுக்குக் கவலையளித்தது. கணபதியும், ராஜேந்திரனும், முத்துராமனிடம் வந்து பேசினார்கள். முத்துராமன் அவர்களிடம் மீனாவைக் காட்டி ஏதோ சொன்னான். மீனா முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

தூரத்தில் 'ஸ்டார் சர்க்கஸ்' கூடாரம் தெரிந்தது. கூடாரத்திற்கு முன்பாக நாலுக்கு நாலு சைஸில் சின்னதாகப் போடப்பட்ட மேடையில் மகேஷூம், கனகாவும் 'அண்ணாநகரு ஆண்டாளு...' பாட்டுக்கு ஆடிக் கொண்டிருந்தார்கள். நின்று பார்த்துக் கொண்டிருந்த கூட்டத்திலிருந்து ஒவ்வொருவராக டிக்கெட் வாங்கி உள்ளே சென்று கொண்டிருந்தார்கள்.

முத்துராமன் இரண்டு நாட்களாய் மீனாவிடம் சொல்லிக் கொண்டிருக்கிறான். அவளுக்குத்தான் ஆடப் பிடிக்கவில்லை. 'ஸ்டார் சர்க்கஸ்' கனகாவைவிட மீனா நல்ல சிகப்பு. ஆடுகிறதுக்கேற்ப நல்ல உடல் வாகு. ஐந்து நாட்களாய் கணபதியும் ஆடிப்பார்த்தான். அவன் ஆட்டத்திற்காக யாரும் வந்ததாகத் தெரியவில்லை. இன்றைக்கு அவன் ஆடாதது அவனுக்கே அலுத்து விட்ட மாதிரி பட்டது.

ஏற்கெனவே இரட்டை அர்த்தம் தொனிக்கிற சினிமாப் பாடல்கள். இதற்கு

ஆடினால் கூட்டத்திலே எவனாவது கையைப் பிடித்து இழுத்தாலும் இழுப்பான் என்று மீனா நினைத்துக் கொண்டாள்.

முத்துராமனுக்கு மீனா ஆடாததில் கோபம். அவள் ஆடினால் நிச்சயம் நல்ல கூட்டம் வரும் என்று நம்பினான். அந்த ஸ்டார் சர்க்கஸில் ஒன்றுமில்லை என்று அவனுக்கு மட்டுமல்ல, பார்க்க வருபவர்களுக்கே தெரியும். ஒரு 'பார்' விளையாட்டும், நாய் வளையம் தாண்டுகிற காட்சியும் தவிர வேறொன்றுமில்லை. கூட்டம் மொத்தமும் டான்ஸ் பார்ப்பதற்குத்தான் வந்தது.

முத்துராமன் கீழேயிருந்து கையை ஆட்டினான். மீனா மோட்டார் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு தலைகீழாய்க் கிணற்றில் இறங்கினாள். கிணற்றுக்கு மேலிருந்து 'இன்னும் ஸ்பீடா! இன்னும் ஸ்பீடா...' என்று குரல்கள் கேட்டன. மரணக்கிணற்றின் உச்சிக்கு வருகையில், ஒரு வினாடி குதித்து விடலாமா என்றுகூடத் தோன்றியது. காலையிலிருந்து ஒன்றும் சாப்பிடாத வயிறு பசித்தது. அவள் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தபோதே கிணற்றின் கீழ்ப்புறக் கதவைத் திறந்து கொண்டு கணபதி சைக்கிளில் நுழைந்தான். குறுக்கும் நெடுக்குமாய், எதிரும் புதிருமாய், சைக்கிளும் மோட்டார் சைக்கிளும் மோதுவது மாதிரி கிணற்றைச் சுற்றிச் சுற்றி வந்தன.

காட்சி முடிந்ததும் மீனா கூடாரத்திற்குள் போய் தரையில் உட்கார்ந்தாள். மண்பானையில் இருந்து இரண்டு தம்ளர் தண்ணீர் எடுத்துக் குடித்தாள். முத்துராமன் வந்தான்.

''இன்னிக்காவது ஆடுவியா, மாட்டியாடி...''

''நான் மாட்டேன்.''

''பொட்டக் கழுத... பட்டினி கெடந்து செத்தாத்தான் அறிவு வரும். நாயி...'' அவளை இரண்டு மிதி மிதித்துவிட்டு, கவுண்டரருகே போய் நின்றுகொண்டு பீடி பற்ற வைத்தான். தூரத்தில் 'ஸ்டார் சர்க்கஸ்' கூடாரத்தில் கூட்டம் தெரிந்தது. கனகா மட்டும் 'ஓயிட்டு லகான் கோழி ஒண்ணு கூவுது...' பாட்டுக்கு ஆடிக் கொண்டிருந்தாள்.

முத்துராமன் கையிலிருக்கிற முப்பத்தாறு ரூபாயில், நாலு பேருக்கு இட்டிலி வாங்கலாமா, மோட்டார் சைக்கிளுக்கு பெட்ரோல் போடலாமா என்று யோசித்துக் கொண்டிருந்தான். ●



இருபத்தாறாம் அத்தியாயம்

இரத்தம் கேட்ட கத்தி!

அந்த வீர வைஷ்ணவர் எப்படி அங்கு வந்து சேர்ந்தார், எதற்காக வந்திருக்கிறார் என்பதைப் பற்றி வந்தியத்தேவனுடைய உள்ளம் கலக்கமடைந்திருந்தது. ஆயினும் அதை அவன் வெளியில் காட்டிக் கொள்ளவில்லை.

"என்ன வேடிக்கையைச் சொல்வது? சற்று முன்னால்தான் உங்களைப் பற்றி நினைத்துக் கொண்டேன். நிமிர்ந்து பார்த்தால் தாங்கள் கவரேறிக் குதித்து வருகிறீர்கள். 'கொடுக்கிற தெய்வம் கூரையைப் பொத்துக் கொண்டு கொடுக்கும்' என்று சொல்கிறார்களே, அது சரிதான்!" என்றான்.

"அப்பனே! சற்று முன்னால் என்னைப் பற்றி நினைத்தாயா? எதற்காக? இந்த நர மனுஷனைப் பற்றி நீ ஏன் நினைக்க வேண்டும்? சாக்ஷாத் இராம பிரானைப் பற்றி நினைத்தாலும் பயன் உண்டு...."

"தங்கள் வாய்க்குச் சர்க்கரைதான் போட வேண்டும். முதலில் நான் இராம பிரானைப் பற்றித்தான் நினைத்தேன். இங்கு வரும்போது கடலின் அக்கரையில் இராமேசுவரக் கோபுரம் தெரிந்தது. இராமர் அங்கே தானே சிவனைப் பூஜை செய்து இராவணனைக் கொன்ற பாவத்தைப்

போக்கிக் கொண்டார் என்று எண்ணி னேன்...''

"நில்லு, தம்பி! நில்லு!''

"நிற்க முடியாது, சுவாமிகளே! என் னால் நிற்க முடியாது. நடந்து நடந்து, நின்று நின்று, என் கால்கள் கெஞ்சுகின் றன. தாங்களும் கருணைபுரிந்து உட் காருங்கள். அப்புறம், இராமரைப் பற்றி நினைத்தேனா? உடனே இராம பக்த னாகிய அனுமாரைப் பற்றி எண்ணி யதும், தங்கள் நினைவு வந்தது. உடனே பார்த்தால், தாங்களே வந்து விட்டீர்கள். சுவரேறிக் குதித்து மட்டும் வந்தீர்களா! அல்லது அனுமாரைப் போல் கடலையே தாண்டிக் குதித்து வந்தீர்களா?''

"தம்பி! மகா பக்த சிரோமணியான அனுமார் எங்கே? அடியேன் எங்கே? அனுமார் இந்த இலங்கைக்கு வந்து அக்ஷய குமாரன் முதலிய ராட்சதர்களை அதாஹதம் செய்தார். என்னால் கேவ லம் ஒரு பூனைக்கு வழி சொல்ல முடிய வில்லை. இதோ பார்! எப்படி ஒரு பூனை என் கால்களைப் பிறாண்டி இரத் தக் காயம் செய்து விட்டது?'' என்று ஆழ்வார்க்கடியான் தன் கால்களில் ஏற்பட்டிருந்த காயங்களைச் சுட்டிக்காட் டினான்.

"அடடா! இப்படியா நேர்ந்து விட் டது? ஆனால், கேவலம் ஒரு பூனை யோடு தாங்கள் சண்டைக்குப் போன காரணம் என்ன?....''

"நான் சண்டைக்குப் போகவில்லை. அதுவேதான் என்னுடன் வலுச் சண் டைக்கு வந்தது...''

"அது எப்படி, சுவாமிகளே!''

"உன்னைத் தேடிக் கொண்டு நான் வந்தேன். வாசற்காவலர்களுக்கு டிமிக்கி கொடுத்துவிட்டுக் கொல்லைப்புறச் சுவர் வழியாக ஏறிக் குதித்தேன். கீழே நான் கால் வைக்கிற இடத்தில் வேண்டு மென்று அந்தப் பூனை தன் வாலை நீட் டிக் கொண்டிருந்தது. என் கால் அதன் வாலை அப்படி இலேசாகத்தான் தொட் டது. இருந்தாலும், அந்தப் பொல்லாத பூனை தன் கால் நகங்களினால் என் னைத் தாக்கத் தொடங்கி விட்டது. தம்பி! நான் சொல்வதைக் கேள்! புலி யோடு சண்டை போட்டாலும் போட லாம்; ஆனையோடு சண்டை போட்டா லும் போடலாம்; பூனையோடு மட்டும் சண்டை போடக் கூடாது!''

''சுவாமிகளே! அந்த இரகசியம் எனக்கு இப்போது தெரிந்து போய் விட்டது....''

"எந்த இரகசியம்?''

"அந்தப் பூனை இங்கே என் அறைக் கும் வந்தது. என் நெற்றியில் வாலினால் தடவிக் கொடுத்தது. என்னோடு கொஞ்சி விளையாடியது. என்னை நகத்தினால் பிறாண்டவில்லை. உம்மை மட்டும் தாக்கிப் பிறாண்டியது! அதற்குக் காரணம் என்ன? வீரவைஷ்ணவர் களைக் கண்டால் பிடிக்காத வீரசைவப் பூனை அது!....''

''ஓகோ! அப்படியோ? இந்த யோசனை எனக்குத் தோன்றாமல் போயிற்றே? வீர சைவப் பூனை என்று தெரிந்திருந்தால் தடியினால் நாலு திருச் சாத்துச் சாத்தியிருப்பேனே?''

"உம் கையில் தடி இல்லாததே நல் லது. ஏனென்றால், இந்த க்ஷேத்திரத்துக்கு வந்ததிலிருந்து என் உடம்பிலே கூட வீர சைவ இரத்தம் கொதிக்கத் தொடங்கி யிருக்கிறது. என் உறையிலுள்ள கத்தி 'வீர வைஷ்ணவ இரத்தம் வேண்டும்' என்று அழுகிறது. நீர் எனக்குச் செய்த பேருதவியை நினைத்து அதை அடக்கி வைத்திருக்கிறேன்!''

"அப்பனே! உனக்கு நான் ஓர் உதவி யும் செய்யவில்லையே?''

''வைஷ்ணவரே! தங்கள் சகோதரி யாகிய பழுவூர் இளையராணியைப் பற்றி எனக்கு நீர் சொல்லவில்லையா?''

"ஆமாம்; சொன்னேன்.''

"பழுவூர் இளையராணி கடம்பூருக்கு அருகில் மூடு பல்லக்கில் போன போது, திரை விலகியதே, அப்போது அந்தத் தேவியை நீர் எனக்குச் சுட்டிக்காட்ட

வில்லையா?"

"ஆம், ஆம். அதனால் என்ன?"

"சொல்லுகிறேன். அதே பல்லக்கு தஞ்சைக் கோட்டைக்கருகில் சென்று கொண்டிருக்கும்போது நான் பார்த்தேன். பல்லக்குச் சுமப்பவர்கள் வேண்டுமென்று வந்து என் குதிரையின் மேல் இடித்தார்கள். நான் நியாயம் கோருவதற்காகப் பல்லக்கின் திரையை விலக்கினேன்...."

"உள்ளே இருந்தது யார்?"

"பழுவூர் இளையராணி சாக்ஷாத் நந்தினி தேவிதான்!"

"ஓஹோ! நீ அதிர்ஷ்டசாலி! நான் ஆன மட்டும் முயன்றும் நந்தினியைப் பார்க்க முடியவில்லை. உனக்கு அது கைகூடி விட்டதே!"

"அதிர்ஷ்டம் வரும்போது அப்படித்தான் தானாகவே வரும்!"

"அப்புறம்?"

"நான் தங்கள் பெயரைச் சொன்னேன். தேவிக்கு முக்கியமான செய்தி தாங்கள் சொல்லி அனுப்பியிருப்பதாகக் கூறினேன்...."

"நானும் பார்த்தாலும் பார்த்தேன். உன்னைப் போல் கூசாமல் பொய் சொல்லுகிறவனை இந்தப் பிரபஞ்சத்தில் பார்த்ததே கிடையாது...."

"வைஷ்ணவரே! என் மூதாதைகளுக்குக் கவிஞர்களின் பேரில் மிக்க பிரியம். அவர்களே கவிதைகளும் பாடியிருக்கிறார்கள்...."

"அதனால் என்ன?"

"கவி பரம்பரை இரத்தம் என் உடம்பிலும் ஓடுகிறது. அதனால் சில சமயம் கற்பனை பொங்கி வருகிறது. உம்மைப் போன்ற பாமரர்கள் அதைப் பொய் என்று சொல்வார்கள்...."

"நல்லது; அப்புறம் என்ன நடந்தது?"

"என் கற்பனையைக் கேட்டு வியந்து நந்தினிதேவி பழுவூர் முத்திரை மோதிரத்தைக் கொடுத்தார். அரண்மனையில் வந்து பார்க்கச் சொன்னார்...."

"போய்ப் பார்த்தாயா?"

"பின்னே, பார்க்காமலிருப்பேனா? உடனே போய்ப் பார்த்தேன். என் வீரதீர பராக்கிரமங்களைப் பற்றி நானே சொல்லித் தெரிந்து கொண்ட நந்தினி தேவி எனக்கு ஒரு முக்கியமான வேலை கொடுத்தார்."

"அது என்ன வேலை?"

"இந்த இலங்கையில் மதுரைப் பாண்டிய வம்சத்து மணிமகுடமும் இந்திர மாலையும் இருக்கின்றனவாம். இலங்கை அரச குடும்பத்தார் மலை நாட்டில் ஒளித்து வைத்திருக்கிறார்களாம். 'அந்த நகைகளை எப்படியாவது தேடிக் கொண்டு வந்து விடு!' என்று சொல்லி அனுப்பினார். அது இவ்வளவு கஷ்டமான வேலை என்று எனக்குத் தெரியாமல் போயிற்று..."

"பெரிய பழுவேட்டரையரின் பொக்கிஷத்தில் உள்ள ஆபரணங்கள் ஆயிரம் கழுதைப் பொதி கனமிருக்கும் என்கிறார்கள். அவ்வளவும் இளையராணிக்குப் போதவில்லையாக்கும். சரி, கொண்டு வந்தால், உனக்கு என்ன தருவதாகச் சொன்னாள்?"

"தஞ்சைக் கோட்டைக் காவலைச் சின்னப் பழுவேட்டரையரிடமிருந்து பிடுங்கி எனக்குத் தந்து விடுவதாகச் சொன்னார்...."

"தம்பி! தம்பி! தஞ்சைக் கோட்டைக் காவல் உனக்குக் கிடைத்தால், தட்டுத் தடங்கலில்லாமல், நான் கோட்டைக்குள் வரலாம் அல்லவா?"

"அழகாய்த்தானிருக்கிறது. எனக்குத் தஞ்சைக் கோட்டைக் காவல் கிடைக்கிற வழி என்ன? நான்தான் இந்த ஊரில் வந்து இப்படி அகப்பட்டுக் கொண்டேனே?" என்று வந்தியத்தேவன் மிகவும் சோகமான குரலில் கூறினான்.

"ஏன் அகப்பட்டுக் கொண்டாய்? எதற்காக உன்னைச் சிறைப்படுத்தியிருக்கிறார்கள், தெரியுமா?" என்று ஆழ்வார்க்கடியான் கேட்டான்.

"பழுவூர்ராணி கொடுத்த முத்திரை மோதிரத்தை என்னுடன் கொண்டு



வந்தேன். இங்கேயும் அதற்குச் செல்வாக்கு இருக்கும் என்று எண்ணினேன். அதுதான் தவறாய்ப் போயிற்று."

"அது தவறுதான், தம்பி. பெரிய தவறு! இங்கே சேநாதிபதி கொடும்பாளூர்ப் பெரிய வேளார் அல்லவா? பழுவூர் வம்சத்துக்கும் கொடும்பாளூர் வம்சத்துக்கும் பெரும்பகை என்பது உனக்குத் தெரியாதா?"

"தெரியாமல் வந்துதான் அகப்பட்டுக் கொண்டேன். என்ன செய்கிறதென்று தெரியவில்லை."

"தம்பி! நீ கவலைப்பட வேண்டாம்!"

"கவலைப்படாமல்..."


"உன்னை விடுதலை செய்வதற்காகவே நான் இங்கு வந்திருக்கிறேன்..."

"ஓகோ!"

"உன்னை ஒரு சமயம் ஓர் உதவி கேட்டேன். நீ மறுத்து விட்டாய். ஆயினும் நான் உனக்கு உதவி செய்ய வந்தேன். என்னுடன் எழுந்து வா! இந்தக் கணமே இச்சிறையிலிருந்து தப்பி விடலாம்!"

"வைஷ்ணவரே! தாங்கள்





சீக்கிரமே இங்கிருந்து போய் விடுங்கள்!"

"ஏன், அப்பனே....!"

"என் உறையிலுள்ள கத்தி அதிகமாகப் புலம்பத் தொடங்கியிருக்கிறது. ஒரு 'வீர வைஷ்ணவனுடைய இரத்தம் வேண்டும்' என்று கேட்கிறது."

"கேட்டால் கேட்கட்டுமே! என் உடம்பில் வேண்டிய இரத்தம் இருக்கிறது. உன் கத்திக்குத் தேவையானால் கொஞ்சம் சாப்பிட்டு விட்டுப் போகட்டும். நீ எழுந்து என்னுடன் வா!"

"இல்லை, நான் வர முடியாது!"

"காரணம் என்ன?"

"கண்ணைச் சுற்றிக் கொண்டு எனக்குத் தூக்கம் வருகிறது. எத்தனையோ நாட்களாக இரவில் நான் தூங்கவில்லை. இன்றைக்கு நன்றாய்த் தூங்குவது என்று தீர்மானித்திருக்கிறேன். அதனால்தான் பூனையைக் கூடத் தூக்கி எறிந்தேன்."

"தம்பி! இது என்ன இப்படிச் சொல்லுகிறாய்? இளைய பிராட்டி குந்தவை தேவியிடம் நீ ஒப்புக் கொண்ட காரியத்தை இப்படித்தானா நிறைவேற்றப் போகிறாய்? இந்த ஓலையைப் 'பொன்னியின் செல்வன்' கையில்

சேர்ப்பிக்கும் வரையில் இரவென்றும் பகலென்றும் பார்க்காமல் பிரயாணம் செய்வேனென்று நீ ஒப்புக் கொள்ளவில்லையா!''.... இவ்விதம் சொல்லி ஆழ்வார்க்கடியான் தன்னுடைய மடியிலிருந்த ஓலையை எடுத்து வந்தியத்தேவனிடம் கொடுத்தான்.

அதை ஆர்வத்துடன் வந்தியத்தேவன் வாங்கிக் கொண்டான். இதுவரையில் ஆழ்வார்க்கடியான் தன் வாயைப் பிடுங்கி வஞ்சித்து ஏமாற்றப் பார்க்கிறான் என்றே அவன் எண்ணியிருந்தான். இப்போது அந்த எண்ணம் மாறியது.

''இந்த ஓலை தங்களிடம் எப்படி வந்தது?'' என்று கேட்டான்.

''சேநாதிபதி விக்கிரமகேசரிதான் கொடுத்தார். இதோ இந்தப் பழுவூர் பனை இலச்சினையையும் திருப்பிக் கொடுக்கச் சொன்னார். உனக்கு எப்போது இஷ்டமோ அப்போது பிரயாணம் புறப்படலாம் என்றும் சொன்னார்....''

''வைஷ்ணவரே! தங்களுக்கு என் மனமார்ந்த நன்றி.''

''நன்றியையெல்லாம் சேர்த்து வைத்துக் கொள், சமயம் வரும் போது கொடுக்கலாம்.''

''ஐயா! இளவரசர் தற்சமயம் எங்கே இருக்கிறார் என்று தெரியுமா?''

''அது யாருக்கும் தெரியாது. அநுராதபுரத்திலிருந்து மலைநாட்டுக்குச் சென்றிருக்கிறார். தேடிக் கண்டுபிடித்தேயாக வேண்டும். உன்னோடு வழிகாட்டிப் போகும்படி சேநாதிபதி எனக்கும் கட்டளையிட்டிருக்கிறார். நீ விரும்பினால் வருகிறேன்.''

வந்தியத்தேவனுக்கு மீண்டும் சிறிது சந்தேகம் உண்டாயிற்று.

''சுவாமிகளே! புறப்படுவதற்கு முன்பு சேநாதிபதியை நான் பார்க்கலாமா?'' என்று கேட்டான்.

''அவசியம் பார்க்கலாம். பார்த்துவிட்டுத்தான் பிரயாணம் கிளம்ப வேண்டும். வானதி தேவியைப் பற்றிச் சேநாதிபதியிடம் தெரிவியாமல் போகலாமா!'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

இதைக் கேட்ட வந்தியத்தேவன் இந்த வீர வைஷ்ணவனுக்கு உண்மையிலேயே மந்திர வித்தை கைவந்திருக்குமோ என்று வியப்படைந்தான்.

இருபத்தேழாம் அத்தியாயம்

காட்டுப் பாதை

கொடும்பாளூர்ப் பெரிய வேளாராகிய சேநாதிபதி பூதி விக்கிரமகேசரி வயது முதிர்ந்த அனுபவசாலி; பல போர்க்களங்களில் பழந்தின்று கொட்டையும் போட்டவர். சோழ குலத்தாருடன் நெருங்கிய நட்பும் உறவும் பூண்டவர்.

அவருடைய சகோதரராகிய கொடும்பாளூர்ச் சிறிய வேளார் சில ஆண்டுகளுக்கு முன்னால் இலங்கைப் போர்க்களத்தில் வீர சொர்க்கம் அடைந்தார். அவருடன் சென்ற சைன்யமும் தோல்வியடைந்து திரும்ப நேர்ந்தது. அந்தப் பழியைத் துடைத்துக் கொடும்பாளூரின் வீரப் பிரதாபத்தை மீண்டும் நிலைநாட்டுவதில் அவர் பெரிதும் ஆத்திரம் கொண்டிருந்தார். ஆகையாலேயே சற்று வயதானவராயிருந்தும் இலங்கைப் படைக்குத் தலைமை வகித்து அங்கு வந்திருந்தார்.

இலங்கைப் போரை நன்கு நடத்த முடியாமல் பழுவேட்டரையர்களால் வந்த இடையூறுகளைப் பற்றி முன்னமே

பார்த்தோமல்லவா? நெடுங்காலமாக அந்த இரண்டு சிற்றரசர் குலத்துக்கும் ஏற்பட்டிருந்த போட்டியும் பகைமையும் இதனால் இப்போது அதிகமாய் வளர்ந்திருந்தன.

எனவே, பழுவூர் முத்திரையிட்ட இலச்சினையுடன் அகப்பட்டுக் கொண்ட வந்தியத்தேவன் பாடு சேநாதிபதி பெரிய வேளாரிடம் கஷ்டமாகத்தான் போயிருக்கும். அதிர்ஷ்டவசமாக அநிருத்தப் பிரம்மராயரிடம் இதைப் பற்றி அவர் பிரஸ்தாபிக்க நேர்ந்தது. வந்தியத்தேவனைப் பற்றிய உண்மையை ஆழ்வார்க்கடியானிடமிருந்து தெரிந்து கொண்ட அநிருத்தர், அவனையே சேநாதிபதி பூதி விக்கிரம கேசரியிடம் சென்று உண்மையைத் தெரியப்படுத்தும்படி அவசரமாக அனுப்பியிருந்தார்.

வாணர் குலத்து வீர குமாரனை மேலும் கீழும் உற்றுப் பார்த்த சேநாதிபதி பூதி விக்கிரமகேசரிக்கு அவனிடம் நல்ல அபிப்பிராயம் உண்டாகியிருக்க வேண்டும். அன்பான குரலில், "தம்பி! உன்னை இங்கே சரியாகக் கவனித்துக் கொண்டார்களா? தங்குவதற்கு இடம், உணவு எல்லாம் சரிவரக் கிடைத்ததா?" என்று கேட்டார்.

"ஆம், சேநாதிபதி! ஒரு குறைவும் இல்லாமல் பார்த்துக் கொண்டார்கள். கூறிய ஏவலைச் செய்வதற்கு வாசலில் ஐந்தாறு சேவகர்கள் எப்போதும் காத்திருந்தார்கள். தங்குவதற்கு இடம் தாராளமாய்க் கிடைத்தது. இராப்போஜனத்துக்கு ஒரு பூனையை அனுப்பி வைத்தார்கள். அதை நான் சாப்பிட எண்ணியிருக்கையில் இந்த வீர வைஷ்ணவர் வந்து கெடுத்து விட்டார்! அந்த வீரசைவப் பூனைக்கு இந்த வீர வைஷ்ணவரைக் கண்டதும் கோபம் வந்து விட்டது. இவரை நகத்தினால் பிறாண்டி விட்டு அது ஓடி விட்டது!" என்றான்.

சேநாதிபதி, "ஓகோ! இந்தப் பிள்ளை ரொம்ப வேடிக்கைக்காரப் பையனாயிருக்கிறான்! திருமலை! இவன் சொல்வது உண்மையா?" என்று கேட்டார்.

"சேநாதிபதி! இவன் முன்னோர்கள் கவிஞர்களாம். ஆகையால் இவனிடமும் கற்பனாசக்தி அதிகம் இருக்கிறது. மற்றபடி இவன் சொல்வது உண்மைதான். இவனை நான் பார்க்கப் போன இடத்தில் ஒரு பூனை கை கால்களைப் பிறாண்டி விட்டது!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

அவருடைய உடம்பில் ஏற்பட்டிருந்த இரத்தக் காயங்களைப் பார்த்துச் சேநாதிபதி பூதி விக்கிரம கேசரி விழுந்து விழுந்து சிரித்தார்.

"ஒரு பூனையா உன்னை இந்தப் பாடுபடுத்தி விட்டது? நல்லவேளை காட்டுப் பாதையில் போவதற்கு இந்த வீரன் உனக்கு வழித்துணையாகக் கிடைத்திருக்கிறான்...."

"சேநாதிபதி! எனக்கு வழித்துணை தேவையில்லை. என்னுடைய கைத்தடியே போதுமானது. அதை எடுத்துக் கொள்ளாமல் நான் இவனைப் பார்க்கப் போனதுதான் பிசகாய்ப் போய் விட்டது...."


"அப்படியானால் இவனுக்கு நீ வழித்துணையாக இரு! புறப்படுவதற்கு முன்னால் இவனுக்குச் சரியாகச் சாப்பாடு பண்ணி வைத்து விட்டு அப்புறம் கிளம்பு! தம்பி! இப்போது இலங்கையில் சாப்பாட்டு வசதி கொஞ்சம் குறைவு. இங்கேயுள்ள ஏரி குளங்களையெல்லாம் மகிந்தனுடைய சேனா வீரர்கள் கரையை உடைத்துவிட்டுப் போய்விட்டார்கள். அதனால் விவசாயம் சரியாக நடப்பதில்லை. விவசாயம் செய்வதற்கு ஆட்களும் இல்லை. இந்த நாட்டு மக்களே பட்டினி கிடக்கிறார்கள். நம் வீரர்களுக்கு எப்படி உணவு கிடைக்கும்? நம்முடைய நாட்டிலிருந்தும் அரிசி போதிய அளவு அனுப்பி வைப்பதில்லை...."

"சேநாதிபதி! அது எனக்குத் தெரிந்த விஷயந்தான். பழையாறை வீரப்படை வீடுகளின் வழியாக இளையபிராட்டி சென்றபோது பெண்டுகள் அவரிடம் முறையிட்டதைக் கேட்டுக் கொண்டிருந்தேன். 'இலங்கையில் எங்கள் கணவன்மார்களும் பிள்ளைகளும் பட்டினி கிடக்கிறார்களாமே!' என்று முறையிட்டார்கள்...."

"ஓஹோ! இது அங்கேயும் தெரிந்து முறையிட்டார்களா? நல்லது. நல்லது! அதற்கு இளையபிராட்டி என்ன மறுமொழி சொன்னார்கள்?"

"சேநாதிபதி பெரிய வேளார் இலங்கையில் இருக்கும் வரையில் நம் வீரர்களைப் பட்டினியால் சாக விட மாட்டார்; நீங்கள் கவலைப்பட வேண்டாம் என்று ஆறுதல் சொன்னார்...."

"ஆகா! இளையபிராட்டி அவ்விதம் சொன்னாரா? உலகத்தில் எத்தனையோ



இராஜ குலங்களில் எவ்வளவோ புகழ் பெற்ற கன்னிகைகள் பிறந்ததுண்டு. ஆனால் எங்கள் இளையபிராட்டிக்கு இணையானவர் வேறு யாரும் இல்லை...."

"அடுத்தபடியாகச் சொல்லக்கூடிய இளவரசி ஒருவர் உண்டு, சேநாதிபதி!"

"அது யார், தம்பி!"

"கொடும்பாளூர் இளவரசி வானதி தேவிதான்!"

"ஆகா! இந்தப் பிள்ளை ரொம்பப் பொல்லாதவன். இவனுடைய கற்பனா சக்தி என்னையே மயக்கி விடும் போலி ருக்கிறது, தம்பி! பழையாறையில் எங்கள் குல விளக்கை நீ பார்த்தாயா?"

"பார்த்தேன், ஐயா! இளையபிராட்டி யுடன் இணை பிரியாமல் இருந்து வருகிறவரை எப்படிப் பார்க்காமல் இருக்க முடியும்? வைத்தியர் வீட்டி விருந்து வழியனுப்ப இரண்டு பேரு



மாகத்தான் யானை மீது ஏறி வந்தார்கள். தீபத்தை ஒளியும், மலரை மணமும், உடம்பை நிழலும் பிரியாததுபோல் வானதி தேவியும் இளையபிராட்டியைப் பிரிவது கிடையாது...."

"அடடே! இந்தப் பிள்ளை வெகு புத்திசாலி! திருமலை! இவனை நம் பொக்கிஷ சாலைக்கு அழைத்துச் சென்று வேண்டிய ஆடை ஆபரணங் களைக் கொடுத்து அழைத்துப் போ!"

"ஐயா! எல்லாம் தற்சமயம் பொக்கி ஷத்திலேயே இருக்கட்டும். திரும்பிப் போகும்போது நான் வாங்கிக் கொண்டு போகிறேன்."

"தம்பி! எங்கள் வீட்டுப் பெண்ணைப் பற்றி, வானதியைப் பற்றி, இளைய பிராட்டி எனக்குச் செய்தி ஒன்றும் அனுப்பவில்லையா?...."

"சேநாதிபதி! தங்களிடம் நான் பொய் சொல்ல விரும்பவில்லை."

"யாரிடமும் எப்பொழுதும் பொய் சொல்ல வேண்டாம், தம்பி!"

"இந்த வீர வைஷ்ணவர் விஷயத்தில் மட்டும் தயவுசெய்து விலக்கு அளிக்க வேண்டும், சேநாதிபதி! இவரிடம் உண்மை சொன்னால் என் தலை வெடித்துப் போய் விடும்...."

"வேண்டாம், வேண்டாம்!.... இளைய பிராட்டி எனக்கு ஒன்றும் செய்தி அனுப்பவில்லையாக்கும்!"

"தங்களுக்குச் செய்தி அனுப்ப வில்லை. ஆனால்.."

'ஆனால், என்ன?"

"யாருக்கு அனுப்ப வேண்டுமோ அவருக்கு அனுப்பியிருக்கிறார்கள். வானதி தேவியைப் பற்றி இளவரசரிடம் நேரில் சில செய்திகளைச் சொல்லும்படி பணித்திருக்கிறார்கள்...."

"உன்னைப் போன்ற புத்திசாலிப் பிள் ளையை நான் பார்த்ததேயில்லை!" என்று கூறிச் சேநாதிபதி பெரிய வேளார் வந்தியத்தேவனை மார்போடு அணைத் துக் கொண்டார். பின்னர்,

"சரி; இனி வீண் பொழுது போக்க வேண்டாம்; புறப்படுங்கள்!" என்று சொன்னார்.

"ஐயா! இந்த வீர வைஷ்ணவர் என் னோடு அவசியம் வரத்தான் வேணுமா? இவர் இல்லாமல் நான் தனியே போகக் கூடாதா?"

"இவர் வருவதில் உனக்கு என்ன ஆட்சேபம்?"

"எனக்கு ஆட்சேபம் இல்லை. என் இடையில் செருகியுள்ள கத்தி சுத்த வீரசைவக் கத்தி. அது 'வீரவைஷ்ணவ இரத்தம் வேண்டும்' என்று வெகு நாளாகக் கேட்டுக் கொண்டிருக்கிறது. என்னை மீறி அது வெளிக் கிளம்பி விட் டால் இவர் பாடு ஆபத்தாய்ப் போய் விடுமே என்று பார்க்கிறேன்."

"அப்படியானால் அந்தக் கத்தியை இங்கே விட்டுவிட்டு வேறு கத்தி எடுத் துக் கொண்டு போ! திருமலை உன் னோடு வராவிட்டால் நீ இளவரசரைக் கண்டு பிடிக்க முடியாது. அவர் இருக்கு மிடமே யாருக்கும் தெரியாது. மேலும் இளவரசரிடம் கொடுப்பதற்கு இவனும் ஒரு முக்கியமான ஓலை கொண்டு வருகிறான். ஆகையால்இரண்டு பேரு மாகச் சேர்ந்து போவதே நல்லது! வழி யில் ஒருவரோடொருவர் சண்டை பிடித் துக் கொண்டு காரியத்தைக் கெடுத்து விடாதீர்கள்!"

இவ்விதம் சொல்லிவிட்டுப் பெரிய வேளார் மறுபடியும் வந்தியத்தேவனை அருகில் அழைத்து அவன் காதோடு ரகசியமாகச் சொன்னார்:-

"தம்பி! இவனால் உன் காரியத்துக்கு இடைஞ்சல் ஒன்றும் நேராது. ஆனாலும் ஜாக்கிரதையாகவே இரு! இளவரசரிடம் இவன் என்ன செய்தி சொல்லுகிறான் என்பதைத் தெரிந்து வந்து என்னிடம் சொல்லு!"

ஆழ்வார்க்கடியானைத் தனக்கு ஒற்றனாகப் பின்னோடு அனுப்புகிறார் கள் என்று முதலில் வந்தியத் தேவன் எண்ணியிருந்தான். இப்போது அவனுக் குத் தான் ஒற்றன் என்று ஏற்பட்டது.

இந்த நிலைமை வந்தியத்தேவனுக்கு மிகவும் பிடித்திருந்தது.

வந்தியத்தேவனும் ஆழ்வார்க்கடியானும் இரண்டு வீரர்கள் துணையுடன் அன்றிரவே புறப்பட்டார்கள்.

பிரயாணம் தொடங்கி இரண்டு நாட்கள் கிழக்கு நோக்கிச் சென்றார்கள். முதலில் கொஞ்ச தூரம் ஊர்ப்புறங்களாக இருந்தன. ஓரளவு ஜன நடமாட்டமும் இருந்தது. வர வரக் காட்டுப் பிரதேசமாக மாறி வந்தது. முதலில் குட்டை மரங்கள் நிறைந்த காடாயிருந்தது. பின்னர் வானை அளாவிய பெரிய மரங்கள் அடர்ந்த ஆரண்யங்களாக மாறின. இடையிடையே ஏரிகள் தென்பட்டன. ஆனால் அவற்றின் கரைகள் பல இடங்களில் இடிந்து கிடந்தன. தண்ணீர் நாலா புறமும் ஓடிப் போய் ஏரிகள் வறண்டு கிடந்தன. கழனிகள் பயிர் செய்யப்படாமல் கிடந்தன. இன்னும் ஓரிடத்தில் விசாலமான பிரதேசத்தில் தண்ணீர் தேங்கியிருந்தது. பாலாவி நதியின் கரை வெட்டப்பட்டபடியால் அதன் தண்ணீர் நதியோடு போகாமல் வெளியில் கண்டபடி சிதறிச் சென்று அப்படித் தண்ணீர்த் தேக்கம் உண்டானதாகத் தெரிந்தது.

இந்தக் காட்சிகளையெல்லாம் பார்த்துக் கொண்டு அவர்கள் சென்றார்கள். நீடித்த யுத்தத்தினால் அந்தப் பிரதேசத்தில் ஏற்பட்டிருந்த அழிவுகளைப் பற்றி ஆழ்வார்கடியான் வந்தியத்தேவனுக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டு போனான். யுத்தம் எவ்வளவு கொடுமையானது என்று அடிக்கடி அவன் கூறினான். அதைப்பற்றி இருவருக்கும் விவாதம் பலமாக நடந்தது.

இரண்டு தினங்களுக்குப் பிறகு பிரயாண திசை மாறியது. கிழக்கு திசையில் சென்றவர்கள் இப்போது தெற்கு நோக்கித் திரும்பினார்கள். வர வர வனப் பிரதேசங்கள் அடர்த்தியாகிக் கொண்டு வந்தன. சமவெளிப் பிரதேசம் மாறிப் பாறைகளும் சிறு குன்றுகளும் எதிர்ப்பட்டன. இன்னும் தூரத்தில் பெரிய மலைத் தொடர்கள் வானை அளாவிய சிகரங்களுடன் தென்பட்டன. காடுகளின் தோற்றம் பயங்கரமாகிக் கொண்டு வந்தது. பட்சிகளின் இனிய குரல்களோடு ஏதேதோ இனந் தெரியாத கோரமான சத்தங்கள் கலந்து எழுந்தன.

அத்தகைய காட்டு வழிகளில் கொடிய மிருகங்களினால் ஏற்படக்கூடிய அபாயங்களைப் பற்றிப் பேச்சு எழுந்தது. நரிகள், சிறுத்தைப் புலிகள், கரடிகள், யானைகள் ஆகிய மிருகங்கள் அக் காடுகளில் உண்டு என்று ஆழ்வார்க்கடியான் கூறினான்.

"நரிகள் கூட்டமாக வந்தால் அபாயம் அல்லவா?" என்று வந்தியத்தேவன் கேட்டான். கடம்பூர் மாளிகையில் அவன் கண்ட பயங்கரக் கனவு அவனுக்கு நினைவு வந்தது.

''நரிக் கூட்டத்தைக் காட்டிலும் ஒற்றை நரியின் ஊளையினால் அபாயம் அதிகம்!'' என்று ஆழ்வார்க்கடியான் கூறினான்.

"அது எப்படி, சுவாமிகளே!"

"இந்தக் காடுகளில் நரியும் சிறுத்தையும் சேர்ந்து வேட்டைக்குப் போகும். சிறுத்தை அங்கங்கே பதுங்கிக் கொண்டிருக்கும். நரி அங்குமிங்கும் ஓடி இரை தேடும். மனிதனையோ மான் முதலிய சாது மிருகத்தையோ கண்டால் ஒற்றைக் குரலில் ஊளையிடும். உடனே சிறுத்தை பாய்ந்து வந்து விழுந்து கொல்லும். இப்படிச் சிறுத்தைக்கு ஒற்றன் வேலை செய்யும் நரிக்கு 'ஓரி' என்று பெயர்...''

இப்படி இவர்கள் பேசிக் கொண்டு போன போது சற்றுத் தூரத்தில் கடல் குமுறுவது போன்ற சத்தம் கேட்டது. "கடற்கரையிலிருந்து வெகு தூரம் வந்து விட்டோமே? இது என்ன சத்தம்?'' என்று வந்தியத்தேவன் கேட்டான்.

''பக்கத்தில் எங்கேயோ ஏரி அல்லது

குளம் இருக்க வேண்டும். அதில் தண்ணீர் குடிப்பதற்கு யானை மந்தை வருகிறது போல் தோன்றுகிறது!'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

"ஐயையோ! யானை மந்தையில் நாம் அகப்பட்டுக் கொண்டால்...?''

"அதைப் பற்றிக் கொஞ்சமும் பய மில்லை. மந்தையில் வரும் யானைகள் நம்மை ஒன்றும் செய்துவிட மாட்டா. நாம் ஒதுங்கி நின்றால் அவை நம்மைத் திரும்பிக் கூடப் பாராமல் வழியோடு போய் விடும்!''

இதற்குள் அவர்களுடன் வந்த வீரர் களில் ஒருவன் ஒரு மரத்தின் மேல் ஏறி நாலு பக்கமும் பார்த்தான்.

"ஐயா! ஐயா! ஒற்றை யானை வரு கிறது! மத யானை! மரங்களை முறித்து அதம் செய்து கொண்டு வருகிறது!'' என்று கூவினான்.

"ஐயோ! இது என்ன சங்கடம்! எப் படித் தப்புகிறது!'' என்று ஆழ்வார்க்கடி யான் பீதியுடன் கூறி அங்குமிங்கும் பார்த்தான்.

"மந்தை யானைகளுக்குப் பயமில்லை என்றீர். ஒற்றை யானைக்கு ஏன் இவ் வளவு பயம்!'' என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"அப்பனே! மதங்கொண்ட ஒற்றை யானை சாதாரண ஆயிரம் யானை களுக்குச் சமமானது. அதன் மூர்க்கத் தனத்துக்கு முன்னால் யாரும் எதிர்த்து நிற்க முடியாது....''

"எங்கள் மூன்று பேர் கையில் வேல் இருக்கிறது. உம்முடைய கையில் ஒரு தடி இருக்கிறதே!''

"ஒரு மத யானையை ஆயிரம் வேல் களாலும் எதிர்க்க முடியாது. அதோ ஒரு செங்குத்தான குன்று தெரிகிறதே! அதில் நாம் ஏறிக் கொண்டால் ஒருவேளை தப்பித்துக் கொள்ளலாம். ஓடிப் பாருங் கள்!''

இவ்வாறு சொல்லி ஆழ்வார்க்கடி யான் குன்றை நோக்கி ஓடினான். மற்றவர்களும் பின்தொடர்ந்தார்கள். ஆனால் கொஞ்ச தூரம் ஓடியதும் எதிரில் ஒரு ஆழமான, செங்குத்தான பள்ளத்தாக்கு இருப்பதைப் பார்த்தார் கள். அவர்கள் நின்ற இடத்துக்கும் சற்றுத் தூரத்தில் இருந்த குன்றுக்கும் மத்தியில் அந்தப் பள்ளத்தாக்கு இருந் தது. பள்ளத்தாக்கின் விளிம்பில் வந்து அவர்கள் நின்றார்கள். யானையோ அதி வேகமாக அவர்களை நெருங்கி வந்து கொண்டிருந்தது. மனிதர்களைப் பார்த் ததும் அதன் வெறி அதிகமாகியிருக்க வேண்டும். துதிக்கையைத் தூக்கிக் கொண்டு அந்த மதயானை பிளிறிய போது அதன் சத்தத்தில் அண்டசரா சரங்கள் வெடிக்காமலிருந்தது அதிசயந் தான். அதைக் கேட்ட நால்வரும் காதைப் பொத்திக் கொண்டார்கள். தலைக்கு ஒரு பக்கம் சிதறி ஓடினார்கள்.

யானை மேலும் நெருங்கி வந்தது; மேலும் மேலும் நெருங்கி வந்தது. ஆழ் வார்க்கடியானைக் குறிவைத்துக் கொண்டு, அவன் நின்ற இடத்தை நோக்கி அது வருவது போலத் தோன்றி யது. இன்னும் இரண்டு அடி அப்பால் எடுத்து வைத்தால் ஆழ்வார்க்கடியான் அதல பாதாளத்தில் விழும்படி நேரிடும். பக்கவாட்டில் ஓடுவதற்கும் வசதியாக இல்லை. செடிகொடிகள் அடர்ந்திருந் தன. ஓடித் தப்பிக்கத்தான் முடியுமா?

வந்தியத்தேவன் கையில் வேலை எடுத்தான். ஆனால் அந்த மதயானை யின் வேகத்தை இந்திரனுடைய வஜ்ரா யுதத்தினால் கூட அச்சமயம் தடுக்க முடியாது என்று அவனுக்குத் தோன்றி யது. வேலைப் பிடித்த கை பலவீனமுற் றுத் தளர்ந்து சோர்ந்தது.

அந்நேரத்தில் ஆழ்வார்க்கடியானு டைய செய்கை வந்தியத்தேவனுக்கு ஒரு பக்கத்தில் சிரிப்பை உண்டாக்கிற்று. கையில் தடியை ஓங்கிய வண்ணம், "நில்! நில்! அப்படியே நில்! மேலே வந்தாயோ தொலைந்தாய்! உன்னைக் கொன்று குழி வெட்டி மூடி விடுவேன்! ஜாக்கிரதை!'' என்று ஆழ்வார்க்கடியான் மதயானை யைப் பார்த்து இரைந்தான்.

(தொடரும்)

கல்கி கலெக்ஷன்

யமனுக்கு வேட்டை

அமரர் கல்கி

மகா - ஸ்ரீ - ஸ்ரீ - ஸ்ரீ மகாகனம் பொருந்திய ரைட் ஆனரபிள் திவான் பகதூர் ஸர் யமதர்மன் கே.ஸி.ஐ.இ. ராஜா ஆப் யமலோகம் அவர்கள் தமது தர்ம சிம்மாசனத்தில் அமர்ந்து, யமலோகமெல்லாம் நடுநடுங்கும்படியாக ஒரு வீர கர்ஜனை புரிந்து, "எங்கே சித்திரகுப்தன்?" என்று இடி முழக்கக் குரலில் கேட்டார்.

பெரிய பெரிய கணக்குப் புஸ்தகங்களுக்குப் பின்னால் மறைந்திருந்த சித்திர குப்தன் மெதுவாகத் தலையை நீட்டி, "மகாராஜா! இதோ ஆஜர்!" என்றான்.

"ஓகோ! வேலை ரொம்ப மும்முரமாயிருக்கிறாப்போல் தோன்றுகிறது!"

"ஆம், மகாராஜா! யமலோகத்துக்கு வருகிற உயிர்களின் கணக்கு எழுதிக் கை ஒடிந்து விடும் போலிருக்கிறது!"

"சபாஷ்! நமது தூதர்கள் எல்லாம் வெகு சுறுசுறுப்பாயிருக்கிறார்கள் என்று தெரிகிறது!"



• சர்ச்சில்



• ஹிட்லர்

"அதுதான் இல்லை, மகாராஜா! நமது தூதர்களுக்குப் பூலோகத்தில் இப்போதெல்லாம் வேலையே இருப்பதில்லை. பூலோகத்து ஜனங்கள் அப்படித்தாங்களாகவே போட்டி போட்டுக் கொண்டு வந்து குவிகிறார்கள்!"

"அப்படியா? ரொம்ப சந்தோஷம்! நமது தூதர்கள் வெகு காலமாக விடுமுறை கேட்டுக் கொண்டிருக்கிறார்களே? இந்தச் சமயம் கொடுக்கலாமே? எங்கே நமது தூதர்கள்?"

"இதோ வந்து விட்டோம், மகாராஜா!" என்று யம தூதர்கள் அத்தனை பேரும் திமு திமு வென்று உள்ளே வந்து நின்றார்கள்.

"தூதர்களே! பூலோகத்து மனிதர்கள் யம லோக வாழ்க்கையில் ஆசை கொண்டவர்களாய் அவர்களாகவே வந்து குவிந்து நமது கணக்குப் பிள்ளையின் கையை ஒடிக்கிறார்களாம். ஆகவே, இந்தச் சமயத்தில் நீங்கள் வெகு நாளாகக் கோரிவரும் விடுமுறையை அளிக்க உத்தேசிக்கிறேன். ஒரு மாதம் எல்லாருக்கும் வழக்கமான சம்பளத்தோடு, வார் அலவன்ஸ், கார் அலவன்ஸ், உளுந்து அலவன்ஸ் எல்லாம் உண்டு!" என்று யமதர்ம ராஜன் சொன்னதும், யமதூதர்கள் ஒரே குரலாக, "எஜமானருக்கு ஜே! யமதர்ம ராஜருக்கு ஜே!" என்று வாழ்த்தி, தங்களுடைய மகத்தான வெற்றிக்கு அறிகுறியாக ஒருவருக்கொருவர் இரண்டு விரலை V வடிவமாக்கிக் காட்டிக் கொண்டார்கள்.

அந்தச் சமயத்தில் வாசற்பக்கத்திலிருந்து, "ஓஹோ!" "ஆஹா!" "தள்ளு!" "நீ தள்ளு!" "எட்டு!" "நீ எட்டு!" "ஐயையோ! விழுந்து விட்டேனே!" "யமலோகத்தில் கேள்வி முறையில்லையா?" என்ற கூக்குரல்கள் கிளம்பவே, யமதர்ம ராஜா சித்திரகுப்தனைப் பார்த்து, "இது என்ன கூத்து?" என்று கேட்டார்.

"ஒன்றுமில்லை! இதுதான் யமலோகத்தின் வெற்றி! எங்கே பார்த்தாலும் நமக்குத்தான் வெற்றி" என்ற சித்திரகுப்தன் கூறி, இரண்டு விரலை விரித்துக் காட்டி, "ஆமாம்; தர்மராஜா! நமக்கு வெற்றி V! மற்றவர்களுக்கெல்லாம் பட்டை நாமம்!" என்றார்.

"பட்டை நாமம் என்றால், தென்கலை நாமமா வடகலை நாமமா?" என்று யமராஜா கேட்க, "அதை அப்புறம் சாவ

காசமாகப் பூலோகக் கோர்ட்டிலே தீர்த்துக் கொள்ளலாம். இப்போது, யமதூதர்களுக்கு நீங்கள் கொடுத்த ரஜாவை உடனே ரத்து செய்யுங்கள். பூலோகத்திலிருந்து முண்டியடித்துக் கொண்டு வரும் பெருங்கூட்டத்தை ஒழுங்குபடுத்தி, தள்ளல் விழல்களினால் உயிர்ச்சேதமில்லாமல் எல்லாருக்கும் அவரவர்களுடைய இடத்தைக் காட்டுவதற்கு யம தூதர்கள் அவ்வளவு பேருடைய சேவையும் தேவையாயிருக்கிறது. வேண்டுமானால், அவர்களுடைய யுத்தப் படியை இரட்டிப்பு ஆக்கிவிடலாம்!" என்று சித்திரகுப்தன் சொன்னான்.

உடனே யம தூதர்களில் சிலர், "யம ராஜா வாழ்க! சித்திரகுப்தன் ஒளிக!" என்று கோஷம் செய்யவே, "இந்தக் கிளர்ச்சிக்காரர்களுக்குத் தக்க தண்டனை அளிக்காவிட்டால் நான் வேலையை உடனே ராஜினாமாச் செய்து விடுவேன்!" என்றார் சித்திரகுப்தன்.

இந்தத் தர்ம சங்கடத்துக்கு என்ன செய்வதென்று யமதர்மன் சிறிது யோசனை செய்து விட்டு, கோஷமிட்ட தூதர்களைத் தனியே அழைத்து, "உங்களை ஒரு மாதத்துக்கு வேலையிலிருந்து டிஸ்மிஸ் செய்திருக்கிறேன். யம லோகத்திலிருந்து தொலையுங்கள்!" என்று கட்டளையிட்டார்.

அந்த யம தூதர்கள் வெளியே போகையில் ஒருவருக்கொருவர் கண்ணடித்துக் கொண்டு, "நாம் பூலோகத்திலே இந்தியாவிலுள்ள பீஹார் மாகாணத்துக்குப் போய் காலரா ரூபம் எடுத்துக் கொள்வோம். அங்கேயுள்ள கவர்னர் ரூதர் போர்டு துரை நமக்கு ரொம்பவும் வேண்டியவர். அவருடைய சகாயத்துடன் இன்னும் அநேக உயிர்களை யம லோகத்துக்க அனுப்பிச் சித்திரகுப்தனுடைய கையை நன்றாய் ஒடிப்போம்!" என்று காதோடு காதாகப் பேசிக் கொண்டு போனார்கள்.

யம லோகத்தில் மேற்கண்ட விதமான நெருக்கடி ஏன் ஏற்பட்டது என்பதைச் சற்று ஆராய்வோம். அதற்குரிய காரணங்களைக் கண்டுபிடிப்பதற்காகப் பூலோகத்தில் நாலாபுறமும் நோக்குவோம். அப்படி நோக்கும்போது மேற்கு ஐரோப்பாவின் மகா பயங்கர கோரக் காட்சி நம் கண் முன்னே வருகின்றது. ஐந்து வருஷங்களுக்கு முன்னால் சமுத்திரம் கரையை உடைத்துக் கொண்டு வருவதுபோல் பெருகி வந்த ஜெர்மன் சைன்யங்கள் பிரான்ஸிலிருந்தும் பெல்ஜியத்திலிருந்தும் ஹாலந்திலிருந்தும் பின் வாங்கி ஓடுகின்றன. அவற்றைத் துரத்திக் கொண்டு, நேசக் கட்சி சைன்யங்கள் போகின்றன. இந்த இரண்டு சைன்யங்களின் நடமாட்டத்துக்கு ஆளான பிரதேசங்கள் பாலைவனச் சுடுகாடாக ஆகி வருகின்றன.

நேசக் கட்சியைச் சேர்ந்த ஐந்து பெரும் சைன்யங்கள் இப்போது ஜெர்மன் எல்லையை அடைந்து விட்டன. பெயர் பெற்ற ஜெர்மன் அரணான ஸீக்பிரீட் அரணை நேசக் கட்சியார் தாக்கத் தொடங்கி விட்டார்கள். கூடிய சீக்கிரத்தில் ஜெர்மனி தேசத்துக்குள்ளேயே இரத்த வெள்ளம் பெருகி ஓடும் என்பதில் ஐயமில்லை.

நேசக் கட்சியின் பிரதம தளபதி ஈஸன் ஹவர் ஜெர்மன் பொது ஜனங்களும் எச்சரிக்கை கொடுத்து விட்டார். "ஜாக்கிரதை! திரும்பி ஓடும் ஜெர்மன் சைன்யங்களை நேசப் படை விமானங்கள் தொடர்ந்து வந்து குண்டு போட்டு நொறுக்கப் போகின்றன. உயிர் பிழைக்க விரும்புவோர் ஓடி ஒளியுங்கள்!" என்று சொல்லி விட்டார்.

இந்த விபத்தைத் தடுப்பதற்கு ஜெர்மன் ஜனங்கள் ரொம்பவும் விரும்புவார்கள். நாஜித் தலைவர்களும் அதற்கு ஆசைப்படுவார்கள். தோல்வி நிச்சயம் என்று ஏற்பட்டு விட்டபடியால் அவர்கள் சரணாகதி அடையவும் சமாதானப் பேச்சுப் பேசவும் தயாராயிருப்பார்கள்.

ஆனால் அதற்கு நேசக் கட்சித் தலைவர்கள் இணங்குவது இயலாத காரியம். ஏனெனில் ஹிட்லர் முதலிய நாஜித் தலைவர்களுக்கு எதிராக அவ்வளவு தீவிரமான பிரசாரம் நடந்திருக்கிறபடியால் அவர்களுடன் சமாதானம் பேசுவதை உலகம் ஒருநாளும் ஒப்புக் கொள்ளாது. எனவே, அத்தகைய தைரியம் நேசக் கட்சித் தலைவர்களுக்கு ஒரு நாளும் வராது.

நாஜித் தலைவர்களுடன் ராஜிப் பேச்சு இல்லை என்றால், யுத்தம் இறுதிவரையில் நடந்துதான் ஆக வேண்டும். ஏனெனில், நாஜிக் கட்சித் தலைவர்களின் கையில் ஜெர்மனியும் ஜெர்மன் சைன்யமும் வெகு பலமாகச் சிக்கிக் கொண்டிருக்கின்றன. ஜெர்மன் ராணுவ வீரர்களோ எத்தனையோ காலமாகக் கட்டுப் பாட்டுக்கு உட்படும் பயிற்சி பெற்றவர்கள் எனவே, நாஜித் தலைவர்கள் தங்களுடன் சமாதானம் பேச நேசக் கட்சியார் சம்மதிக்கா விட்டால் கடைசி வரையில் போரிட்டு உயிரை விடவே பார்ப்பார்கள். ஆகவே, ஜெர்மன் யுத்தம் முடிவதற்குள் அந்த நாட்டின் பெரிய இரத்த ஆறுகள் ஓடித்தான் ஆக வேண்டியிருக்கும்.

இந்த இரத்த வெள்ள கைங்கரியத்தில், ஜெர்மனிக்கு மற்றொரு பக்கத்தில் முன்னேறும் ருஷியப் படைகளும், தெற்கே - இத்தாலியிலிருந்து முன்னேறும் நேசப் படைகளும் உரிய பங்கை எடுத்துக் கொள்ளும்.

மேற்குத் திசையிலிருந்து இப்போது

நமது கவனத்தைக் கிழக்கே திருப்புவோம். பஸிபிக் சமுத்திரத்தைப் பார்ப்போம். இந்த விஸ்தாரமான மகா சமுத்திரத்திலுள்ள தீவு களில் ஆங்காங்கே அமெரிக்கப் படைகள் தாவித் தாவி முன்னேறி வருகின்றன. ஆங் காங்கு தலைகாட்டும் ஜப்பான் கப்பல்களை அமெரிக்க ஆகாச விமானங்கள் குண்டு போட்டு மூழ்கடிக்கின்றன.

ஆனால் இவையெல்லாம் ஜப்பானைத் தோற்கடிக்கும் விஷயத்தில் கொசுக் கடிக்குச் சமானம்தான்.

அதற்கு இன்னும் எவ்வளவோ தீவிரமான



"என்னது...! தீபாவளி இனாம் கொடுத் ததுக்காக அந்த போலீஸ்காரர் உன்னை அடிச்சாரா! அவ்வளவு நேர்மையானவரா அவர்?"

"நீங்க ஒண்ணு! வெறும் பத்து ருபாயைக் கொடுத்து என்னை கிண்டலா பண்றேன்னு கேட்டு அடிச்சாரு!"

– சீர்காழி ரேவதி

யுத்தம், பயங்கரமான யுத்தம் நடத்தியாக வேண்டும்.

ஜெர்மனியை ஜயிப்பதைக் காட்டிலும், ஜப்பானை ஜயிப்பது பன்மடங்கு கடுமையான காரியம் என்பதற்குச் சமீபத்தில் சில அறிகுறி கள் தென்பட்டிருக்கின்றன.

ஜெர்மானியர் மகா வீரர்கள், தைரியசாலி கள்தான்; ஆனாலும் அவர்களுக்கு உயிர் மேல் ஆசையில்லாமலில்லை. தோல்விதான் என்று நிச்சயமானால் அவர்கள் சரணாகதி அடைந்து விடுகிறார்கள். எதிரிகளால் கைது செய்யப்படு வதற்கும் தயாராயிருக்கிறார்கள்.

வெற்றியோ, தோல்வியோ எது வந்தாலும், உயிரோடு தப்பினால் விசேஷந்தான் என்பது ஜெர்மானியரின் கொள்கை. அதுவேதான் ஐரோப்பிய தேசத்தார் அனைவருடைய கொள் கையும். உயிரோடு இருந்தால்தான் வெற்றி கிடைத்தால் அதை அனுபவிக்கலாம். உயி ரோடு இருந்தால் இப்போது தோல்வியடைந் தாலும் அடுத்த முயற்சியிலாவது வெற்றியடை யலாம். இதை முன்னிட்டுத்தான் ஐரோப்பிய தேசத்தார் அவ்வளவு பேரும் இந்த யுத்தத்தில் உயிர்ச் சேதத்தைக் கூடிய வரையில் குறைப் பதில் முனைந்திருந்தார்கள். உயிர் பிழைப்பதற் காகப் போர்க் களத்தில் பின் வாங்கி ஓடு வதற்கோ, எதிரிகளிடம் கைதியாவதற்கோ அவர்கள் கொஞ்சமும் தயங்கவில்லை.

ஆனால் ஜப்பானியருடைய கொள்கை இதற்கு நேர்மாறானதாகக் காண்கிறது. "கௌர வத்துக்காகத் தலையைச் சிரைத்துக் கொள் கிறவர்"களைப் பற்றி நாம் கேலி செய்வதுண்டு. ஆனால் ஜப்பானியரோ கௌரவத்துக்காகத் தலையை வெட்டிக் கொள்கிறவர்களாயிருக் கிறார்கள். ஜப்பானியருடைய தற்கொலை வெறியைப் பற்றிய இரண்டு பயங்கரமான செய்திகள் சமீபத்தில் பத்திரிகைகளில் வெளி யாகியிருந்தன.

ஆஸ்திரேலியாவில் சில ஜப்பானியக் கைதிகள் தகுந்த பந்தோபஸ்துடன் வைக்கப்பட் டிருந்தார்கள். யுத்தக் கைதிகளுக்கு அளிக்கப் படும் சகல சௌகரியங்களும் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்தன. ஆயினும் திடீரென்று அவர்கள் ஒருநாள் கலகமாகக் கிளம்பிக் காவலை உடைத்துக் கொண்டு தப்பி ஓடப் பார்த்தார்கள். இந்த முயற்சியில் பலர் சுடப் பட்டு இறந்தார்கள். மற்றவர்கள் எல்லாம் தங்களைத் தாங்களே கொன்று கொண்டு இறந் தார்கள்!

இதைக் காட்டிலும் பயங்கரமான இன் னொரு செய்தி ஸைபான் என்னும் பஸிபிக் தீவிலிருந்து வந்திருக்கிறது. அந்தத் தீவைச் சமீபத்தில் ஜப்பானியரிடமிருந்து அமெரிக்கர் கைப்பற்றினார்கள். அப்படிக் கைப்பற்றப்பட்ட தீவில் பத்தாயிரம் ஜப்பானியர் இருந்தனர். இவர்கள் போர் வீரர்கள் அல்ல. பெண்டு பிள்ளைகள் உள்ளிட்ட குடித்தனக்காரர்கள். இவர்களுக்குத் தப்பிச் செல்ல வழியேயில்லா மற்போகவே, அவ்வளவு பேரும் 'ஹரகிரி' செய்து கொண்டு மாண்டனர். அதவாது, மனைவிகளைப் புருஷர்களும் குழந்தைகளைத் தாய்மார்களும் கொன்றதுடன் மிஞ்சியுள்ள வர்கள் தற்கொலை செய்து கொண்டு இறந் தனர்!

மேனாட்டாரிடமிருந்து எத்தனையோ காரியங்களைக் கற்றுக் கொண்டிருக்கும் ஜப்பா

னியர், கூடுமான வரையில் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்னும் தத்துவத்தையும் கற்றுக் கொள்ளாதது பற்றிப் பெரிதும் வருந்துகிறோம்.

ஆனால் நாம் வருத்தப்படுவதினாலே ஜப்பானியருடைய சுபாவத்தை மாற்றி விட முடியாது.

அந்த சுபாவம், அதாவது எதிரிகளின் கீழ் பிடிபட்டு வாழ்வதைக் காட்டிலும் சாவதே மேல் என்று தற்கொலை புரிந்து கொள்ளும் சுபாவம், ஜப்பானியரிடம் இருக்கிறபடியினால், ஜெர்மனியை ஜயிப்பதைவிட ஜப்பானை ஜயிப்பது கடினமான காரியம் என்பதையும் மறுக்க முடியாது.

ஜப்பான் 'புண்ணிய' பூமியைப் பகைவர்களிடமிருந்து காப்பதற்காக ஒரு கோடி ஜப்பானியர் தயாராயிருக்கின்றனர் என்று சமீபத்தில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது. உண்மையில், ஜப்பானை அன்னியரிடம் ஒப்படைப்பதைக் காட்டிலும் ஜப்பானியர் அவ்வளவு பேரும் கூண்டோடு கைலாஸமாகப் பரலோக யாத்திரை போகவும் தயாராயிருப்பார்கள்.

இப்படிப்பட்ட முரட்டுத் தற்கொலைக்கார சாதியோடு யுத்தம் செய்வது மகா கடினமான விஷயந்தான். ஆகையினாலேயே, பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சிலும், அமெரிக்கப் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட்டும் தற்சமயம் க்யூபெக்கில் சந்தித்திருக்கிறார்கள். ஜெர்மனியின் தோல்வி ஒருவாறு நிச்சயமாகி விட்டபடியால், இனிமேல் ஜப்பான் மீது தீவிர யுத்தம் தொடங்குவது பற்றித் திட்டம் போடவே அவர்கள் சந்தித்திருக்கிறார்கள் என்று அரசாங்க அறிக்கைகளே கூறுகின்றன.

ஜப்பானை ஜயிப்பதற்கு இரண்டு வித முறைகளில் அவர்கள் திட்டங்கள் வகுக்கலாம்.

ஒருமுறை, கடினமான முறை; இரத்த வெள்ளத்தைப் பெருக்கி அளவில்லாத உயிர்ச்சேதத்தை உண்டு பண்ணக் கூடியது; யுத்தம் முடிந்த பிறகுகூட உலகத்தில் அமைதி இல்லாமல் செய்யக் கூடியது.

இன்னொரு முறை, சற்று சுலபமான முறை; இராஜபாட்டையில் செல்வது போன்ற முறை; உலகத்தின் வருங்கால க்ஷேமத்துக்கே அனுகுணமானது.

முதல் முறையின்படி, பிரிட்டிஷ் பலத்தையும் அமெரிக்க பலத்தையும் ஒன்று திரட்டி, தரைப்படை, கடற்படை, ஆகாசப்படை எல்லாவற்றினாலும் நாலா புறங்களிலும் அகண்டிருக்கும் ஜப்பானை நெருக்க வேண்டியது. ஜப்பான் ஆதிக்கத்துக்குட்பட்டிருக்கும் தேசங்களையெல்லாம் விடுவித்துப் பழையபடி பிரிட்டிஷ் அமெரிக்க ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர வேண்டியது. கடைசியாக, ஜப்பானை ஜப்பானிலேயே போய்த் தாக்கி நிர்மூலம் செய்ய வேண்டியது. அப்புறம், என்றென்றைக்கும் பஸிபிச் சமுத்திரத்தின் ஆதிக்கத்தை பிரிட்டனும் அமெரிக்காவும் பங்கிட்டுக் கொள்ள வேண்டியது.

இரண்டாவது முறை என்னவென்றால் ஜப்பானை ஜயிக்கும் விஷயத்தில் தற்போது ஜப்பான் ஆதிக்கத்தின் கீழுள்ள நாடுகளின் ஜனங்களுடைய கூட்டுறவையும் தேட வேண்டியது. பிரிட்டிஷ்-அமெரிக்கப் படை பலத்தோடு அந்தந்த நாட்டு ஜனங்களின் பூரண உதவியையும் பெற்றுக் கொண்டு யுத்தம் செய்ய வேண்டியது. யுத்தம் முடிந்ததும் அந்தந்த நாடுகளை அந்தந்த நாட்டு மக்களிடமே ஒப்படைப்பதாக உடனே உறுதிமொழி கூற வேண்டியது.

இந்த இரண்டாவது முறையில், உயிர்ச்சேதம் கம்மியாயிருக்கும். வெற்றியும் இன்னும் கொஞ்சம் விரைவில் கிடைக்கும். ஜப்பானியருடைய யுத்த வெறிகூடத் தணிந்து, அவர்களே தங்கள் தோல்வியை ஒப்புக் கொண்டு போரை நிறுத்திவிடக் கூடும்.

ஆனால், இரண்டாவது முறையைக் கடைப்பிடிப்பதாயிருந்தால் அதற்குப் பூர்வாங்கமாகச் செய்ய வேண்டிய காரியம் ஒன்றிருக்கிறது.

பிரிட்டிஷ் - அமெரிக்கரின் வாக்குறுதியை பர்மியர், மலாய் நாட்டார் முதலியோர் நம்ப வேண்டுமானால், இந்தியா விஷயத்தில் பிரிட்டிஷார் அந்தக் கொள்கையைக் கடைப்பிடித்துக் காட்ட வேண்டும். அதாவது இப்பொழுதே, இன்றைக்கே, இந்தியாவில் உண்மையான ஜனப் பிரதிநிதிகளின் ஆட்சியை நிலைநாட்ட வேண்டும்.

இந்தியாவுக்குச் சுதந்தரம் கொடுக்க விரும்பாமல் அடிமைத் தேசமாகவே வைத்திருக்கும் எண்ணமிருந்தால், அதற்கு ஆயிரம் சாக்குகளையும் பொய்க் காரணங்களையும் திவ்யமாய்க் கற்பித்துச் சொல்லலாம்.

ஆனால் இந்தியாவின் சுதந்தரக் கோரிக்கையைத் தள்ளிப் போட உண்மையான, நியாயமான, காரணம் ஒன்றுகூடக் கிடையாது. உலகம் ஒப்புக் கொள்ளக் கூடிய காரணம் ஒன்றுகூடக் கற்பனை செய்யவும் முடியாது.

எனவே, சுலப முறையில், இராஜ பாட்டையான முறையில், ஜப்பானை ஜயிக்க விரும்பினால், அதற்கு முதல் காரியமாக இந்தியாவுக்கு விடுதலை அளிக்க வேண்டும். ●

(கல்கி, செப். 17, 1944)

கொதித்துப் போயிருக்கிறார்கள் நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த ஆதிவாசி மக்கள். குழம்பிப் போயிருக்கிறது அரசு. போராட்டம், தர்ணா என்று புரட்சியில் இறங்கியிருக்கும் கிராம மக்களால் தர்மசங்கடமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது வனத்துறை இலாகா. விஷயம் எந்த நிமிஷம் விபரீதமாகிவிடுமோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார் வனத்துறை அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமி.





சரணாலய விஸ்தரிப்பு: சரண்டரான அரசு!

முதுமலை வன விலங்குகள் சரணாலயத்துடன் அதனருகே இருக்கும் சிகூர், சிங்காரா ஆகிய வனச் சரகங்களை (240 ச. கிலோ மீட்டர் பரப்பு) இணைத்து சரணாலயத்தை விஸ்தரிக்கும் அவசர உத்தரவு ஒன்றைப் பிறப்பித்தது அரசு. பிரச்னை முளைத்தது இங்கேதான்.

சிகூர், சிங்காரா பகுதிகள் ரிஸர்வ் ஃபாரஸ்ட் ஏரியாதான் என்ற போதிலும் இங்கே வசிக்கும் கிராம மக்கள், ஆதிவாசிகளுக்கு ஜீவாதாரமே இந்த வனப் பகுதிதான்.

ஆயிரக்கணக்கான ஆடு மாடுகளின் மேய்ச்சல் நிலமாகவும் ஆதிவாசிகளின் முக்கியத் தொழில்களான தேன் எடுத்தல், நெல்லிக்காய், கடுக்காய், பூச்சக்காய் சேகரித்தல் போன்றவற்றுக்கு உகந்த பிரதேசமாகவும் இருப்பது இந்த வனப்பகுதிதான்.

இப்போது இந்த 240 சதுர கிலோ மீட்டர் நிலப்பரப்பை முதுமலை சரணாலயத்துடன் இணைத்து விட்டால், அது கட்டுப்பாட்டுக்குட்பட்ட பகுதியாகிவிடும். கிராமவாசிகளின் தொழில் நின்று விடும். உணவுக்கு வழியற்றுப் போய்விடும்.

"ஆடு, மாடுகளின் பால் மட்டுமல்ல; சாணம்தான் இவர்களின் வருமானத்தின் பெரும் பகுதியை அளிக்கிறது. இங்கு பொறுக்கப் படும் சாணம், நல்ல உரமாக்கப் பட்டு கேரளாவுக்கு அனுப்பப்படுகிறது. இந்தச் சரணாலய விஸ்தரிப்பினால், சாணம் பொறுக்குவது உடனடியாகத் தடை செய்யப்படும். மக்கள் இதனை எதிர்ப்பதன் காரணம் இதுதான்" என்றார் மசினக்குடி கிராமத்தைச் சேர்ந்த ஒருவர்.

கால் நடைகளையே பெரிதும் வருமானத்துக்கு நம்பியுள்ள இப்பகுதி கிராம மக்களுக்கு, மேய்ச்சல் நிலம் என்று அரசு ஏதும் ஒதுக்கித் தராததே பிரச்னையின் ஆரம்பம் – என்றார் கூடலூர் பஞ்சாயத்து



• முபாரக் (எம்.எல்.ஏ.)

நான்கு மணி நேரம் ஓடக் கூடிய அளவில் இந்தியாவில் ஒரு படம் தயாரானது! தியேட்டரில் இந்தப் படத்திற்காக இரண்டு முறை இடைவேளை விடுவார்கள். படம் 'மேரா நாம் ஜோக்கர்'. தயாரிப்பாளர் இயக்குநர் ராஜ்கபூர்.

— தகவல் : [illegible]

யூனியனின் வைஸ் சேர்மன் வர்கீஸ்.

கூலித் தொழிலாளிகள் தினசரி ரூ. 50, 60 சம்பாதிப்பது இனி சாத்தியமில்லை என்பதாலும் விவசாய நிலங்களைப் பயன்படுத்த முடியாமல் போகும் என்பதுமே மக்களைக் கொதிப்படையச் செய்திருப்பதாகச் சொன்னார் அவர்.

இதைவிட முக்கியமாக இந்த சீகூர், சிங்காரா ரேஞ்சுக்கு உட்பட்ட பகுதிகளில் சுமார் பத்துப் பள்ளிக் கூடங்களும் ஆதிவாசிகளிடையே முக்கியமான தெய்வமாகக் கருதப்படும் 'பொக்காபுரம் மாரியம்மன்' ஆலயமும் இருக்கின்றன.

சரணாலய விஸ்தரிப்பினால், இங்கே நடமாட்டமே கட்டுப்படுத்தப்படுவதோடு, செக்போஸ்ட் தொந்தரவு உள்ளிட்டப் பல நெருக்கடிகள் நேரும் என்கிறார்கள் கிராம மக்கள்.

இது பற்றி மாரியம்மன் கோயில் பூசாரி பைரனிடம் பேசியபோது, "முதுமலையிலுள்ள ஓம்பட்டா, இம்பூர் மாரியம்மா கோயிலுக்கு இப்ப யாரும் போக முடியறதில்லை. மக்கள் ரொம்ப வருத்தப்படறாங்க. இதே நிலை இனி இங்கயும் வந்துடும்" என்றார் வருத்தத்துடன்.

ஆனால், முதுமலை சரணாலய அதிகாரி ஏ. உதயணன், இவர்களின் பயமெல்லாம் காரணமில்லாதது என்கிறார்.

சீகூர், சிங்காரா ரேஞ்சில் உள்ள ஆயிரக்கணக்கான கால் நடைகளின் சாணம் கேரளாவுக்கு அனுப்பப்படுவதே தவறு என்கிறார் இவர்.

"சாணம் பொறுக்கும்போது வனப் பிரதேசத்தின் மேல் மண்ணும் ஒட்டிக்கொண்டு போகிறது. இது நிலத்துக்கு அபாயம். இது மட்டுமல்ல. கணக்கற்ற கால்நடைகளை மேய விடுகிறார்கள். ஏதாவது ஒரு மாட்டுக்கு நோய் வந்தால் அது எல்லாவற்றுக்கும் பரவி, விஷயம் விபரீதமாகிவிடும். நோய் வந்த மாடுகளின் எச்சில் பட்ட மண்ணில் - மான்களோ, வேறு விலங்குகளோ புல் மேய்ந்தால் அவற்றுக்கும் நோய் பரவும்" என்றார்.

சீகூர், சிங்காரா பகுதியை முதுமலை ரேஞ்சுடன் இணைப்பதன் காரணம், இப்பகுதியில் அதிகம் நடமாடும் கழுதைப் புலிகளைப் பாதுகாப்பதற்குத்தான் என்ற உதயணனிடம், சரணாலயமாக இது விஸ்தரிக்கப்பட்டால், மக்களின் கதி என்ன என்று கேட்டோம்.

"மேய்ச்சல் நடைபெறத் தடை இருக்காது. ஆனால் சாணம் பொறுக்க முடியாது. பட்டாநிலங்களில் விவசாயத்துக்குத் தடை இருக்காது. சாலைகள் மூடப்படாது. கோயில், பள்ளிகள் பற்றி எவ்வித அச்சமும் வேண்டாம்" என்றார் தீர்மானமாக.

இதனிடையே, சரணாலய விஸ்தரிப்பை எதிர்த்து, மசினக்குடி மக்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கத் தொடங்கியிருக்கிறார், கூடலூர் எம்.எல்.ஏ.வான முபாரக். (தி.மு.க.)

"வனங்களைக் காப்பது போலவே, வனப் பகுதி வாழ் மக்களைக் காப்பாற்றும் பொறுப்பும் அரசுக்கு இருக்கிறது அல்லவா? ஆகவே, மக்களின் உணர்வுகளை மதித்து, சீகூர், சிங்காரா ரேஞ்சை முதுமலையுடன் இணைக்கும் திட்டத்தை நிறுத்திவைக்க ஏற்பாடு செய்துள்ளேன்" என்றார் முபாரக்.

இது வோட்டு நோக்கத்தால் மட்டுமே செய்யப்பட்டிருக்கும் காரியம் என்று வனத்துறைக்கு ஆதரவாகப் பேசுவோர் குமுற, தொலைபேசியில், அமைச்சர் பொங்கலூர் பழனிச் சாமியைத் தொடர்பு கொண்டோம்.

"நீங்கள் குறிப்பிடும் வனச் சரகப் பகுதியை மேலும் சிறப்பாகச் செயல்படச் செய்யும் நோக்கோடுதான் அதை விஸ்தரிக்க எண்ணினோம். திட்டத்தை மத்திய அரசு ஒப்புதலுக்கும் அனுப்பத் திட்டமிட்டோம். அந்தப் பகுதிகளில், ஏழை எளிய மக்களுடன் சில வசதி படைத்தவர்களும் 'மாடு மேய்க்கிற' சாக்கில் சாணம் பொறுக்கி விற்பதைத் தடுக்கும் விதமாகவே நடவடிக்கை எடுத்தோம். இதில் அப்பாவி மக்களும் பாதிக்கப்படவே அதை முன்பு எப்போதும் போலவே தொடர அனுமதித்து விட்டோம். என்றாலும், வனப் பகுதியை சேதப்படுத்தும் விதமான நடவடிக்கைகளை மட்டும் தடுக்க உரிய நடவடிக்கை எடுத்து வருகிறோம்" என்றார்.

முதுமலை சரணாலய விஸ்தரிப்பு இதன் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதை, 'தாற்காலிக ஒத்திவைப்பு' என்றே சொல்கிறார்கள் விஷயம் தெரிந்தவர்கள். ●

— கா.சு. வேலாயுதன்

13

ரியாஸ் அகமத் - ப்ரபாகர் ராவின் சந்திப்பு அத்தனை சுமுகமாக இல்லை. ப்ரபாகர் ராவுக்கு அது தன்மானப் பிரச்னை. நம்மால் கண்டுபிடிக்க முடியாததை இவன் எப்படிக் கண்டுபிடிக்க முடியும்? விவகாரம் அரசியலாக்கப்பட்டதால் சிபிஐ என்கிற மந்திர வார்த்தை! சில நாட்களுக்கு அதன் மேல் எதிர்க்கட்சி கவனத்தைக் கலைக்கும் என்கிற நம்பிக்கையோடுதான் மாநில அரசு சிபிஐ விளித்திருக்கிறது என்று தீவிரமாக நம்பினார். ஆனால் சிபிஐக்குத் தரும் ஒத்துழைப்பில் ப்ரபாகர்ராவுக்குத் தயக்கம் சற்று அதிகமாகவே இருந்தது.

அதை ரியாஸும் கவனித்தார்.

ரியாஸ் அதற்காக அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை. அவர் ஒரு யதார்த்தவாதி. கொடுத்த எந்த வேலையிலும் முழுமையாக ஈடுபட்டு முடிப்பவர்.

''சார், நீங்க இதுவரை செய்து வந்த எல்லா விசாரிப்புகளும் எங்களுக்கு உபயோகமானதுதான். எங்களுக்கு அஸ்திவாரம். நீங்க ரொம்ப திறமையா இந்த கேசை இதுவரை எடுத்து வந்திருக்கீங்க. நெருக்கடி பண்ணாம இருந்தா, உங்களாலேயே இந்த கேசை 'சால்வ்' பண்ணித் தர முடியும். எங்களுக்குத் தெரியும்! நீங்க உங்க கடமைய செய்யறாப்பல நாங்க எங்க கடமையை செய்யறோம். எங்க டிஜிகிட்டருந்து எனக்கு ஆர்டர் வந்திருக்கு. உங்களுடைய ஒத்துழைப்பு இல்லைன்னா எங்க டிஜி உங்க டிஜிக்கு ஒரு டிஓ லெட்டர் எழுத வேண்டி வரும். அதும் நடக்கலைன்னா சி.எம்முக்கு.''

''வளவளன்னு பேசாதீங்க! உங்களுக்கு என்ன வேணும்?''

''இதுவரை நீங்க கண்டுபிடிச்ச விவரங்கள் எல்லாம் ஒண்ணு விடாம வேணும். நாங்க திரும்ப எதையும் செய்ய விரும்பலை.''

''கேஸ் பைல் எல்லாம்தான் கொடுக்கச் சொல்லிட்டமே?''

''பேப்பர்ஸ் எங்க கைக்கு வரலை. மேலும் அதில உங்க கூட வேலை செய்தார் பாருங்க ஏஎஸ்பி சங்கர், அவரை எங்க கூட ஒரு பத்து நாளைக்கு அனுப்பி வெக்கணும். நாங்க முழுமையா டேக்ஓவர் பண்ற வரைக்கும் அவர் ரெண்டு டிப்பார்ட்மெண்ட்டுக்கும் பாலமாக இருக்கலாம்.''

சங்கரை வரவழைத்துப் பேசினார்.

''சங்கர் அடுத்த வாரம் உங்களுக்கு முக்கியமான ட்யூட்டி இருக்கா?''

''இருக்கு'' என்று சொல்வார் என்று எதிர்பார்த்துத்தான் கேட்டார்.

''இல்லை சார்.''

''தசராவுக்கு மைசூர் பந்தோபஸ்துக்கு போக வேண்டாமா? சி.எம். போறாரே!''

''அதுக்கு நாகராஜ் போறார் ஸார்.''

''ஓ. அப்படியா!



ஆர்யபட்டா

சுஜாதா



சரி, வரச் சொல்றேன். நீங்க போகலாம்'' என்றார் ரியாசிடம்.

ரியாஸ் சென்றதும், ''கஷ்டப்பட்டுக் கண்டுபிடிச்சது நாம். நேத்து வந்த அவங்க க்ரெடிட் எடுத்துப்பாங்களாம். குறைந்த பட்சம், என்ன காட்டணுமோ காட்டு. அதிகம் பட்டும் படாம இருங்க'' என்றார்.

வெளியே வரவேற்பறையில் ரியாஸ் காத்திருந்தார். ''என்ன சொன்னார் ப்ரபாகர்ராவ்? ஒத்துழைப்பு தராதேன்னு தானே? எங்களுக்கு இது சகஜம்தான் சங்கர். இது ஈகோ பிரச்னையினால! சங்கர்,ற கேசை நாங்க தீர்த்து வெச்சாலும் முழுப் பாராட் டும் உங்களுக்குத்தான்.''

''இப்ப உங்களுக்கு என்ன வேணும்?''

''டாக்டர் ஆனந்தோட போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்.''

''ஆபீசுக்கு வரீங்களா? காப்பி தரேன்.''

''காப்பி காஃபி ரெண்டும் வேணும்'' என்றார் ரியாஸ்.

''நாம ரெண்டு பேரும் ஒரே பாட்ச். எதுக்காக விரோதிகள் மாதிரி நடந்துக்கணும்?''

போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டை பார்த்த ரியாஸ் வெகு நேரம் யோசனையில் ஆழ்ந்தார்.

''என்ன யோசிக்கறீங்க? தற்கொலையா இருக்கும்னா?''

''இல்லை! இந்த ரிப்போர்ட்டில வினோதமா ஒன்னு இருக்கே கவனிச்சீங்களா? இறந்து போன போது ஆனந்த் கால்ல ஷூ போட்டிருந்தார்.''

''அவார்டு பங்ஷனுக்குக் கிளம்பியிருக்கார்.''

''அதுக்கில்லை! அந்த ஷூவில லேசா உப்பு இருந்ததா கெமிக்கல் ரிப்போர்ட்ல இருக்குதே கவனிச்சீங்களா?''

''கவனிச்சோம்.''

''அதுக்கு என்ன விளக்கம்?''

''இதை நாங்க ரொம்ப விவாதித்தோம். கடைசில இறந்து போறதுக்கு முன்னாடி பயத்தில சில பேர் மூத்திரம் அடிச்சுருவாங்க. அது ஷூல பட்டு காஞ்சு போயிருக்கலாம்னு யோசிச்சோம். மேலும் ஆனந்த் லாப்ல எவ்வளவோ கெமிக்கல்ஸ் இருக்கு! அது சிந்திருக்கலாம்னு...''

ரியாஸ் யோசித்தார். இருக்கலாம்! இருந்தாலும் இதை மனசின் ஓரத்தில்



போட்டு வெச்சுக்கலாம்! ரியாஸ் ஒரு சிறு குறிப்புப் புத்தகத்தில் 1. காலணியில் உப்பு என்று எழுதி அதன் பக்கத்தில் ஒரு கேள்விக்குறியிட்டார்.

"ஆனந்தோட உடம்பில போராட்டத்துக்குரிய எந்த அடையாளங்களும் இல்லை. அதை கவனிச்சீங்களா?"

"அதான் முக்கியமான எவிடன்ஸ். தெரிஞ்ச ஆளு கொன்னிருக்கான். அல்லது சட்டென்று எதிர்பாராம கொன்னிருக்கலாம்! கொன்னது அன்னியன் இல்லை. தெரிஞ்சவன்னு அன்னிக்கு ஆனந்தை வந்து பார்த்தவங்களையெல்லாம் ஒவ்வொருத்தரா கிளியர் பண்ணோம்."

"யார் யாரை?"

"அவருடைய கலீக் டாக்டர் சோமசுந்தரம். அப்புறம் சோனுன்னு ஒரு பொண்ணு. அப்புறம் சமீபத்தில ஆனந்துடைய மனைவியுடைய உறவுக்காரப் பையன் சோமசேகர்னு. பாருங்க எல்லாருக்கும் பொதுவா சோமு, அல்லது சோனுன்னு...."

"ஆமா, வாட் இஸ் திஸ்?"

"ஆனந்த் இறந்த போது அவர் 100ஐக்

"என்ன இது. திரையிலே ஸ்ரீலங்கா மாதிரி ஏதோ தீவு தெரியுதே?"

"அதெல்லாம் இல்லே. அது கதாநாயகியின் கன்னத்திலே இருக்கும் கண்ணீர்த் துளி. கேமிராமேன் ரொம்ம்ம்ப க்ளோஸப்பா எடுத்துட்டார்."

— குல்லூ



கூப்பிட்டு சொன்ன ஒரே வார்த்தை சோமு அல்லது சோனு!"

"ஓ அப்படியா! வெரிகுட்! அதனால சோமு சோனு எல்லாரையும் பார்த்துட்டீங்க; அப்படித்தானே?"

"ஆமாம்."

"எதாவது பாசிட்டிவா தெரிஞ்சதா?"

"இல்லை. கடைசில ஒரு வீடு. கொஞ்சம் தீவிரமா தொடர்ந்துகிட்டு இருந்தப்ப நீங்க வந்துட்டீங்க."

"சோமசுந்தர், சோமசேகர், சோனாலி வேற ஏதாவது சோமு?"

"இல்லை."

ரியாஸ் குறிப்புப் புத்தகத்தில் வேறு ஏதேனும் சோமு என்று எழுதி இரண்டு கேள்விக்குறிகளை அதனருகில் வைத்தார்.

"துப்பாக்கியைப் பத்திப் பேசலாம்."

"துப்பாக்கி கொஞ்சம் தண்ணி காட்டிருச்சு. பாலிஸ்டிக் ரிப்போர்ட்படி துப்பாக்கி குண்டு வெளிப்பட்ட துப்பாக்கியை பக்கத்து வீட்டில ஜமதக்னிங்கறவர் வீட்டுக் கிணத்திலருந்து எடுத்தோம். கொலைகாரன் அதில போட்டுட்டுப் போயிருக்கான். அந்த வகை துப்பாக்கியை சோனுங்கற பெண் பெங்களூர் ஆர்மரியில வாங்கிருக்கா. அவளை விசாரிச்சதில ஆனந்த்தான் தனக்குச் சமயமில்லாததால என்னை வாங்கிட்டு வரச் சொன்னார்னு தெரிவிச்சா. முதல்ல துப்பாக்கி வாங்கினதையே மறுத்துட்டா! அப்புறம் பயந்து போய்..."

"ஒத்துக்கிட்டாள்."

"அதனால ஆனந்தைக் கொன்னவனுக்கு ஆனந்த்கிட்ட அந்தத் துப்பாக்கி இருந்திருக்கிறது தெரிஞ்சிருக்கணும்."

"நல்ல லாஜிக். இதைப் பத்தி ஆனந்த் மனைவிகிட்ட விசாரிச்சீங்களா?"

"இன்னும் இல்லை."

"நான் சந்திக்கிறேன் அவங்களை. அதுக்கப்புறம்?"

"ஆனந்த் என்ன ரிசர்ச் பண்ணிட்டு இருந்தார்? அது தேசத்துக்கு முக்கியமா? அதில ஏதாவது நாட்டின் ரகசியங்கள் - எனிதிங் சென்சிட்டிவ்?"

"ஆனந்த் தன் டிராக்டருக்கு ஒரு ஆராய்ச்சிக்கு உரிய ப்ரபோசல் கொடுத்திருக்கார். அது நிராகரிக்கப்பட்டதினால அவருக்கு ரொம்ப கடுப்பு! அவருடைய ஐடியாவை டாக்டர் சோமசுந்தர் திருடி ஆர்ய பட்டா அவார்டு வாங்கிட்டதா டிராக்டர்

கிட்டயே சண்டை போட்டிருக்கார்...."

''கொலைக்கு உண்டான காரணம் இன்னும் தெளிவாகலை. அதான் இந்த கேஸ்ல பிரச்னை. நீங்க கண்டுபிடிச்ச காரணங்கள் எல்லாமே அரைக் காரணங் கள்தான். கொலை வரை போறதுக்கான வலுவான காரணங்கள் இல்லை" என்றார் ரியாஸ்.

''அப்ப இதுவரை சிந்திக்காத ஒரு காரணம் இருக்கலாம்ங்கறீங்க?''

"இருக்கலாம்! வாங்க முதல்ல மனைவியைப் போய்ப் பார்க்கலாம்."

அவர்கள் சென்றபோது சேகர் வீட்டில் இருந்தான். சேகர் புன்னகையுடன் வரவேற்றான். "போலீசுக்கு எல்லாவிதத்திலயும் ஒத்துழைக்க விரும்பறோம்."

"இவர் ரியாஸ்னு சிபிஐ ஆபீசர்."

''பேப்பர்ல பார்த்தேன். கேசை சிபிஐகிட்டே ஒப்படைச்சிருக்கிறதா. என்ன கேக்கணும்?''

"உங்களை இல்லை, அவங்களை."

''உடம்பு சரியில்லை. ரெண்டு நாள் விட்டு வர முடியுமா?''

"ஒரே ஒரு கேள்விதான் கேக்கணும். துப்பாக்கியைப் பத்தி."

"என்னைக் கேளுங்களேன்."

"இல்லை அவங்களை" என்றார் ரியாஸ் அழுத்தமாக.

அப்போதுதான் உள்ளே வந்த பாரதி வெளிர் மஞ்சள் நிறத்தில் சாரி அணிந்து நெற்றியில் லேசாகப் பொட்டிட்டிருந்தாள். கையில் Demon Haunted World என்கிற புத்தகத்தைப் பார்த்தார். "எனக்குக் கூட கார்ல் சாகன் பிடிக்கும்."

முகம் சற்று தெளிந்திருந்தது.

"அப்பா கொடுத்தார். ஏதோ புத்தகம் படிக்கணுமேன்னு படிக்கிறேன். எதிலும் இப்போது ஆர்வமில்லை" என்றாள்.

"மிஸஸ் ஆனந்த். உங்க கணவர் எப்பவாவது துப்பாக்கி வாங்கினதைப் பத்தி உங்ககிட்ட சொல்லியிருக்காரா?"

"துப்பாக்கியா?" பாரதி சேகரைப் பார்த்தாள்.

''துப்பாக்கி வச்சிருந்தானா? எனக்கு ஞாபகம் இல்லையே?''

"இது முக்கியமான தகவல்ங்க. சரியா யோசிச்சு நிதானமா ஞாபகப்படுத்திக் கொண்டு சொல்லுங்க. உங்க கணவரை



''பயங்கர சஸ்பென்ஸ் படம் ஒண்ணு எடுக்கறீங்களாமே. என்ன தலைப்பு?''

''நடிகையின் வயது!''

– வெ. ராஜாராமன்

கொன்ன துப்பாக்கி அவரே வாங்கினதுங் கறது எங்களுக்கு பாலிஸ்டிக் ரிப்போர்ட்லருந்து தெரிய வருது."

"வச்சிருந்தார்! நான் கூட அது எதுக்குன்னு கேட்டப்ப, ஆராய்ச்சிக்கு தேவைப் படுதுன்னார்."

"வீட்லயே வெச்சிருந்தாரா?''

"ஆமாம்."

"எங்க வெச்சிருந்தார்?"

"அவருடைய அறையில டிராயர்ல."

"தாங்க்ஸ்! இது எங்களுக்கு ரொம்ப முக்கியமான தகவல். இனி உங்களைத் தொந்தரவு பண்ண மாட்டோம். வாங்க சங்கர்!"

சங்கர் அலுவலகத்துக்கு வந்ததும் அவருக்கு போன் வந்தது.

"யாரோ சேகராம். மூணு முறை போன் பண்ணிட்டார்."

"சார், நான்தான் சேகர் பேசறேன். உங்ககிட்ட ஒரு முக்கியமான விஷயம் சொல்ல விரும்பறேன்."

"என்ன?"

"ஆனந்தை நான்தான் கொன்னேன்" என்றான்.

(தொடரும்)

சாண்டில்யன்

எழுதிய

ராஜபேரிகை

சரித்திரத்
தொடர்

- **சிவசங்கரியின்**
  'வெள்ளி என்றால்
  வெனிஸ் நகரம்தான்'
  - பயணத் தொடர்
- **ராஜேஷ்குமாரின்**
  கையில் சிக்கிய மின்னல்
  - பரபரப்புத் தொடர்
- **அனுராதாரமணனின்**
  சங்கிலிச் சிறுகதைகள்

மற்றும்

சாவி

22.10.98
இதழில்
ஆரம்பம்

முத்தான மொழிகள்!

வட்டமேஜை:

✉ 'ஊழலற்ற முன்னணி' தலையங்கம் படித்தேன். மூன்றாவது அணி உருவாவது பற்றித் தெளிவாக அலசி, ஆராய்ந்து எழுதியிருந்தீர்கள். இது தொடர்பான மூப்பனாரின் நிலையை நியாயப்படுத்தி விளக்கியிருந்தது, பாராட்டத்தக்கது. பி.ஜே.பி. ஆட்சி கவிழ்ந்தால், மாற்றாக அமையும் கூட்டணிக் கட்சிகளின் அணி எதுவாக இருந்தாலும் ஊழலற்ற ஆட்சியைக் கொடுத்தால் சரி தான்.
மொரட்டுப்பாளையம்,
கு.நா. இராஜேஸ்வரன்.

✉ துணைத் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போல் திரைப்படம் குறித்த பாடம் வைப்பதில் மிகுந்த எச்சரிக்கை தேவை. திரை உலகில் முத்திரை பதித்த ஒரு முதல்வர் என்பதால் அமுலாக்கத்திலும் அவர் தனி கவனம் செலுத்துவார் என எதிர்பார்க்கலாம்.
திருவரங்கம், அ. சம்பத்.

✉ 356 மற்றும் மயான பூமி கார்ட்டூன்கள் பார்த்து, ரசித்துச் சிரித்தேன். உடனே, வேதனை கலந்த பெருமூச்சும் வெளிப்பட்டது.
கரூர், எஸ். ராஜம்.

✉ 'கேள்வி ஒன்று பதில்கள் இரண்டு' என்ற பேட்டியில் மனித நேயம் ஒளி வீசுகிறது. இதைப் போன்ற பேட்டிகள் தொடர்ந்து வெளிவந்தால் வெடிகுண்டு கலாசாரத்திற்கே நம்மால் வெடி வைத்திட முடியும்.
பொறையாறு, கங்காகணேசன்.

✉ 'கேள்வி ஒன்று பதில்கள் இரண்டு' - சரியான நேரத்தில் வழங்கப்பட்டுள்ள சரியான கட்டுரை, மதத்தையே உயிர் மூச்சாகக் கொண்டுள்ள இரு மதப் பிரியர்களின் மதச் சார்பற்ற பதில்கள் மனதை ஆறுதலாக வருடியது.
அரசரடி, நெல்லை. வி. சிவா.

✉ கல்லூரி மாணவிகள் உதிர்த்த மொழிகள் முத்தானவை. சிந்திக்க வைப்பவை. அத்தனை பேரும் புரட்சிவாதிகள், சீர்திருத்தவாதிகள், சர்வாதிகாரிகள் அல்லர்.
திருவண்ணாமலை, ஆர்.ஆர். சாமி.

✉ ஒரு பெண் சர்வாதிகாரியாய் இருந்தால் என்ன நடக்கும் என்பது தெரியாதாக்கும்? என்ன ஒரு மறதி உங்களுக்கு! இதுக்காக மதுரைக்குச் (சபாஷ்! சரியான ஊர்தான்) சென்று பெண்களைப் பேட்டி காண வேண்டுமாக்கும்!
தூத்துக்குடி, கே. சுதர்ஷன்.

✉ என்ன இந்த இதழ் 'ஜோக்' ஸ்பெஷலா? நிறைய ஜோக்ஸ் போட்டு கலக்கிட்டீங்களே!
பெருக்குறிச்சி, அனிதா பிரியன்.

✉ நோயைக் கண்டறிவதற்காகத் தற்போது நோயாளிகளைப் பலவிதமான டெஸ்டுகளைச் செய்யச் சொல்லி பண விரயம் செய்ய முனையும் அலோபதி டாக்டர்களைவிட, நாடி பார்த்து நோயைக் கணிக்கும் டாக்டர் நரம் போன்ற நாட்டு வைத்தியர்கள் எவ்வளவோ மேல்!.
அயன்புரம், கி. ராமதாஸ்.

✉ தேர்தலில் போட்டியிட்டு இரண்டு முறை தப்புக் கணக்குப் போட்டுத் தோற்றுவிட்டதாகக் கூறும் மணிசங்கர அய்யர் மூப்பனார், சிதம்பரம் விஷயத்திலும் தப்புக்கணக்குப் போட்டுத் தோற்பார் என்பது நிச்சயம்!
மதுரை -9, இரா. கல்யாணசுந்தரம்.

✉ 'சிறுதுளி பெருவெள்ளம்' என்பதை நிஜமாக்கி, உழைத்துக் கொண்டிருக்கும் கண்டமானடி கிராமத்துப் பெண்களின் துணிவும், அயராமையும் மூக்கில் விரலை வைக்கச் செய்து விட்டது. பாரதி கண்ட கனவு மாய்ந்து போகாமல் இவர்களைப் போன்ற பெண்களால் உயிர் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறது என்பதில் மனம் தெம்படைகிறது.
தேவனாங்குறிச்சி, பா. வடிவேல்.

✉ வாழ்க்கையில் வெற்றி என்பது ஒரே நாளில் வந்து விடாது. அதற்கு அடிமட்டத்திலிருந்து படிப்படியாக உழைத்துப் பாடுபட வேண்டும் என்னும் உயரிய கருத்தை உள்ளடக்கிய சிறுகதை 'உளிகள்'.
திருப்பரங்குன்றம், டி.கே. சுப்பிரமணியன்.

அறிவாலயம் என்ன, அரசு கஜானாவா?

● வி. பரமு, மதுரை - 16

? ஜெயலலிதாவைத் தலைமை நீதிபதி ஆனந்த் சந்திக்க ஒப்புக் கொண்டது தவறு என்று எழுந்துள்ள சர்ச்சை பற்றி....?

! தார்மீக நெறிகளின்படி அந்தச் சந்திப்பு நிகழ்ந்திருக்கக் கூடாதுதான். சந்தேகம் எழுவதும் இயல்புதான்.

● கே. பெருமாள், கூனியூர்.

? கலவரங்கள் வெடித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் சிலை நிறுவுதலைத் தடை செய்யலாமே?

! ஜாதிக் கலவரங்களைத் தூண்டக்கூடிய சுவரொட்டிகளும் எழுத்துக்களும் தடை செய்யப்பட்டுள்ளனவே... ஊர்வலங்கள் தடை ஒட்டுமொத்தமாக அன்றி அந்தந்த சந்தர்ப்பத்தைப் பொறுத்து முடிவு செய்யப்படும் என்று கூறியிருக்கிறார்கள். இது போன்ற தடைகளால் இந்தப் பிரச்னையை முழுமையாகத் தீர்க்க முடியாது என்பதை அரசு உணர வேண்டும்.

● தாரை. மா. மகேஷ் ப்ரியன்.

? காந்தி ஜெயந்தி அன்று கர்நாடக உள்துறை அமைச்சர் அசைவவிருந்து வைத்தாராமே....? இது எதைக் காட்டுகிறது?

! புத்த பூர்ணிமா அன்று போக்ரானில் வெடிக்கவில்லையா...? அதுபோல்தான் இதுவும்! படிப்பது ராமாயணம், இடிப்பது பெருமாள் கோயில் கதைதான்!

● ஆ. தமிழ்துரைசாமி, பாலசமுத்திரம்.

? லோக்பால், லோக்யுக்தா மசோதாக்களை நிறைவேற்றுவதால் மத்தியிலும் மாநிலத்திலும் ஊழல் அமைச்சர்கள் உருவாகாமல் இருக்க வழி ஏற்படுமா....?

! ஓரளவு ஏற்படும். ஊழல் அரசியல்வாதிகளுக்கு வாக்களிக்க மாட்டோம் என்கிற சபதத்தை நூறு சத மக்களும் மேற்கொண்டாலன்றி எந்த மசோதாவிலும் முழுமையான பயன் இருக்காது.

● ஆர். காஞ்சனா, நெய்வேலி - 3.

? பிரபல புகைப்பட நிபுணர் ஹாரி மில்லர் மறைவு குறித்து?

! கறுப்பு-வெள்ளைப் படங்களில் ஒரு சகாப்தம் படைத்தவர். ராஜாஜியை அவர் எடுத்த சில படங்கள் அற்புதமானவை. போட்டோ ஜர்னலிஸம் என்பதைக் கலையாக்கியவர்களுள் முக்கியமானவர்.

● கலை அரசு, கோவை - 42.

? அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக ஜாதிக் கட்சிகள் நடத்திவரும் போட்டி எப்போது ஓயும்...?

! மதத்தின் பெயரால், ஜாதியின் பெயரால் வேட்பாளர்கள் நிறுத்தப்படக் கூடாது; வோட்டுக் கேட்கக் கூடாது; வோட்டுப் போடக் கூடாது என்று உணரப்படும்போது! அதற்குத் தேர்தல் சீர்திருத்தங்களைப் புரட்சிகரமாக நிறைவேற்றினால்தான் உண்டு! தொகுதியே ஜாதி அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளபோது, ஜாதி-மத கட்சிகள், அமைப்புகள் வேரூன்ற அனுமதிக்கப்படும்போது, ஜாதி அரசியல் தழைக்கத்தானே செய்யும்!

● ஜி. ராமதாஸ், கணபதி அக்ரஹாரம்.

? மெஜாரிட்டி - மெச்சூரிட்டி - எது சிறந்தது?

! மெச்சூரிடியுடன் கூடிய மெஜாரிட்டி! மிருகபல மெஜாரிட்டியால் பயனில்லை; அதே சமயம் மெச்சூரிட்டி இருந்து மெஜாரிட்டி இல்லையென்றால் உபயோகமில்லை.

● ந. வந்தியக்குமாரன், சென்னை - 41.

? நான் ஒரு நாத்திகன்; நீங்கள் ஒரு ஆத்திகர்! ஆனால் நான் கல்கியின் வாசகன். இது எப்படிச் சாத்தியம் – எனக்குப் புரியவில்லை... உங்களுக்குப் புரிகிறதா?

! ஏன் புரியாமல்? இரு தரப்பிலும் மனிதத்துவம் மதிக்கப்படுவதுதான் காரணம்.

● ஜி.ஜி. கிருஷ்ணன், விசலூர்.

? 'இந்தியாவில் இன்று, கட்டுக் குலையாத ராணுவ இயக்கம்' என்று பெயரோங்கி நிற்பது அ.தி.மு.க.தான் என்கிறாரே ஜெ...?

! ஆக, ஜனநாயகத்துக்கும் தமது இயக்கத்துக்கும் சம்பந்தமில்லை என்று கூறிவிட்டார்!

● ஆ. அழகேஷ், பூதப்பாண்டி. ❑

? சாதாரணமாக, கிராமங்களில் குழந்தைகள் படிக்கவில்லையென்றால் "மாடு மேய்க்கத்தான் செல்வாய்...!" என்று கூறு

❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
ஆ. அழகேஷ்,
VI, 20-21, வடக்குத் தெரு,
பூதப்பாண்டி,
குமரி மாவட்டம் - 629 852

வார்கள். மாடு மேய்ப்பது என்ன கேவல மான தொழிலா...?

! இல்லவேயில்லை. மாடு மேய்த்தல் (அல்லது பண்ணையில் பராமரிப்பு) இன்றி பால் வளம் ஏது...? எந்தத் தொழிலுமே தரக்குறை வானது அல்ல. காலத்துக்கு ஏற்ப அதில் புது மைகளைப் புகுத்துகிறவர்கள் முன்னேறு வார்கள்.

● எஸ். சரவணன், மோகனூர்.

? ஜாதிக் கலவரம் ஒழிய நிரந்தரத் தீர்வு என்ன...?

! கட்டாயக் கல்வி; எல்லோருக்கும் வேலை வாய்ப்பு; அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றம்... இவை கைகூடினால் அனாவசியமாக மனம் அலைபாயாது பாருங்கள்...!



• ராணுவத் தலைவி?!



• பாராட்டுகள்!



• அஞ்சலி!

● ஆர். வேணுகோபால், பெரியகுளம்.

? திரையுலகத்தினர் நடத்திய பாராட்டு விழாவில் பெற்ற பரிசுப் பொருட்களை எல்லாம் அறிவாலயத்துக்குக் கொடுத்து விட்டாராமே கலைஞர். அறிவாலயம் என்ன அரசு கஜானாவா?

! முதல்வர் என்கிற முறையில் அன்றி, சினிமாத் துறைக்கு கருணாநிதி செய்தவற்றைப் பாராட்டும் விதமாக சினிமாத் துறையினரால் வழங்கப்பட்டதால் அந்தப் பரிசுப் பொருட்களைக் கட்சிக்குக் கொடுத்ததில் தவறில்லை. தாமே வைத்துக் கொள்ளாமல் கொடுத்துவிட்டாரே, பாராட்டுக்குரியதுதான்.

● எஸ். ரதி, மதுரை - 10.

? லாட்டரி விற்பனைக்கும் தீபாவளி மலர் விற்பனைக்கும் வித்தியாசம் இல்லாமல் செய்து விட்டார்களே...?

! அதனால்தான் லாட்டரி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் அப் பரிசுத் திட்டங்களை அரசு தடை செய்திருக்கிறது. இத்தகைய பரிசுத் திட்டங்களை எதிர்த்துப் பொதுநல வழக்கு தொடர்ந்திருக்கும் வாய்ஸ் அமைப்பு, பரிசுத் திட்டங்கள், சிட் ஸ்கீம்கள் தடைச் சட்டத்தின் கீழ் தடை விதிக்கப்பட வேண்டும் என்று கோரியிருக்கிறது. உயர் நீதிமன்றமும் இடைக்காலத் தடை விதித்து, தீபாவளி மலர்கள் மற்றும் அவற்றின் பரிசுத் திட்டங்கள் குறித்த விளம்பரங்களையும் நிறுத்தும்படி ஆணையிட்டிருக்கிறது.



• சந்தேகமின்றி சந்தேகம்!

— தராசு

காலமுள்

சரியாகத் தூங்காததில், காலையில் விழித்தபோதே ரேவதியின் கண்களும் தலையும் வலிக்கத் தொடங்கின.

'அடுத்த வாரத்திலிருந்து கம்பெனியில் அட்டென்டென்ஸ் ரெஜிஸ்டர் இருக்காது. பதிலுக்கு ஏதோ கருவியை நிறுவப் போகிறார்களாம். அடையாள அட்டையை அதில் பொருத்தி எடுத்தால், தான் அலுவலகத்தில் நுழையும் நேரம் பதிவாகிவிடும்'.

இதை நினைத்தபோதுதான் ரேவதிக்கு ரொம்ப பயமாக இருந்தது. வாரத்துக்கு மூன்று நாட்களாவது கம்பெனிக்குத் தாமதமாகப் போகும்படி நேருகிறது – என்னதான் முன்னாளே பல விஷயங்களை திட்டமிட்டு செய்து கொண்டால் கூட. இதுவரை போர்மெனிடம் "சாரி சார்" என்று தொடங்கி பஸ் லேட், வழியில் ஊர்வலம், சாலை விபத்து, பையனுக்கு ஜுரம், குழாயில் தண்ணீர் வரலை, திடீர் விருந்தாளி என்று ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொன்று என்று கூறியாகிவிட்டது. நேற்று போர்மென் காரமாகவே கூறிவிட்டார். "சம்பளம் மட்டும் சமமாக வாங்கிக்கிறீங்க இல்லே? அப்ப ஆம்பிளைங்க மாதிரி சரியான நேரத்துக்கு ஆபீசுக்கு வரணும். எப்பவாவது லேட்டானாலும் உட்கார்ந்து வேலையை முடிச்சுட்டுப் போகணும். அதெல்லாம் இல்லையே! இனிமே லேட்டா வந்தா நிர்வாகத்துகிட்டே சொல்லிடுவேன். மெமோதான்".

ரேவதி கண்ணீரை அடக்கிக் கொண்டாள். 'இன்றிலிருந்து சரியான நேரத்துக்குச் சென்றே தீர வேண்டும். ஏழுமணி பஸ்ஸைப் பிடித்துவிட வேண்டும். அப்போதுதான் ஏழரை மணிக்குக் கம்பெனியில் இருக்கலாம்.'

ப்ரேக்குகளைத் தயாரிக்கும் நிறுவனமொன்றில் அவள் அஸெம்ப்ளி ஆபரேட்டர். பள்ளிப் படிப்பை மட்டுமே முடித்தவளுக்கு அதைவிட அதிக சம்பளம் கிடைத்து விடாதுதான். ஆனால் சம்பளத்துக்குத் தகுந்த வேலை. பிழிந்து எடுத்து விடுவார்கள். மாஸ்டர் சிலிண்டரில் வாஷர் போட்டு சீல் செய்வது அவளது முக்கிய வேலை. ஒரே ஒருமுறை வாஷர் போடாமலேயே சீல் வைத்து விட்டாள். அன்று காலைதான் நாராயணன் அவளை அடித்திருந்தான். வலது கன்னத்தின் வரிகளையும், அதிக சிவப்பையும் மற்றவர்களிடமிருந்து மறைப்பதற்குள் அவள் திணறிப் போனாள்.

"பெண்கள் சுறுசுறுப்பாகவும், கச்சிதமாகவும் வேலை செய்வீங்கன்னுதான் உங்களையெல்லாம் வேலைக்கு வச்சதே. இப்படி வாஷர் இல்லாம அனுப்பி, ஆயில் லீக் காகித் தொலைஞ்சு, ப்ரேக் வேலை செய்யலேன்னா என்ன ஆகும் தெரியுமா?" போர்மென் கத்தினார்.

முதல் முறை என்பதால் ரேவதிக்கு மன்னிப்பு வழங்கப்பட்டது. ஆனால் வீட்டில் தான் செய்யாத தவறுகளுக்குக் கூட அவளுக்குத் தண்டனை!

இன்னும் பொழுது சரியாகப் புலரவில்லை. குக்கரை வைத்தாகி விட்டது. பால் வந்து விட்டது. என்றாலும், தலைவலிக்கு காப்பி சுகமான அனுபவம் என்றாலும், பாலைக் காய்ச்ச முடியாது! நாராயணனுக்கு அப்போதுதான் காய்ச்சிய பாலில் மட்டுமே காப்பி தரப்பட வேண்டும். இன்னும் ஒரு மணி நேரம் கழித்துதான் அவன் எழுந்திருப்பான்.

குளித்த பிறகு தலைவலி அதிகமாக இருந்தது. தினமும் தலைக்குக் குளித்துவிட்டுத்தான் சமைக்க வேண்டும் என்பது மாமியாரின் கட்டளை. இரண்டு வயது விவேக் சமையல் முடிவதற்கு முன்பே எழுந்து மேலே பட்டுவிட்டால், மீண்டும் குளித்துவிட்டுத்தான் சமையலைத் தொடர வேண்டும். இதுவும் மாமியாரின் உத்தரவுதான்.

'எப்போதுமே கீழ்ப்படியும் நிலையில் இருக்கிறோமே. தன் மகனைத் திட்டக் கூட

அருண் சரண்யா



உரிமை இல்லாமல் போய்விட்டதே (இட்டி னால் நாராயணனுக்குப் பிடிக்காது) என்று நினைத்தபோது வருத்தம் அதிகமானது. தாளித்தபோது கடுகும் அதிகமாக வெடித் தது.

விவேக் தன்னிடம் பாசமாக இருக் கிறானா என்பதிலேயே கூட இப்போதெல் லாம் சந்தேகம். அவ்வப்போது வாங்கிவரும் பிஸ்கெட் மற்றும் சாக்லேட் மூலம் கண வனால் மகனைக் கவர முடிகிறதென்றால், மத்தியான நேரத்தில் கதைகள் சொல்வதன் மூலம் மாமியாரால் அவனை வசீகரிக்க முடிகிறது. தான் மட்டும் தனிமைப்படுத்தப் பட்டு விட்டோம். தனக்கு வழங்கும் சொற்ப பாக்கெட் மணியில் குழந்தையை அடிக்கடி மகிழ்ச்சிப்படுத்த முடிவதில்லை. ஓர் அவ சரத்திற்குக் கூட ஆட்டோவில் கம்பெனிக் குச் செல்ல அனுமதியில்லை.

மேலும் யோசிக்க நேரமின்றி நீரில் பருப் புக் கரைசலைக் கொட்டினாள். கண வனுக்கு மதியத்திற்கு சிற்றுண்டி அவசியம் - அதற்குத் தோதாக லைட்-டிஷ்ஷ""ம். நேரம் இல்லை என்று என்றாவது 'மத்தியானத் துக்கு சாம்பார் சாதமோ தயிர் சாதமோ வைக்கட்டுமா?'' என்றால் முறைப்பான்.

எது எப்படியோ, இன்று ஏழு மணிக்குக் கிளம்பியே ஆக வேண்டும். ஒரு ஸ்டவ்வில் ரசம் கொதித்துக் கொண்டிருக்க, இன் னொன்றில் சப்பாத்தியை வேகமாகச் செய்து முடித்தாள்.

'என்ன இருந்தாலும் தன் வேலையை விட்டுவிட முடியாது' என்பதை இவர் களிடம் காட்டிக் கொண்டிருக்கக் கூடாது. அது தெரிந்ததிலிருந்து "உன்னாலே முடிய லேன்னா வேலையை விட்டுடு" என்று கரி சனம் காட்டுவது போல் ஏளனம் செய் கிறார்கள். இவர்களை நம்பி எப்படி வேலையைவிட? அதே சமயம் குழந்தையின் வருங்காலத்தை எண்ணியும், சமூகத்தின் காரணமாகவும் இவர்களை விட்டுப் போகவும் முடியவில்லை. "ஏண்டி அவஸ் தைப்படறே? மாப்பிள்ளைதான் நீ வேலைக் குப் போகலேன்னாலும் சரின்றாரே" எனும் பெற்றோருக்கும் புரிய வைக்க முடிய வில்லை.

சீடத்து கடிகாரத்தைப் பார்த்தாள். ஆறே முக்கால். அடுத்தப் பதினைந்து நிமி

டங்களில் கணவனை எழுப்பி, அவனுக்குக் காப்பி கலந்து கொடுத்து (மாமியாருக்கும் தான்), விவேக்குக்கு வேண்டியதையெல்லாம் தயார் செய்துவிட்டு, தலைக்கு ஒரு ரப்பர்-பாண்டையும், நெற்றிக்கு ஒரு புதிய ஸ்டிக்கரையும் வைத்துக் கொண்டபோதுதான் ஞாபகம் வந்தது. நேற்று வீடு திரும்பும்போது செருப்பு அறுந்து விட்டிருந்தது. இவ்வளவு, காலை வேளையில் எந்த செருப்பு தைக்கும் தொழிலாளி இருக்கப் போகிறார்? தவிர இப்போது நேரப் பஞ்சம். ப்ளாஸ்டிக் கவர் ஒன்றை எடுத்துக் கொண்டாள். செருப்பை அதில் போட்டுக் கொண்டு போய் சாயந்திரம் தைத்துக் கொள்ளலாம்.

கைப்பையை மாட்டிக் கொண்டு கூடத்துக்கு வந்போது யாரோ அமிலத்தைக் கொட்டிய மாதிரி இருந்தது. ஆறே முக்கால் என்றது இன்னமும் கடிகாரம்! அதாவது நின்று தொலைந்திருக்கிறது. எப்போதிலிருந்தோ?


அவசரமாகக் கணவனின் கைக்கடிகாரத்தைப் பார்க்க '7.10'. பஸ் போய்விட்டிருக்கும். இன்றும் தாமதம். அத்தனை சக ஊழியர்களின் முன்னிலையிலும் இன்றும் அவமானச் சொற்கள்.

ஒருவிதக் கேவல் ஒலியுடன் வீட்டை விட்டு வெளியில் பாய்ந்தாள். ஓட்டமும் ஓட்டமுமாகப் போனபோது வெற்றுக் காலில் கல் குத்தியது. தாங்க முடியாத வலி. பக்கத்தில் வேகம் குறைக்கப்பட்டு வந்த ஆட்டோவை ஏதோ அனிச்சைச் செயலாகக் கைகாட்டி ஏறினாள்.

பர்ஸில் இருந்த தொகை முழுவதையும் ஆட்டோ டிரைவருக்குக் கொடுக்க வேண்டி வந்தது. வேகமாக கம்பெனியில் நுழைந்து போர்மெனின் முன் நின்றபோது அவள் உடம்பெல்லாம் நடுங்கியது. என்ன முயன்றும் தடுக்க முடியாது கண்ணீர் பெருகியது.

"சாரி சார். நாளையிலிருந்து ஒழுங்கான நேரத்துக்கு வரேன். என்னை மன்னிச்சிடுங்க. இன்னைக்கு வீட்டு கடிகாரம் நின்று போயிட்டதனாலே லேட். ப்ராமிஸா இது உண்மை. என்னை எதுவும் திட்டிடாதீங்க சார். லீவு போட்டுட்டுப் போக சொல்லிடாதீங்க, ப்ளீஸ், ப்ளீஸ்"என்று அவள் கதறிய போது போர்மென் அவளைக் கொஞ்சம் ஆச்சரியத்துடன் பார்த்தார்.

அப்போது மணி 7.25. கம்பெனியின் வேலை நேரம் தொடங்க இன்னும் ஐந்து நிமிடங்கள் இருந்தன.



தெரியுமா இது?

● ஜெர்மனி பல்கலைக் கழகத்தில் வேலை செய்யும் விஞ்ஞானிகள் பாக்டீரியாவால் நமக்கு ஒரு புது உபயோகத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அவர்கள் உருவாக்கியிருக்கும் பெயின்ட்டுக்கு ஒரு விசேஷத் தன்மை. சிகரெட் புகை, ஸ்கூட்டர் போன்ற வாகனங்கள் விடும் புகை ஆகியவற்றில் இருக்கும் நச்சுக்காற்றை (முக்கியமாக கார்பன் மோனாக்ஸைடை) இந்தப் பெயின்ட் அப்படியே உறிஞ்சிக் கொள்கிறதாம். இதற்குக் காரணம் அந்தப் பெயின்ட்டில் இருக்கும் ஒருவகை பாக்டீரியாக்கள்! விஷத் தன்மை கொண்ட கார்பன் மோனாக்ஸைடை 'சாப்பிட்டு' அதைக் கரியமில வாயுவாக வெளியேற்றுகிறதாம். அளவுக்கு அதிகமாக நச்சுக்காற்றை மாற்றும்படி நேர்ந்தால், பெயின்ட்டின் நிறம் மாறத் தொடங்கும். உடனே அது அபாய அளவு என்பதைப் புரிந்து கொண்டு அறைக்குப் போதிய காற்றோட்டத்தை ஏற்படுத்த வேண்டியது அவசியம்!

● பழங்காலப் படங்களில் வரும் "யெஸ் பாஸ்" டைப் வில்லன் கூட்டத்திலும் சரி, இந்தக் காலப் படங்களில் இடம் பெறும் 'ஹைடெக்' வில்லன்களும் சரி – சில ரகசிய வார்த்தைகளைப் பயன்படுத்துவதுண்டு. நிஜத்தில், பி.சி. வைத்திருக்கும் எல்லோருமே ஒரு ரகசிய வார்த்தையையாவது (பாஸ்வொர்ட்) பயன்படுத்த வேண்டியிருக்கும். வேறு யாரும், நீங்கள் கம்ப்யூட்டரில் சேகரித்து வைத்திருக்கும் தனிப்பட்ட விவரங்களைத் தெரிந்து கொள்ள விடாமல் இது தடுக்கும். இனிமேல் இது கூட வேண்டாம். உங்கள் கையை கம்ப்யூட்டர் திரைக்கு அருகே காட்டினால் போதும்; கம்ப்யூட்டரின் 'கதவுகள்' திறந்து கொள்ளும். வேறு யார் கைக்கும் அசைந்து கொடுக்காது. சீக்கிரமே பரவலாக அறிமுகமாக இருக்கும் இந்த வசதியின் ரகசியம் இதுதான்: ஸ்டாம்ப் சைஸுக்கு இருக்கும் ஒரு மின்னணுச் சுருள் நம் கைவிரலில் உள்ள மின் பரப்பை உள்வாங்கி சென்சாருக்கு அனுப்புகிறது. அங்கே ஏற்கெனவே பதிவாகியிருக்கும் உங்கள் கை ரேகையோடு இதுவும் ஒத்துப் போனால்தான் கம்ப்யூட்டர் ஓகே சொல்லும்!

● போயிங் நிறுவனம் சமீபத்தில் புது மாடல் விமானம் ஒன்றைத் தயாரித்திருக்கிறது. சப்பையான மூக்கு, மணிக்கு 9.500 கிலோ மீட்டர் வேகம், மொத்தம் இருநூறு டன் எடையைத் தாங்கும் திறன்– இதையெல்லாம் விட ஆச்சர்யம் இதற்கு இறக்கைகளே இல்லை என்பதுதான்! இதனால்தான் அத்தனை வேகம்!

— குல்லூ




''தலைவருக்கு என்ன ஆச்சுன்னே தெரியலை...''


''ஏன், என்ன பண்ணாரு?''

''நரகாசுரன் கொலை வழக்கை சி.பி.ஐ. வசம் ஒப்படைக்கணும்னு அறிக்கை விட்டிருக்காரு!''

– பா. ஜெயக்குமார்







மகளிருக்கு

"ஏழு பாசஞ்சருக்கு ஒரு வண்டி வுடுங்கப்பா... நாங்க எப்படிச் செத்தா ஓங்களுக்கென்ன?''

''போங்கப்பா... பொடவை கட்டுன ரெயிலு... யாரோ நாலு பேரு சந்தோசப்பட்டாப் போறும்...''

இப்படியெல்லாம் முணுமுணுப்பு விமர்சனங்களை ஆண் வர்க்கத்திடமிருந்து கேட்க நேர்ந்தது, சென்னைக் கடற்கரை ரயில் நிலையத்தில்....

'மகளிர் ஸ்பெஷல்' என்று காலையில் ஒரு வண்டியும் மாலையில் ஒரு வண்டியும் தாம்பரம் – கடற்கரை இடையே ஓடத் தொடங்கிய மூன்றாம் நாள் மாலை நாம் சென்றிருந்தோம்.

வழக்கமாக ஒன்பது பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ள மின்சார ரயில் வண்டியில் ஏற்கெனவே மூன்றில் ஒரு பங்கு மகளிருக்கான ஒதுக்கீடு (மூன்று பெட்டிகள்) நடைமுறையில் உள்ளது. இந்நிலையில் தனியாகப் பெண்களுக்கு என்று ஒரு முழு வண்டியை விட வேண்டிய அவசியம் என்ன என்று சில பெண்களே அலுத்துக் கொள்வதுதான் உண்மை!

மத்திய அரசுப் பணியில் உள்ள அஞ்சலி நாராயணன் இந்தத் தனியான மகளிர் வண்டியை வரவேற்கிறார்.

''டென்ஷன் இல்லாமல் வசதியாகப் பயணம் போகலாம். ஆனாலும் முழு வண்டி வேண்டாம். பாதியளவு ஒதுக்கினால் போதும்'' என்கிறார் இவர்.

''இந்தப் புதிய ஏற்பாடு ரொம்ப வசதிதான். பெண்களுக்காக என்று பேருந்துகள் ஓடுகிறபோது, இதுவும் வரவேற்கத்தக்கதுதானே...'' என்கிறார் பத்திரிகையாளர் விஜய லெட்சுமி.

குரோம்பேட்டையிலிருந்து பயணம் செய்கிற ராதிகா போன்ற பலர் விரும்புவது ''நெரிசல் நேரங்களில் ஒவ்வொரு வண்டியிலும் கூடுதலாய் ஒரு மகளிர் பெட்டியை இணைத்தாலே போதும். தனியாக ஒரு மகளிர் வண்டி வேண்டாம்'' என்பதுதான்.

காலையில் தாம்பரத்தில் ஒன்பது மணிக்குப் புறப்படுகிற வண்டி யானாலும் சரி, மாலையில் கடற்கரையிலிருந்து திரும்புகிற வண்டியானாலும் சரி, கூட்டம் என்னவோ குறைவுதான். போகப் போக அடுத்தடுத்த நிலையங்களில் பயணிகள் ஏறினாலும் வண்டி நெரிசலில் திணறுவதில்லை என்பது இப்போதைய நிலை.

இரண்டு காரணங்கள். அரசு ஊழியர்களுக்கு மட்டுமே வசதி செய்து தருகிற மாதிரி இந்த ரயில் நேரம் அமைந்துள்ளது. காலை ஒன்பது மணிக்குத் தாம்பரத்தில் புறப்படுகிற வண்டி, கடற்கரைக்கு ஒன்பதே முக்காலுக்குச் சென்றடைய வேண்டும். ஆனால் தனியார் நிறுவனங்கள் எல்லாம் ஒன்பது மணிக்கே தொடங்கி விடுகின்றன.

தனியார் நிறுவனங்களில் பணியாற்றுகிற உமா, அமுதா, ராதிகா எல்லோரும் ஒரே குரலில் கூறுவது, ''இந்த வண்டியை எட்டரை மணிக்காவது முன் கூட்டியே புறப்படச் செய்யலாம். இப்போது இந்த வண்டி பிரபலமடையவில்லை. நாளடைவில் பாபுலர் ஆகிவிடும். நாங்களும் நேரத்தை அனுசரித்துப் பயணம் செய்ய வசதிப்படும்.''

. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணியாற்றுகிற எஸ். லீலாவதி ஒரு முக்கியமான பிரச்னையை முன் வைக்கிறார்.

''ஏற்கெனவே சங்கிலிப் பறிப்பு அது இது

எல்லாம் நிறைய இருக்கு. பெண்களெல்லாம் வெறும் கழுத்தோடா வர முடியும்? பெண்கள் வண்டி என்று தனியாக ஆகிவிட்டால் பாதுகாப்புக்கு என்ன உத்தரவாதம்?" என்கிற அவருடைய கேள்வியில் நியாயம் இருந்தது.

இப்போதைக்கு முதல் மூன்று நாட்களுக்கு மட்டும் 'லேடீஸ் ஸ்பெஷல்' வண்டியில் ஒவ்வொரு பெட்டிக்கும் ஒவ்வொரு பெண் காவலர் பாதுகாப்பாக வருகிறார். ஆனால் இதை நீண்டகாலம் தொடர முடியாது. அப்புறம் பாதுகாப்புப் பற்றி யோசிக்க வேண்டியதாய்த்தான் இருக்கும்.

"ஆண்களும் சிரமப்படுகிறார்கள். அவர்களுடைய நிலையையும் எண்ணிப் பார்க்க வேண்டும்" என்று பரிந்து பேசுகிறவர், தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் ராஜேசுவரி.

"மாலை 5-45க்கு மகளிர் ஸ்பெஷல்... அதற்குச் சில நிமிடங்களுக்கு முன்னால் 'FAST' என்கிற அதிவேக ரயில். இது எல்லா நிலையங்களிலும் நிற்காது. எனவே நுங்கம்பாக்கம், சைதை, பல்லாவரம் என்று இடைவழியில் இறங்க வேண்டிய ஆண்களுக்குப் பயனில்லை. ஆக, பாவம் இவர்கள் இரண்டு வண்டிகளை இழந்து விடுகிறார்கள்" என்கிறார்.

அலுவலகம் செல்லும் பெண்களின் வசதிக்காக என்று சில சங்கங்களின் கோரிக்கை அடிப்படையில் இந்த ரயில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் ஏற்கெனவே உள்ள நேர அட்டவணைப்படியேதான் இந்த மகளிர் வண்டியும் ஓடுகிறது. கூடுதலாய் வண்டி விடப்படவில்லை. உத்தேசமாக ஆயிரம் பயணிகள் நெரிசல் நேரத்தில் ஒரு வண்டியை இழந்து விடுகிறார்கள் என்பதே விளைவாக உள்ளது!

5-45க்கு ஒரு மகளிர் ஸ்பெஷல் புறப்படுகிறது. அடுத்தது ஒரு பொதுவான வண்டி. மகளிர் ஸ்பெஷல்தான் எல்லாரையும் அள்ளிக் கொண்டு போய் விட்டதே என்று அந்த வண்டியில் உள்ள லேடீஸ் கம்பார்ட்மெண்டில் சில பேர்வழிகள் அடாவடியாக ஏறிக் கொள்கிறார்களாம். இவர்களைச் சமாளிப்பது ஒரு புதிய சங்கடம். இரவு ஏழு மணிக்குத்தான் எல்லா வண்டிகளும் பெட்டிகளும் 'ஒதுக்கீடு' முறையைக் கைவிடும். அப்போது லேடீஸ் பெட்டியில் ஆண் பெண் எல்லாரும் பயணம் செய்யலாம்.

இன்னும் ஒரு யோசனையும் இருக்கிறது. புதிய பேருந்துகளில் உள்ள மாதிரி, ஒவ்வொரு பெட்டியிலும் முன்பாதி பின்பாதி என்று ஒதுக்கி விட்டால் குடும்பத்தோடு போகிறவர்களும் பயனடையலாம் என்கிறார்கள்.

பொதுவாக ஆண்கள் தரப்பில் அதிருப்திதான். இருப்பினும் ஒற்றைக் குரலாய் ஒரு மாணவர், (லயோலாவில் படிக்கும் ஜவாஹர்) "இருக்கட்டுமே. நெரிசல் நேரத்தில் இடிபாடு இல்லாமல் வேலைக்குப் போகிறவர்களுக்கு நல்லதுதானே."

ஒருவேளை, இவருடைய அக்கா தங்கைகளுக்காகப் பரிவோ என்று பார்த்தால் "இல்லே சார்... எனக்கு ஒரு தம்பி மட்டும் தான்" என்றார் ஜவாஹர்.

அண்டை மாநிலமான கர்நாடகாவில் கூடப் பேருந்துகளில் பெண்கள் ஆண்கள் என்று வித்தியாசம் பார்க்காமல் பயணிகள் ஆரோக்கியமான மனவளத்தோடு இருக்கிறார்கள். ஆனால் தமிழகம் தான் 'பெண்கள் பேருந்து, பெண்கள் ரயில்' என்று நெஞ்சை நிமிர்த்திக் கொள்கிறது. ●

— கலைச

படங்கள் : யோகா

மரியாதை!


• அஞ்சலி


• விஜயலட்சுமி


• ராதிகா


• உமா


• அமுதா


• லீலாவதி


• ராஜேசுவரி


• ராதிகா


• ஜவாஹர்

டீ, டீ, தித்திக்கும் டீ!

ஜெயலலிதா பா.ஜ.க.வுக்கு அளித்து வரும் ஆதரவை திடீரென்று விலக்கிக் கொண்டு, சோனியாவின் அழைப்பை ஏற்றுப் புதிய கூட்டணி தொடங்கி, மத்தியில் காங்கிரஸ் ஆட்சி அமைக்க முன் வந்தால்...?

நம் கற்பனை, இதோ:

புதிய புரட்சித் தலைவி சோனியாகாந்தி

மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஹர்கிஷன்சிங் சுர்ஜித் அறிக்கை

நானும் ஜோதிபாசுவும் இத்தனை நாளாகக் கூறி வந்ததை ஏற்றுக் கொண்டு, பா.ஜ.க அரசைக் கவிழ்க்க சோனியா காந்தி முன்வந்ததைப் பாராட்டுகிறேன். மக்கள் இன்னொரு தேர்தலைத் தாங்கிக் கொள்ள மாட்டார்கள். அதனால் ஆட்சிக் கலைப்புக் குப் பதில், ஆட்சிக் கவிழ்ப்புதான் இன் றைக்கு மக்களின் ஆதரவைப் பெற முடியும். சோனி யாவுக்கு ஆதர வாக ஜெய லலிதா செயல் பட ஒப்புக் கொண்டிருக் கிறார். நாட்டின் தலைநகரில் ஜெய லலிதா ஒரு தேசிய



டீ பார்ட்டியை நடத் தினார். இதிலிருந்து இவர் ஒரு தேசியத் தலைவர் என்று தெரிகிறது. பா.ஜ.க. ஆட் சியைக் கவிழ்த்தவுடன் மறுபடி ஒரு டீபார்ட்டி வைப்பதாக ஜெயலலிதா அறிவித்திருக்கிறார். இதிலிருந்தே அவர் ஒரு தேசியத் தலைவர் என்று எல்லோருமே தெரிந்து கொள்ள முடியும். அந்த டீபார்ட் டியில் நான் டீ குடிக்க ஒப்புக் கொண் டிருக்கிறேன். ஜோதிபாசுவும் என்னைக் கேட்டுக் கொண்ட பிறகு அங்கே டீ குடிப்



பார். ஈ.கே. நாயனார், அச்சுதாநந்தனைக் கேட்டு விட்டு டீ குடிப்பார். பிரகாஷ் காரத்தும், அவர் மனைவி பிருந்தா காரத்தைக் கேட்டுக் கொண்ட பிறகு டீ குடிப்பார். சீதாராம் எச்சூரி, இப்படி எல் லாம் டீ குடிக்கலாமா என்று இரண்டு, மூன்று கட்டுரைகள் எழுதி முடித்த பிறகு மீதி டீ இருந்தால், அவரும் குடிப்பார். சோனியா காந்தி பிரதமராக



வருவதற்கு என் முழு ஆதரவு உண்டு. ஜோதிபாசு பிரதமராக இருப்பேன் என்று அடம் பிடித்தால், நான் டீ குடிக்கப் போக மாட்டேன்!

தில்லியில் இனி டீ பார்ட்டிக்குத் தடை!

ஜெ. தமது ஆதரவை விலக்கிக் கொண்டார் என்று அறிந்தவுடன், பா.ஜ.க தலைவர் குஷாபாவ் தாக்ரே, நிருபர்களிடம் பேசினார்.

"ஜெயலலிதா இப்படிச் செய்வார் என்று, அவர் டீ பார்ட்டி கொடுத்த அன்றே நான் அறிந்திருந்ததை, வாஜ்பாய் அறிந்திருக்கவில்லை. அதனால்தான் மறுநாள் அவரைத் தம் வீட்டுக்கு அழைத்து டீ கொடுத்தார் வாஜ்பாய். தாம் டீ குடிப்பதில்லை, காபிதான் குடிப்பேன் என்று ஜெயலலிதா அப்போது திடீரென்று அறிவித்தார். காபிப் பொடிக்காக தில்லியில் அலைந்ததை வாஜ்பாயின் வளர்ப்பு மகளின் கணவர் என்னிடம் சொன்னார். நான் அப்போதுகூட வாஜ்பாய் ஜெயலலிதாவைப் புரிந்து கொள்ளவில்லையே என்று வருத்தப்பட்டேன்.

"இனி தில்லியில் எந்தக் கட்சியும் டீ பார்ட்டி நடத்தக் கூடாது என்று ஒரு சட்டம் கொண்டு வர, முதல்வர் சுஷ்மா சுவராஜிடம் சொல்லியிருக்கிறேன். அவர் முதல்வர் ஆனவுடன் முதல் காரியமாக அந்த ஆணையைச் செயல்படுத்தினால், டீ கப்பைக் கவிழ்ப்பது போல, ஆட்சியைக் கவிழ்க்க முடியாது!"

இவ்வாறு அவர் கூறினார்.





மூன்று கப் டீ நஷ்டம்!"

- ஜெயலலிதா

சென்னையில் அ.இ.அ.தி.மு.க. அலுவலகத்தில் டீவி மைக்குகள் மூக்கில் குத்துகிற தூரத்தில், ஜெயலலிதா நிருபர்களிடம் உரையாடினார்.

நிருபர்: தில்லியில் டீ பார்ட்டி கொடுத்தது போல் சென்னையிலும் டீ பார்ட்டி கொடுப்பீர்களா?

ஜெ: சென்னையில் டீ பார்ட்டி கொடுத்தால் கருணாநிதியும், ஸ்டாலினும் வந்து விடுவார்கள். அவர்கள் வரக் கூடாது என்பதற்காகத்தான் அவ்வளவு தூரம் தள்ளிப் போய் தில்லியில் டீ பார்ட்டி கொடுத்தேன்.

நிருபர்: பா.ஜ.க.வுக்கும், பா.ம.க.வுக்கும், த.ரா.கா.வுக்கும் கடைசி நிமிஷத்தில் அழைப்பு விடுத்தீர்களாமே?

ஜெ: நான் அவர்களை அழைக்கவே விரும்பவில்லை. அவர்களாக அடம் பிடித்து, அழைப்பை வாங்கிக் கொண்டு வந்து டீ குடித்தார்கள். மூன்று கப் டீ நஷ்டம்.

ஐந்து வருடங்கள் பா.ஜ.க. ஆட்சி

பா.ம.க தலைவர் டாக்டர் ராமதாஸ் இது குறித்து வெளியிட்ட அறிக்கை பின் வருமாறு:-

"புரட்சித்தலைவி எங்கள் கழுத்தைப் பிடித்துத் தள்ளினாலும், நாங்கள் அ.இ.அ.தி.மு.க. கூட்டணியிலேயே இருப்



''எதெதற்கு எப்படி விளம்பரம் செய்வதுங்கற வரைமுறை இல்லாமல் போயிடுச்சு.''

''என்ன ஆயிற்று?''

''கள்ளச் சாராயப் பாக்கெட்டுகளில் 'அனைத்திந்திய குடிகாரர்கள் சங்கத்தின் அங்கீகாரம் பெற்றது'ன்னு விளம்பரம் பண்ணியிருக்காங்க!''

— கே. உஷா

போம். இதில் யாருக்கும் சந்தேகம் வேண்டாம். வாழப்பாடி ராமமூர்த்தியை பெட்ரோலியம் அமைச்சர் பதவியிலிருந்து தூக்கினால், நாங்கள் அமைச்சரவையிலிருந்து விலகி, உள்ளே இருந்து ஆதரவு கொடுப்பதற்குப் பதில், வெளியே கால் கடுக்க நின்று கொண்டு ஆதரவு கொடுப்போம். ஏனென்றால் பா.ஜ.க. ஐந்து வருடங்கள் தொடர்ந்து ஆட்சி செய்ய வேண்டும். இதுதான் எங்கள் லட்சியம்!''

''எனக்கு டீ ரொம்பப் பிடிக்கும்!'' - வாழப்பாடி

சென்னை சாஸ்திரி நகரில் வாழப்பாடி ராமமூர்த்தி நிருபர்களுக்கு அளித்த பேட்டி:

நிருபர்: உங்களுக்குக் கடைசி நிமிஷத்தில், வேண்டா வெறுப்பாக டீ பார்ட்டிக்கு அழைப்பு அனுப்பப்பட்டதாமே?

வாழப்பாடி: எங்கள் கூட்டணி இன்னமும் கட்டுக்கோப்போடுதான் செயல்படுகிறது என்பதற்கு இது அத்தாட்சி. இதில் அவமானம் எதுவும் இல்லை.

நிருபர்: உங்கள் பதவியைப் பறித்து, தம்பிதுரைக்குக் கொடுக்க வேண்டும் என்று ஜெயலலிதா, முந்தின நாளே பிரதமரிடம் கேட்ட பிறகும்கூட, நீங்கள் டீ பார்ட்டியில் எப்படிக் கலந்து கொண்டீர்கள்?

வாழப்பாடி: (சிரித்துக் கொண்டே) எனக்கு டீ ரொம்பப் பிடிக்கும். இது ஜெயலலிதாவுக்கும் தெரியும்!

நிருபர்: தம்பித்துரையிடம் ஏற்கெனவே தரைவழிப் போக்குவரத்துத் துறையைக் கூடுதலாகக் கொடுத்திருக்கிறார்களே? கூடுதலாக ஏன் பெட்ரோலியத் துறையையும் கொடுக்க வேண்டும்?

வாழப்பாடி: தரைவழிப் போக்குவரத்துக்கு பெட்ரோலும், டீசலும்தான் அவசியம். இதைத் தெரிந்து கொண்டுதான் ஜெயலலிதா அப்படிச் சொல்லியிருப்பார்.

நிருபர்: உங்கள் துறையை வேறு ஒருவருக்குக் கொடுத்தால், நீங்கள் என்ன செய்வீர்கள்?

வாழப்பாடி: அதை உங்களிடம் நான் இப்போது சொல்ல முடியாது. ஜெயலலிதாவிடம் கலந்து ஆலோசித்து விட்டுத்தான் சொல்ல முடியும்!

''ஐந்தே வருடங்களில் முடிவு!'' - மூப்பனார்

சத்தியமூர்த்தி பவனில், பாக்குப் பொட்டலங்களைப் பிரித்தபடி, மூப்பனார் அளித்த பேட்டி:

நிருபர்: சோனியாவுடன் கூட்டுச் சேர்ந்து மத்தியில் ஆட்சி அமைக்கப் போகிறார் ஜெயலலிதா. த.மா.கா.வையும் அதில் சேரக் கேட்போம் என்கிறாரே?

மூப்பனார்: சோனியா காந்தி எங்கள் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய தலைவி.

நிருபர்: நீங்கள் அந்தக் கூட்டணியில் சேருவீர்களா?

மூப்பனார்: அழைப்பு விடுக்கட்டும் முதலில். பிறகு சேருவதா வேண்டாமா என்று, மாவட்டம் மாவட்டமாகப் போய்த் தொண்டர்களிடம் பேசி, ஐந்தே வருடங்களில் முடிவு எடுத்து விடுவோம்.

நிருபர்: அதற்குள் அவர்கள் ஆட்சி முடிந்து விடுமே?

மூப்பனார்: அதற்கு நான் என்ன செய்வது?

நிருபர்: வாழப்பாடி ராமமூர்த்தியின் பதவியைப் பறித்து, தம்பிதுரைக்குக் கொடுக்க வேண்டும் என்கிறாரே?

மூப்பனார்: அண்ணாதுரை இல்லையே, அதனால் தம்பித்துரையிடம் கொடுக்க வேண்டும் என்று கேட்டிருப்பார். இதை எல்லாம் பெரிது பண்ணுவது பத்திரிகைகள்தான்!

இவ்வாறு மூப்பனார் பேட்டி அளித்தார்.

கற்பனை: **சாருகேசி**

நடக்குமென்பார் நடக்கும்!

அக்டோபர் 21 முதல் 27 வரை

மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

இதுவரைக்கும் இழுத்தடிச்சுக்கிட்டிருந்த காரியங்கள் இப்போ நடக்கறதுக்கான சூழல் உருவாகும். சிலர் சாதனை பண்ணிக் காட்டுவீங்க. வி.ஐ.பிக்களின் ஆதரவு உண்டு. பூர்வீகச் சொத்துகள் ஏதாவது வந்து சேரும். இல்லேன்னா திடீர் அதிர்ஷ்டத்துக்கும் வாய்ப்பிருக்கு. உங்க மகனோ, மகளோ வெளிநாட்டுலயிருந்தா அவங்க உங்களைப் பார்க்க வருவாங்க. இல்லாது போனாலும் அவங்ககிட்டேர்ந்து சந்தோஷமான செய்தி ஏதும் வரும். பணப் பிரச்னை ஏதும் இருக்காது. பெண்களுக்கு மட்டும் நினைச்ச காரியம் அத்தனை சுலபமா இந்த வாரம் நடக்காது.

ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

மனக்கவலை, மக்களால் பிரச்னை, வீண் அலைச்சல், எதிர்பாராத செலவுன்னு வந்தா பயந்து போயிடாதீங்க. பதற்றமில்லாம நிதானமா செயல்பட்டா சமாளிச்சிட முடியும். பேச்சிலும் கவனம் காட்டணும். பயணத்திலும் எச்சரிக்கையா இருக்கணும். வீடு, மனை, ரியல் எஸ்டேட் எதுவானாலும் உங்களுக்குச் சாதகமா இருக்காது. கொடுக்கல், வாங்கலிலும் ஜாக்கிரதையா இருந்தாத்தான் சுமுகமா இருக்கும். உடல் நலத்திலும் கவனமா இருக்கணும். இத்தனைக்கும் மத்தியில கடிதப் போக்குவரத்தால நற்செய்தியொன்று வந்து உங்களைச் சந்தோஷப்படுத்தும்.

மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

முக்கியமான கிரகங்களெல்லாம் உங்களுக்குச் சாதகமாவே சஞ்சரிக்கறதால உங்களோட ஆற்றல் மிகும். கௌரவமும் அந்தஸ்தும் அதிகரிக்கும். நினைச்சது நடக்கும். குடும்பத்துல கல்யாணப் பேச்சு, சுப காரியங்கள், விருந்து, கேளிக்கைன்னு உற்சாகம் பீறிடும். குடும்ப வசதிக்காக டபுள்டோர் ஃப்ரிட்ஜ், வாஷிங் மெஷின், புதுமாடல் டீவின்னு ஏதாவது வாங்குவீங்க. புதுசா வாகனம் ஏதும் வாங்கற யோகமும் அமோகமா இருக்கு. வேலையில்லாதவங்களுக்கு வேலை கிடைக்க சான்ஸ் இருக்கு. பிள்ளைங்களால பெத்தவங்க சந்தோஷப்படற வாரம் இது. ஃபாரின்லேர்ந்து நல்ல சேதி வரும்.


கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

உங்க திறமையோடு துணிச்சலும் வெளிப்படற வாரம் இது. அரசாங்க விஷயங்களில் நல்ல திருப்பம் ஏற்பட்டு உங்க திட்டங்கள் தடையில்லாம நிறைவேறும். எதிரிங்க அம்பேல் ஆயிடுவாங்க. கூடப் பிறந்தவங்களால பயன் கிடைக்கும். பெண்களுக்கும் ஏற்றமான வாரம். நிர்வாகம் செய்கிற பெண்கள் (வீட்டு நிர்வாகமும் தான்) மத்தவங்களால பாராட்டுப் பெறுவாங்க. குடும்பத்துல சின்னச் சின்ன பிரச்னைங்க ஏற்பட்டாலும் 'ப்பூ இவ்வளவு தானா?'ன்னு சமாளிக்கற துணிச்சலைப் பெறுவீங்க. ஆனாலும் பயணத்தை முடிஞ்சா தவிர்த்து விடுவதே நல்லது.

சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

பார்க்கறவங்க எல்லோரும் உங்களுக்கு நேசக்கரமும் உதவிக்கரமும் நீட்டுவாங்க. உங்க முக வசீகரம் அப்படிச் செய்ய வெச்சிடும். பண நடமாட்டம் அதிகமாவே இருக்கும். பிள்ளைங்களால பெருமை கிடைக்கும். கல்யாணம், குழந்தைப் பேறுன்னு குடும்பத்துல சந்தோஷ சமாசாரங்கள் நடக்கும். வேலையில்லாதவங்களுக்கு வேலை வாய்ப்பு கூடி வரும். உத்தியோகஸ்தர்களுக்குப் பாராட்டு, ப்ரமோஷன்னு சந்தோஷ விஷயங்கள் கூடி வரும். கூடவே

மீன ராசிக்காரரான ஓவியர் ஸ்யாமுக்கு, நல்லவங்க தொடர்பால நன்மை கூடுமாம்.



டிரான்ஸ்ஃபரும் கிடைக்கலாம். செவ்வாய், ராகு, கேது சரியில்லாததால, சிறுசிறு பிரச்னைகள் வரத்தான் செய்யும். இயந்திரம், நெருப்பு, மின்சாரம் தொடர்பான வேலை செய்பவர்கள் எச்சரிக்கையா இருக்கணும்.

கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

எந்தப் பிரச்னையானாலும் சமாளிக்கிற தன்னம்பிக்கையும் துணிச்சலும் வரும். உங்க பேச்சாற்றல் வெளிப்படும். கொடுக்கல் - வாங்கல், ஸ்பெகுலேஷன் போன்றவற்றில் அளவோடு லாபம் உண்டு. வீடு, மனை, வாகனம் தொடர்பான காரியங்களுக்கு இந்த வாரம் சரியில்லை. சில திடீர்த் திருப்பங்கள் உங்களுக்குச் சவாலா அமையும். கணவன் - மனைவி உறவு அத்தனை சந்தோஷமா இருக்காது. கூடப் பிறந்தவங்களால அனுகூலமிருக்காது. கூடவே மனஸ்தாபம் வர்றதுக்கும் சான்ஸ் இருக்கு. பெண்களுக்கும் இந்த வாரம் ஏமாற்றமளிக்கிற வாரம்தான். பொதுவாச் சொன்னா, ஒரு நாளைப் போல அடுத்த நாள் இருக்காது. எல்லாமே மாறி மாறி வரும்.

துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)*

இதுவரைக்கும் மனசுல இருந்து அலைக்கழிச்ச குழப்பங்களெல்லாம் இந்த வாரம் காணாம போயிடும். கவலையில்லாத மனசில உற்சாகம் வர்றதுக்குக் கேட்கணுமா என்ன! நல்லவங்க தொடர்பால ஆதாயமும் பெருமையும் கிடைக்கும். பண விஷயத்துல பிரச்னை இருக்காது. சிலருக்குத் திடீர் அதிர்ஷ்டத்துக்கான சான்ஸும் நிறைய இருக்கு. ஸ்பெகுலேஷன், கொடுக்கல் - வாங்கலில் நல்ல ஆதாயம் கிடைக்கும். பயணத்தாலும் லாபம் கிடைக்கும். உல்லாசப் பயணம், விளையாட்டு, கேளிக்கைன்னு உற்சாகமா இருப்பீங்க. இழுத்தடிச்சுக்கிட்டிருக்கற கேஸ் ஏதும் இருந்தா இந்த வாரம் ஜெயிச்சுடும். வெளிநாட்டுத் தொடர்பும் ஏற்படும்.

விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

எடுத்த காரியங்களில் எல்லாம் இந்த வாரம் நீங்க ஜெயிச்சுக் காட்டுவீங்க. வழக்கு விவகாரம், போட்டி - பந்தயங்களில் எல்லாம் உங்களுக்குச் சாதகமான திருப்பமே ஏற்படும். பொருளாதார விஷயத்திலும் நல்ல முன்னேற்றம் இருக்கும். கூடப் பிறந்தவங்க உங்களுக்குத் துணையா இருப்பாங்க. பிதுர்ராஜித சொத்துக்கள் ஏதும் இருந்தா உங்களுக்கு வந்து சேரும். பயணமும் உங்களுக்குச் சாதகமாவே இருக்கும். வியாபாரிங்க மட்டும் அகலக்கால் வெக்காம - புது முயற்சிகளில் ஈடுபடாம இருக்கறதுதான் நல்லது.

தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

முக்கியமான கிரக சஞ்சாரம் உங்களுக்கு அனுகூலமா இல்லாததால, எதுலயும் முழுமையான பலன்களை எதிர்பார்க்க முடியாது. நீங்க நினைச்சபடி எதுவும் கூடி வராது. குடும்பத்தில் சிறு சிறு குழப்பங்கள் இருந்து வரும். பொருளாதாரமும் சீராக இருக்காது. உத்தியோகஸ்தர்கள் அதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாக நேரிடும். புதுக் காரியங்கள் தொடங்க இது சரியான நேரம் அல்ல. ஸ்பெகுலேஷனெல்லாம் இந்த வாரம் வேணாம். வெளிநாட்டுச் செய்தி ஏதும் அனுகூலமா வராது. ஆனாலும் கவர்மெண்ட் சமாசாரத்தில் உங்களுக்குச் சாதகமான பலனே இருக்கும். பொதுப்படையாகச் சொல்லணும்னா, குடும்ப ஆரோக்கியத்தில் கவனம் காட்டறது நல்லது.

மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

இதுவரைக்கும் இருந்த சங்கடங்களெல்லாம் விலகி, நல்ல பலன்களை எதிர்பார்க்கலாம். பண விஷயம் சீராவே இருக்கும். கொடுக்கல் - வாங்கல், ஸ்பெகுலேஷன் சமாசாரங்களிலும் ஆதாயம் கிடைக்கும். சிலருக்கு லாட்டரி மாதிரி எதிர்பாராத பணவரவுக்கும் சான்ஸ் இருக்கு. குடும்பத்துல மகிழ்ச்சி கூடும். கூடவே செலவும் கூடும்னாலும் அது குடும்ப நன்மைக்கான செலவாத்தான் இருக்கும். மக்களால் பெருமை சேரும். இருந்தாலும் பயணத்தில் எச்சரிக்கையா இருங்க. எதிலும் அவசரக் குடுக்கையா நடந்துக்காதீங்க. சின்ன விபத்துகளுக்கு சான்ஸ் இருக்கறதால உஷாரா இருங்க.

கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

உங்க கம்பீரமும் பராக்கிரமமும் துணிச்சலும் வெளிப்படுகிற வாரம். எதிர்ப்புகளையெல்லாம் சர்வசாதாரணமா சமாளிப்பீங்க. குடும்பத்தில் சின்னச் சின்னப் பிரச்னைகள் வரும்னாலும் சுலபமா சால்வ் பண்ணிடுவீங்க. ஆனாலும் செவ்வாயும் ராகுவும், சரியா இல்லாததால, வீண் அலைச்சல், வீண் விரயம், மனக்கிலேசமெல்லாம் வரத்தான் செய்யும். உஷ்ண சம்பந்தமான உடல் பாதிப்புகள் வரலாம். பயணம் கூடாது. எந்த விஷயமானாலும் ஒரு தடவைக்கு இரண்டு தடவை யோசிச்சுச் செயல்படறதுதான் நல்லது. வீடு, மனை, ரியல் எஸ்டேட் சமாசாரங்களும் இந்த வாரம் வேணாம்.

மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

இந்த வாரமும் உங்களுக்கு விசேஷமான பலன் இல்லீங்க. தீவிரமாச் சிந்திச்சுச் செயல்படலேன்னா பிரச்னைதான் வரும். பேச்சு, செயல் எதுவானாலும் நிதானம் அவசியம். கணவன் - மனைவிக்கிடையில் கூட கருத்து வேறுபாடுகள் வரலாம். விட்டுக் கொடுக்காட்டா அதுவே பிரச்னையாகலாம். புது முயற்சிகள், முதலீடுகள் எதுவும் இப்போ வேணாம். பார்க்கிற தொழில் எதுவானாலும் அதில் முழு கவனத்தையும் செலுத்த வேண்டிய வாரம் இது. நல்லவர்கள், பெரியவர்கள் தொடர்பை விட்டுடாதீங்க. அவங்க தொடர்பால நன்மை கூடும். குடும்ப அமைதியும் கிடைக்கும்.

ஒன்பதாம் வகுப்பு வரை கட்டாயக் கல்வி!





ஜப்பானியக் கல்வி முறையில் பல அதிரடி மாறுதல்கள் செய்திருக்கிறார்கள். அவற்றில் மிக முக்கியமானது 9ம் வகுப்பு வரை கட்டாயக் கல்வி. கிட்டத்தட்ட நூறு சதவீதம்! ஜப்பானியக் குழந்தைகளும் பள்ளிக்குச் செல்கிறார்கள்!

ஜப்பானில் கல்வி மட்டுமல்ல; புத்தகங்களும் கூட இலவசம்! ஏழைக் குழந்தைகளுக்கு என்றில்லாமல் இது எல்லோருக்குமே என்பதுதான் விசேஷம்.

பள்ளியில் சேர நுழைவுத் தேர்வு கிடையாது. ஆனால் அவர்கள் பள்ளியில் நுழையும் நாளன்று சில வித்தியாசமான நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படும். முதல் நாளே குழந்தைகள் சீருடையில் வர வேண்டும். முதலில் பள்ளியில் உள்ள எல்லா ஆசிரியர்களிடமும் இவர்கள் அறிமுகப்படுத்தப்படுவார்கள். பிறகு பள்ளி இறுதி மாணவர்கள் இந்தப் 'புதிய வரவு'களை அழைத்துச் சென்று பள்ளிக்கூடத்தைச் சுற்றிக் காட்டுவார்கள்!

நாட்டைப் பல்வேறு பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு பகுதியிலும் குறைந்தது ஒரு பள்ளிக்கூடமாவது இருக்குமாறு பார்த்துக் கொள்ளுவார்கள். ஒரு பகுதியில் வசிக்கும் குழந்தைகளுக்கு அதே பகுதியில் உள்ள பள்ளியில் மட்டுமே அனுமதியுண்டு. ஒவ்வொரு பள்ளியிலும் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு, அதிக வசதிகளும் சிறப்பு ஆசிரியர்களும் கொண்ட தனி வகுப்பறைகள்.

ஒவ்வொரு வருடமும் தேர்வு உண்டு என்றாலும் அத்தனை பேரும் அடுத்த வகுப்புக்கு அனுப்பப்பட்டு விடுவார்கள். பள்ளி இறுதிவரை இந்த வசதி உண்டு!

ஒவ்வொரு மாணவனும் தாங்கள் அணிந்து வந்திருக்கும் ஷூக்களைப் பள்ளியின் வாசலில் உள்ள புறாக்கூண்டுப் பெட்டியில் விட்டுவிட்டு, கையோடு கொண்டு வரும் இன்னொரு ஜதை ஷூக்களை அணிந்து கொண்டுதான் பள்ளிக்குள் நுழைய வேண்டும். வார இறுதியில் இரண்டு ஜோடி ஷூக்களையும் வீட்டில் சுத்தம் செய்து கொண்டு வர வேண்டும்.

ஒவ்வொரு பள்ளிக்கும் விளையாட்டு மைதானம் கட்டாயம். பெரும்பாலான பள்ளிகளில் நம் ஊர் 'ஜிம்'களைப் போல உடற்பயிற்சிக்கான வசதிகள் கொண்ட அறை உண்டு. மிகப் பெரும்பாலான பள்ளிகளில் நீச்சல் குளம் உண்டு.

பள்ளிகள் ஏப்ரலில் தொடங்கி மார்ச்சில் முடிகின்றன. வார விடுமுறை ஞாயிறு மட்டுமே. சில வருடங்களுக்கு முன் மாதத்தின் இரண்டாவது சனிக்கிழமையும் விடுமுறை அளிக்கப்பட, பெற்றோர்கள் இதற்கு இன்று வரை எதிர்ப்புத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். தங்கள் வாரிசுகள் நேரத்தை 'வீணடிக்கக் கூடாதே' எனும் எண்ணத்தில் சனி ஞாயிறுகளிலும் அவர்களை அதற்கென்றே உள்ள மினி பள்ளிகளுக்கு அனுப்புகிறார்கள்!

— ஜி.எஸ்.எஸ்.

'பெஸ்ட்' ஹீரோ!

போனஸ் தகராறுகளுடன் மும்பையில் தீபாவளி களை கட்டத் துவங்கியது; தொடர்ந்தாற்போல் மூன்று நாட்களுக்கு BEST பஸ்கள் ஓடவில்லை; 45000 தொழிலாளர்களும் 5000 ரூபாய் போனஸ் போதாது, 8000ரூபாய் வேண்டும் (20%) என ஷரத் ராவ் தலைமையில் அடம் பிடித்தனர். கூடுதல் சுமையான 37.24 கோடிகளுக்கு எங்கே போவது? என்று மேனேஜ்மெண்ட் கைவிரிக்க, மும்பைக்காரர்கள் திண்டாடி, தெருவில் நின்றனர். ஏற்கெனவே நிறை மாத கர்ப்பிணிகளாய்க் காட்சியளிக்கும் ரயில்கள், மூச்சு விடவே திணறின. ஆட்டோ, டாக்ஸிக்காரர்கள் கேட்ட தொகையால் பொது மக்கள் மூர்ச்சையாயினர். சமாஜ்வாதி கட்சிக்காரர்கள் நல்ல பிள்ளைகளாய், இலவச வேன் சர்வீசை அளித்தனர். ஹூம்.. ஸ்வீப்பர்களை திடீர் வேலை நிறுத்தம் செய்யச் சொல்லி மிரட்டியே, BMCயிலிருந்து அவர்களுக்கு 5550 ரூபாய் மாசச் சம்பளம் வாங்கிக் கொடுத்த ஷரத் ராவுக்கு இந்த ஸ்ட்ரைக்கெல்லாம் வெறும் பிஸ்தா! இவர் கொட்டத்தை அடக்கப் படாதபாடு பட்ட சிவசேனைக்காரர்களை மண்ணைக் கவ்வ வைத்து விட்டார்; முதல்வர் தலையீட்டால் நிலைமை சீராகியது. "என்னுடன் மோதியவர்கள் சுவர்கத்தில் இருக்கிறார்கள். நான் இங்கேதான் தரையில் ஸ்திரமாயிருக்கிறேன்" எனும் யூனியன் தலைவர் ஷரத்ராவ் தான் இந்த வார 'பெஸ்ட்' ஹீரோ!

'கில்லர் வீக்'!

வருடம், மாதங்களுக்குப் பெயரிடுவது போல் வாரத்துக்குப் பெயரிட்டால், இந்த வாரத்துக்கு "கொலைகார வாரம்" என்ற பெயர் சாலப் பொருந்தும்; எக்கச்சக்க கொலைகள்! 15 வயது நீரஜ்பர்மாரும் 14 வயது யோகேந்திர ராவும் தாங்கள் 'ஸைட்' அடிக்கும் சுப்ரியாவைப் பற்றி, அவளுடைய அம்மாவிடமே வத்தி வைத்து விட்ட குற்றத்துக்காக 17வயது ரூபாலியை கெரசின் விட்டுக் கொளுத்திய கோர சம்பவம் டோம்பிவிலியில் நிகழ்ந்தது! டான்பாஸ்கோ ஸ்கூலில் படிக்கும் பையன்களின் புத்தி இப்படிப் போக வேண்டுமா என்று அரற்றாதவரில்லை! தொடர்ந்து சில அண்டர்வர்ல்ட் கொலைகள்; மக்களை அதிகம் உலுக்கியது சமூக சேவகரும், ரூபம், ரூப்மிலன் துணிக்கடைகளின் முதலாளியுமான 38 வயது 'பரத்ஷா'வின் துணிகரக் கொலை! துபாயிலுள்ள தனது பிரிதொரு கிளைக்கு தொலைபேச அருகிலிருந்த எஸ்.டி.டி. 'பூத்'தை அணுகியவரை தாவூத்தின் ஆட்கள் வெகு தொலைவுக்கு அனுப்பிவிட்டனர். க்ராஃபோர்ட் மார்க்கெட்டில், போலீஸ் தலைமையகத்துக்கு வெகு அருகிலேயே இந்தக் கொலை நிகழ்ந்திருப்பது போலீசாரை கேலி செய்வது போலுள்ளது. வியாபாரிகளெல்லாம் கொதித்தெழுந்து மோர்ச்சா நடத்தியபின், பிஸினஸ்காரர்களுக்கு எப்படி எக்ஸ்டார்ஷனிஸ்டுகளை சமாளிப்பது என்று 'கோர்ஸ்' நடத்தப் போவதாக காவல் துறை சொல்கிறது. போலீஸ் ஸ்டேஷன்கள் கோச்சிங் கிளாஸ்களாக மாற வேண்டியதுதான் பாக்கி என்ற எரிச்சலில் யார் 'போலீஸ் ஸ்டேஷனில் இடி விழ' என்று

• பஸ் ஸ்டிரைக்



சபித்தார்களோ... போலீஸ் தலைமையகத்தின் மீது திடீர் இடி மின்னல் தாக்கி, மின்சாரம், தொலைபேசி எல்லாம் அவுட்!

மலபார் ஹில் வந்த ராம்-லக்ஷ்மணர்கள்!

பாட்டு படுத்தும் பாடு

ஹூம்! இந்தப் படம் மட்டும் 50 ஆண்டு களுக்கு முன் ரிலீசாகியிருந்தால், நாதுராம் கோட்



ஸேவுக்கு வேலையே இருந்திருக்காது. தனது மனதுக்கினிய ''ரகுபதி ராகவ' இப்படி கொலை செய்யப்படுவதைக் கேட்டுவிட்டு, மஹாத்மா தானாகவே தற்கொலை செய்து கொண்டிருக்க மாட்டாரா என்ன? தீபாவளி ரிலீஸான ''குச் குச் ஹோத்தா ஹை''யில் ஜதின்- லலித் இசையில் டிஸ்கோ பாடலாக ஒலிக்கும் ரகுபதி ராகவ ராஜா ராமைக் கேட்டால் நமக்கே கையைக் காலை உதறுகிறது; காந்தியால் எப்படி தாங்கியிருக்க முடியும், பாவம்?

'மதர் 98'ல் ஒலிக்க இருக்கும் சாவந்த் குமாரின் ''பீவி ஸஜாவட் கி சீஸ் ஹை'' பிரிதொரு பிரச்னைக்குரிய பாடல். ''மனைவி அலங்காரப் பொருளா? ஓ... நோ...'' என்று அலறியது, 60ல் 30 பெண்களைக் கொண்ட, ஆஷா பாரேக் தலைமையில் இயங்கும் சென்சார் போர்டு. போனால் போகிறதென்று, 'பீவி காம் கி சீஸ் ஹை'' (மனைவி சமயத்துக்கு உபயோகப்படும் பொருள்) என்பதாக மாற்றியமைத்தார்கள். பாட்டையே எடுத்துவிட வேண்டும் என்ற எதிர்ப்புக் குரல் இப்போது ஓங்கி ஒலிக்கிறது!

'கிருஷ்ண நகரி'க்கு ஓ.கே!

'மலபார் ஹில்' பகுதியை 'ராம் நகரி' என்று பெயர் மாற்றம் செய்ய சிவசேனைக்காரர்கள் முயற்சிக்கின்றனர். ராம லக்ஷ்மணர்கள், தண்டகாரண்யத்துக்கு, இந்த வழியாகத்தான் சென்றார்களாம்! ஆனால் மும்பைவாசிகளுக்கு, கிருஷ்ணனை வரவழைத்து, இங்கேயுள்ள மலைக் குன்றுகளை எல்லாம் திரட்டி குடை பிடிக்க வைத்து, மறுபடியும் 'கோவர்தனகிரி' எபிஸோடை ரிப்ளே செய்தால் நிம்மதியாயிருக்கும் போலிருக்கிறது. பிரதியாக மும்பையின் பெயரையே 'கிருஷ்ண நகரி' என்று மாற்றினாலும் ஏற்கத் தயாராயிருக்கின்றனர். தினம் தினம் மாலை வேளையில் இடி மின்னலுடன் மழை படுத்தும் பாடு இருக்கிறதே. மறுபடியும் இந்திரனுக்கு வெறி பிடித்து விட்டதோ என நினைக்கத் தோன்றுகிறது. மின்னல் தாக்கிய விபத்துகள் ஏராளம்! நாலு மாச மழை என்றால் மழை விரும்பிகளுக்கே அலுத்து விடுகிறது!

— ஜெயஸ்ரீ ராஜ்

முதல் மனைவி 3

கோவிந்தனின் குறை தெரிந்த போது, மீராவுக்கு முதலில் அதிர்ச்சியாகத்தான் இருந்தது. இது மருத்துவத்தால் சரி செய்துவிடக் கூடியதுதான். பெரிதுபடுத்த வேண்டாம் என்றிருந்து விட்டாள். அதை விட, வாழ்க்கை முக்கியம். குழந்தை இல்லாமலே போனால்தான் என்ன? மனசு நன்றாய் இருந்தால் போதாதா?

ஆனால் பல இரவுக்குப் பின் ஒரு விஷயம் விளங்கியது. மனசு சுத்தமில்லை. ஆரோக்கியமில்லை. எதிராளியின் அவஸ்தையில், தவிப்பில், உணர்ச்சித் தத்தளிப்பில் இன்பம் காண்பவன் கோவிந்த். இது என்ன வக்கிரம்? சொல்ல முடியவில்லை. உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு விட்டு, தூர நின்று வேடிக்கைப் பார்ப்பவனை என்னவென்று நினைப்பது?

ஜெயந்தியை என்ன சொல்லி ஆறுதல் படுத்துவது? படுக்கையில் சுருண்டிருந்தாள் ஜெயந்தி. அப்பாதான் போன் செய்தார். கோவிந்த் அவளை மிரட்டினார் என்பதைக் கேட்கவே முடியவில்லை. அவள் என்ன செய்வாள் பாவம்? அவளையேன் இதில் இழுக்க வேண்டும்?

வீட்டுக்கு வந்தபோது, ஜெயந்தியை விட அப்பா பாதிக்கப்பட்டிருந்தது தெரிந்தது. வாய் திறக்கா மௌனம். உள்ளே கோபமும் சோகமும்.

"அதான் நான் சொன்னேன். இவனையெல்லாம் இப்படி ட்ரீட் பண்ணவே கூடாது. மரியாதையே தெரியாத மனுஷன். போலீஸ்ல சொல்லி முட்டிய பேத்தாத்தான் புத்தி வரும். நீங்கள்ளாம்தான் வேண்டான்னீங்க" அப்பா.

"அவ்ளோ மோசமா நடந்துப்பான்னு யாரு நெனச்சா?" அம்மா பேசினாள். அம்மாவுக்கும் அதிர்ச்சிதான்.

"நான் நெனைச்சேன். எனக்குத் தெரியும். எப்போ அவன் மீராவ கை நீட்டி அடிச்சானோ அப்பவே அவன் புத்தி தெரிஞ்சுடலையா. எந்த லிமிட்டுக்கும் போவான், ராஸ்கல்."

உண்மைதான். அவமானங்கள் வேண்டாமென்று விலக நினைத்தபோது பயந்து போனான். வெகுண்டான். அதைத் தொடர்ந்து அடி உதை. இயலாமையின் வெளிப்பாடுகள் என்பதை மீரா தெளிவாய்ப் புரிந்து கொண்டாள். நிற்க வைத்து நிலைமை புரிய வைக்கும் நிலையில் அவனில்லை. தன் ஆளுமைக்கு எதிராய் சொல்லப்படும் எந்த ஒரு சொல்லும் தன் ராஜ்ஜியத்தை ஆட்டங் காணவைத்து விடும் என்று அவன் நினைத்திருக்க வேண்டும்.

இதெல்லாம் தாங்காமல்தான், மீரா ஒரு நாள் பெட்டி படுக்கையோடு வீடு திரும்பினாள்.

பெண்டாட்டியை வைத்து வாழத் தெரியாதவன். கோவிந்தின் ஈகோ ஊனப்பட்டது. மருந்திட ஒரே வழி, தவறை மீரா மேல் சுமத்துவது. அல்லது, மறுபடி கூட்டி வைத்து வாழ்வது.

இரண்டாவது நடக்காது போகவே, முதல் வழியில் தீவிரம் காட்டினான் கோவிந்த். மீராவையும் சுந்தரையும் சேர்த்து வைத்துப் பேசினான். ஜெயந்தியைப் பயமுறுத்தியது இதைக் கொண்டுதான்.

"எனக்கு என்ன பவர் உண்டு தெரியுமா? உங்க ஏரியாவையே நாற அடிச்சுடுவேன். வெளிய தலைய காட்ட முடியாது. உங்க அக்காவுக்கு அவ்வளவு திமிர் இருக்கும்னா எனக்கு எவ்வளவு இருக்கும்? எதுக்கும் ஒரு லிமிட்டுதான். இது என் கடைசி வார்னிங். ஒழுங்கா என்னோட வந்து வாழச் சொல்லு. இல்ல, உங்க வீட்டுக்கு வரானே, யாரவன்... சுந்தர்... சுந்தருக்கும் உங்களுக்கும் தொடர்புன்னு ஊரெல்லாம் பேச வெச்சுடுவேன். ஜாக்கிரதை."

அதிர்ச்சி இரட்டிப்பானது. ஜெயந்தியால் தாங்க முடியவில்லை. அவன் போனை வைத்து நெடு நேரம் வரை, ஜெயந்தி ரிசீவரோடு சுட்டுண்டு கிடந்தாள். எப்படிப்பட்ட மனுஷன் இவன்? இவனை மனிதனாகவே கருத முடியுமா? இனி சட்டரீதியாய் சரி செய்யப்பட வேண்டியதுதான் மிச்சம். வலியைப் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும். பிரச்னைகளை எதிர் கொண்டுதான் ஆக வேண்



டும். அதற்கு முன்னால், கோவிந்தின் பயமுறுத்துதல்களை முறியடித்தே ஆக வேண்டும். அவளுக்கு உடனே சுந்தரைப் பார்க்க வேண்டும் போலிருந்தது.

அவள் வீடு திரும்பியபோது ஹாலில் சுந்தர் உட்கார்ந்திருந்தான். ஜெயந்தியைப் பார்த்தவுடன் மனம் கொள்ளா பரிவும் ஆதங்கமும் மேலிட்டது.

"நாளைக்குக் காலையில இந்தச் சனியனுக்கெல்லாம் ஒரு புல்ஸ்டாப் வெச்சிடறேங்கறார்மா சுந்தர். நீ ஒண்ணும் பயப்படாத. இப்பதான் யாரோ போலீஸ்காராகிட்ட பேசினார். நாளைக்கு வரச் சொல்லியிருக்கார். கூடவே, முதல் வேலையா ஒரு லாயரைப் பார்க்கணும்."

அப்பா உற்சாகமாய் ஆரம்பித்து, கடைசியில் தனக்கே சொல்லிக் கொள்வது போல் சொல்லிக் கொண்டார். ஜெயந்திக்குச் சுந்தரைப் பார்க்க முடியவில்லை. இரக்கம் போல் என்னவோ, அவன் பார்வையில்.

அப்பா, சுந்தரை ரொம்பவும் சார்ந்திருக்கிறார். அவரது ஈடுபாடும், உதவும் குணமும் கூடக் காரணமாயிருக்கலாம். ஒரு அபூர்வ ஈடுபாடு. வேறெவனாவது என்றால், பேசத் தொடங்கிய பத்து நாளில் வரிந்து வாரிக் கொட்டி தன் சின்னத்தனத்தைக் காட்டியிருப்பான்.

ஆர். வெங்கடேஷ்

ஆனால் அறிமுகமானதிலிருந்து நாளது வரை அவன் நாகரிகச் சுவரைத் தாண்டியதில்லை.

எப்போதும் பாக்கெட்டில் கை விட்டுக் கொண்டு நெஞ்சுயர்த்திய பார்வை. குரலில் நளினம். இதம். இங்கிதம். அவர் குரலுயர்த்தி நிராகரித்த ஒரு தருணம், ஜெயந்தி தன் அன்பை வெளிப்படுத்திய கணம்தானோ என்னவோ? நிராகரிப்பு உண்மையென்று இன்றுவரை ஜெயந்தி நம்பவில்லை. அதனால்தான் உடையவில்லை. உருகவில்லை. அபிப்பிராயங்களைத் திரட்டி, தன்னைத் தயார் படுத்திக் கொள்ள எவருக்கும் நேரம் வேண்டுமல்லவா? சொன்னவுடன், உடனே ஏற்க அன்பு என்ன யாசகமா?

ஆனால் நிராகரிப்பு, சட்டென ஒரு சொட்டு நீரைக் கண்களில் தேக்கியதை ஜெயந்தியாலேயே கட்டுப்படுத்த முடிய வில்லை. மீராவிடம் விஷயத்தைச் சொன்ன போது, மெல்லியதாய்ப் புன்னகைத்தாள்.

"குட் செலக்ஷன். எனக்கு முன்னேயே தோணித்து. ஆனால் டிசைட் பண்ண வேண் டியவ நீதானே. நான் சொல்றதுக்கு என்ன இருக்கு" என்றாள்.

என்றுமில்லாமல் மொட்டை மாடிக் காற்று சில்லிட்டது. துப்பட்டாவை இன்னும் முழுமையாகப் போர்த்திக் கொண்டாள். மனத்தில் குறிப்பற்ற எண்ணங்கள்.

பக்கத்தில் சுந்தர். மிஞ்சிப் போனால் ஒரு முழ இடைவெளி. மேலே போய் பேசலாமா என்று சுந்தர் கேட்டவுடன், ஜெயந்திக்கு இயல்புகள் உதிர்ந்தன. பலமுறை மொட்டை மாடியில் பேசியிருந்தாலும், இன்றைய விசேஷம் மனசில் தொக்கி நின்றது. தன் அன்பை வெளிப்படுத்தின பிறகு, இதுதான் முதல் முறை தனிமையில் சந்திப்பது.

"உன் ஆபீசுக்குப் போயிருந்தேன். ஆஷா சொன்னா. மனசு கேக்கலை. உடனே ஓடி வந்துட்டேன்."

"ம்"

"உங்கப்பா எல்லாத்தையும் சொன்னார்..."

"முதல்ல அதிர்ச்சியா இருந்தது. அது னால தான் வீட்டுக்கு வந்துட்டேன். யோசிச்சு யோசிச்சு பார்த்தேன். ஒரு விஷ யம் தெளிவா புரிஞ்சுது. கோவிந்த் பயந்தாங் கொள்ளி. இந்த மிரட்டலெல்லாம் வெளி வேஷம். இவனை யெல்லாம் எப்படி மனு ஷனா மதிக்கறதுன்னே தெரியல. யோசிக்க யோசிக்க வருத்தமா இருக்கு. பெண் பார்த்த போதெல்லாம் என்ன ஒரு பவ்யம். பேசும் போது ரொம்ப ஆச்சரியமா இருக்கும். மீரா வுக்கும் பெரிய அதிர்ஷ்டம்னு நெனைச் சேன். சொன்னா நம்பமாட்டீங்க. எங்கப்பா மாப்பிள்ளையோட பழகுற குணத்த பார்த் துட்டு, தன் பட்ஜெட் பிளானெல்லாம் தூக்கி போட்டுட்டார். மாப்பிள்ளை மனசு நெறைய செய்யணும்னு என்ன ஒரு தட புடல் தெரியுமா? அது எல்லாம் ஏமாற் றம்னா, எப்படி இருக்கும்?"

"உங்கம்மா பரவாயில்ல. தைரியமா இருக் காங்க. உங்கப்பா ரொம்ப புலம்பிட்டார்."

"மத்யானமே ஆடிப் போயிட்டார். முதல்ல சொல்ல வேண்டாம்னு நெனச் சேன். அப்புறம் மெதுவாகத்தான் சொன் னேன். அதுவே அவர ரொம்ப கலவரப்படுத் திட்டுது. இத்தனைக்கும் முழுசாவும் சொல்லல."

"வேறு என்ன சொன்னார் கோவிந்த்?"

"உங்களையும் மீராவையும் சேர்த்துப் பேசுவானாம். மனதே தாங்கல. எப்படி இப்படியெல்லாம் பேச முடியுது."

சுந்தருக்கு அருவருப்பாக இருந்தது. மன மெங்கும் மாசு. குறுக்கு புத்தி.

"இதெல்லாம் சொல்லியிருந்தா, அப்பா இன்னும் குறுகிப் போயிருப்பார். உங்க கிட்டதான் மொதல்ல சொல்லணும்னு நெனச்சேன். அப்புறம் உங்களையும் ஏன் கஷ்டப்படுத்தனுமேன்னு இருந்துட்டேன்."

"நீ இதபத்தியெல்லாம் கவலைப்படாத ஜெயந்தி. மனச போட்டு குழப்பிக்காத. எனக்கு என் லிமிட் தெரியும். பார்க்கறவங் களுக்கும் நம்ம உறவினுடைய நேர்மை புரி யும்னுதான் நெனக்கறேன்."

"நான் அதப்பத்திக் கவலையே படல சுந்தர். இன்பாக்ட் நான் கவலைப்பட்டதெல் லாம், இந்த விஷயம் உங்கள பாதிக்கக் கூடா தேங்கறதுதான். இவங்களுக்கு உதவப் போய் எதுக்கு அனாவசியமான கெட்டப் பேருன்னு நீங்க நெனச்சுடக் கூடாதுன்னு தான் நான் பயந்தேன்."

"நிச்சயமா இல்லம்மா. நான் நெனக்க மாட்டேன். என்னைப் பொருத்தவரைக்கும் நீங்க வேற இல்ல..."

ஜெயந்தி சட்டெனக் கனிந்தாள். இது தான். இதுதான். அவள் விரும்பியது. வேண் டியது. தான் வேறல்ல என்ற உணர்வுதான் உண்மை. அவன் முகத்தில் பரவிய சின்ன வெளிச்சம் அவளுக்குப் பிடித்திருந்தது. சொல்லிவிடக் கூடும் என்றுதான் எதிர்பார்த் தாள்.

"ஜெயந்தி... ஜெயந்தி..." மீராவின் குரல். இருட்டில் நின்றிருந்தாள், மொட்டை மாடிப் படியருகே.

"போன் வந்திருக்கு ஜெயந்தி..."

அம்மா கதவைத் திறந்தாள். சுந்தர் சேரில் அமர்ந்து காலணியைக் கழட்டினான். ஜெயந்தியிடம் பேச வேண்டிய, விடுபட்ட, தவறிப் போய் அழுந்திப் போன சொற்கள் வலமிட்டுக் கொண்டிருந்தன.

"ஜெயந்தி வீட்லேருந்து வரியா?" என் றாள் அம்மா.

"ஆமா."

"இனிமே அங்கெல்லாம் போகாதடா. வேணாம்..." குரலில் கடுமை தொனித்தது.

(தொடரும்)

சுப்புராஜ்

வயிறுக்காக..

காளிமுத்து புது வேலைத் தளத்திற்கு மாற்றப்பட்ட இரண்டே நாட்களில் நடந்துவிட்ட மிகக் கோரமான விபத்து அது.

அவன், டமன்ஸாராவில் நடைபெறும் கட்டடப் பணிக்கு மாற்றப்பட்டதை கேள்விப்பட்டதும், அவனுடைய நண்பர்கள் அவனுக்காக ஒரு அனுதாபத் தீர்மானமே நிறைவேற்றினார்கள்.

"என்ன காளி, போயும் போயும் நீங்க தான் கெடச்சீங்களா? அந்த சைட்டுக்கு ரெசிடென்ட் என்ஜினியரா போறது ஒரு தண்டனை மாதிரின்னு தெரியாதா உங்களுக்கு. நீங்க ஒத்துக்காதீங்க..." பயமுறுத்தினான் சுந்தரம்.

"ஏன், அங்க என்னப் பிரச்னை?" – காளிமுத்து.

"என்ன ஏதுன்னு தெளிவாத் தெரியல. ஆனா உங்களுக்கு முன்னால அங்க போஸ்டிங் போட்ட மூணு பேர் சொல்லிக்காமலேயே இந்தியாவுக்கு ஓடிட்டாங்க. எல்லோருமே நல்ல எக்ஸ்பீரியன்ஸ்டு ஆளுங்க. யாருமே ஒரு மாசம் ரெண்டு மாசத்துக்கு மேல தாக்குப் புடிக்கல. அவ்வளவு ராசியான சைட்..." சிரித்து திகிலூட்டினான் முரளி.

"அங்க என்ன பிசாசா இருக்கு. அதையும் தான் பார்த்துருவமே...!" காளிமுத்து வீறாப்பாகப் பேசினாலும் அவனுக்கு வேறு சாய்ஸ் இருக்கவில்லை. அதனால்தான் மறுப்பு எதுவும் சொல்லாமல் ஒத்துக் கொண்டான்.

டமன்ஸாரா சைட்டுக்குப் போக சம்மதிக்காத பட்சத்தில் அவன், இந்தியாவிற்குத்தான் திரும்பிக் போக வேண்டியிருக்கும் என்று கம்பெனி டைரக்டர் ஏற்கெனவே தீர்மானமாகச் சொல்லியிருந்தார். மேலும் காளிமுத்துவிற்கு சவால்கள் பிடிக்கும். எப்படிப்பட்ட கடின வேலையையும் கையாள்கிற பலமும் பக்குவமும் தன்னிடமிருப்பதாகத் தைரியமாக நம்பினான்.

ஒரு வியாழக்கிழமை அவனாகவே புதிய சைட்டுக்குப் போனபோது அங்கு மீட்டிங் நடந்து கொண்டிருந்தது. காளிமுத்து தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டதும் இவனை எல்லோரும் ஒருவித விரோதத்துடன் ஏறிட்டார்கள்.

"நீ எத்தனை நாளைக்கோ...?" உடைந்த ஆங்கிலத்துடன் உதட்டைச் சுழித்தவன் லூசிங் சியாங். புராஜெக்ட் மானேஜர். இங்கு வந்து ஒன்றரை வருடங்களாகியும் சீனப் பெயர்கள் வாயில் நுழைய, இன்னும் சிரமமாய்த்தான் இருக்கிறது.

சுவரின் ஓரத்தில் சுருட்டப்பட்டுக் கிடந்த வரைபடங்களை விரித்துப் பார்த்த காளிமுத்துவிற்கு உற்சாகம் பீறிட்டது. பிரச்னை வேலையில் இல்லை; அதை அணுகியவர்களிடம்தான் என்று அவனுக்குத் தோன்றியது.

புதுவிதமான முறையில் கட்டப்படப் போகும் ஒரு முப்பத்தைந்து மாடி கட்டடம் அது. முதல் பதினாறு மாடிகள் விரிந்த பரப்பளவில் கார் பார்க்கிங்கிற்காகவும் அதற்கு மேல் கொஞ்சம் சுருக்கப்பட்ட பரப்பில் அலுவலக உபயோகத்திற்காகவும், டிசைன்கூட அற்புதமாக இருந்தது.

பொதுவான கட்டுமானத்தில் முதல் மாடி, இரண்டாவது மாடி என்று கீழிருந்து மேல் நோக்கிப் படிப்படியாக கட்டிக் கொண்டு போவது தான் வழக்கம். ஆனால் இங்கு மேலிருந்து கீழ் நோக்கிக் கட்டப்படப் போகும் புது முறை அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.

பூமியில் அடித்தளம் போட்டு அதில் இரும்புக்குழாய்களை, ஒவ்வொரு மாடிக்கும் தேவையான இளைக் கம்பிகளுடன் நிர்மாணிக்கிறார்கள். அப்புறம் குழாய்களுக்குள் கான்கிரீட்டை கீழிருந்து பதினாறு மாடி உயரத்திற்குச் சற்று அதிகமாக பம்ப் பண்ணு

கிறார்கள்.

அந்த இரும்புக் குழாய் கான்கிரீட் பில்லர்களின் மேல் இரும்புச் சட்டங்களைப் பரப்பி, அதனுடைய பலத்திலிருந்து தொங்கும் சாரத்தை ஸ்டீல் கர்டர்ஸ், ட்ரஸ் மற்றும் மரப் பலகைகளினால் நிறுவுகிறார்கள். அதன்மேல் கம்பி கட்டி கான்கிரீட் போட்டு, அது கடினப்பட கால அவகாசம் கொடுத்து, அப்புறம் தொங்கு சாரத்தை மட்டும் அப்படியே கீழிறக்கி பதினைந்தாவது மாடியில் தளம் போடுகிறார்கள்.

இப்படியே ஒவ்வொரு மாடியாக இறக்கிக் கொண்டு வந்து எல்லா தளமும் முடிந்ததும் 35-வது மாடியில் தொடங்கி 16-வது மாடி வரை கீழ்நோக்கி வருகிறார்கள். அமெரிக்க கம்பெனி ஒன்று இந்தத் தொழில் நுட்பத்தையும், தொங்கு சாரக் கட்டுமானத்திற்குத் தேவையான முக்கியப் பொருட்களையும் வடிவமைத்து வழங்கியிருக்கிறது.

இப்படித் தலைகீழாகக் கட்டுமானப் பணிகள் மேற்கொள்வதினால், ஆரம்ப செலவினங்கள் கொஞ்சம் அதிகம் என்றாலும், கட்டுமானத்திற்கான கால அவகாசமும், களத்தில் இறங்கி வேலை செய்யும் தொழிலாளிகளின் எண்ணிக்கையும் கணிசமாய்க் குறையும் என்று தோன்றியது. வரைபடங்

போட்டிக்கதை
-8-



களையும் மேலோட்டமான விவரங்களையும் படிக்கப் படிக்க காளிமுத்துவிற்குப் பிரமிப்பாக இருந்தது.

மலேசியாவிலேயே இந்த முறையின் மூலம் கட்டுமானம் நடைபெறும் முதல் புராஜெக்ட் இதுதானென்னு அவனுக்குச் சொல்லப்பட்டபோது, அதில் பங்கு பெற தனக்கு வாய்ப்பு கிடைத்ததில் ரொம்பவும் சந்தோஷப்பட்டான்.

காளிமுத்து வேலை நடைபெறும் இடத்திற்குப் போனபோது, ஒரு பகுதியில் இரும்புக் குழாய் பில்லர்களின் நிர்மாணம் முடிந்து தொங்கு சாரம் அமைக்கும் பணி துரிதமாய் நடந்து கொண்டிருந்தது. இந்தோனேஷியத் தொழிலாளர்கள் சுமார் இருநூறு அடி உயரத்தில் பாதுகாப்பு பற்றி எந்தவிதமான பயமும் அக்கறையுமில்லாமல் பம்பரமாய்ச் சுழன்று கொண்டிருந்தார்கள்.

பதினாறு மாடி உயரத்திற்கு கூண்டுக்குள் அமைக்கப்பட்டிருந்த இரும்பு ஏணியில் ஏறிப் போனதில் அவனுக்கு தஸ்ஸு புஸ்ஸென்று இரைத்தது. தான் ஒருமுறை ஏறி வந்ததற்கே இத்தனை சிரமம் என்றால் இவர்கள் ஒரு நாளைக்கு எத்தனை தடவை ஏறி இறங்க வேண்டியிருக்கும்? மனசுக்குள் அவர்களுக்காகப் பரிதாபப்பட்டுக் கொண்டான்.

பொதுவாய் அடுக்கு மாடி கட்டட நிர்மாணத்தில் மின்சார பளு தூக்கிகள் மனிதர்களை ஏற்றிச் செல்லப் பயன்படுத்தப்படும். அது இங்கும் நிறுவப்பட்டிருந்தால் எல்லோருக்குமே வசதியாக இருக்கும் என்று தோன்றியது. லூவிடம் அது பற்றிக் கேட்க அவன், "நாங்கள் கிழவர்களை வேலைக்கு வைத்துக் கொள்வதில்லை..." என்றான் கிண்டலாக. அதில் இலேசான திமிர்த்தனமும் தெரிந்தது.

லூவிடம் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று மனசுக்குள் குறித்துக் கொண்டான் காளிமுத்து.

"தொங்குச் சாரம் கட்டுமானத்தை மேற்பார்வையிட, தேர்ந்த டெக்னீஷியன்கள் இருக்கிறார்கள்தானே?" – காளிமுத்து.

"அமெரிக்கர் ஒருவர் இதற்காக நியமிக்கப்பட்டிருந்தார். யு.எஸ். டாலரில் அதுவும் பெருந் தொகையை சம்பளமாகத் தர வேண்டியிருந்ததால் எங்கள் கம்பெனி அவரைத் திருப்பி அனுப்பி விட்டது. இனி நீதான் அதையெல்லாம் பார்த்துக் கொள்ள வேண்டும்..." சாவகாசமாய் புகைவிட்டபடி சொன்னான் லூ.

காளிமுத்துவின் திடுக்கிடல் அவன் முகத்தில் தெளிவாய்த் தெரிந்தது. யானை வாங்கி விட்டு அங்குசம் வாங்க கணக்குப் பார்த்த கதையாக இருக்கிறதே! இரண்டு மூன்று மாதங்களாக யாருடைய மேற்பார்வையுமில்லாமலா வேலை நடக்கிறது? கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

கீழே பார்க்க, இருநூறு அடி கிடுகிடு பாதாளம் திகிலூட்டி வயிற்றில் என்னவோ செய்தது. அவசரமாய் அலுவலகத்திற்கு இறங்கி வந்து விட்டான்.

மறுநாள் மறுபடியும் வரைபடங்களை ஆராய்ந்தபோது வேலை தளத்தில் அமைக்கப்பட்டிருக்கும் தொங்கு சாரத்திற்கும் வரைபடங்களுக்கும் சின்னச் சின்ன வித்தியாசங்கள் இருப்பது போலத் தோன்றியது. மேலும் தொங்கு சாரம் அமைக்கத் தேவையான தெளிவான செயல்முறை விளக்கமோ பாதுகாப்பு விதிகள் பற்றிய படிப்பினைகளோ அலுவலகத்தில் எங்குத் தேடியும் கிடைக்கவில்லை.

லூவை அவனுடைய கைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு விசாரித்த போது அவன் சிடுசிடுத்தான்.

"இதையெல்லாம் ஏன் என்னிடம் கேட்டுக் கழுத்தறுக்கிறாய்? நீங்கள்தானே கன்ஸல்டன்ட் என்ஜினியர். உங்கள் அலுவலகம்தான் அதையெல்லாம் எங்களுக்குத் தர வேண்டும்!"

அலுவலகத்தில் தொடர்பு கொண்ட போதும் சரியான பதில் கிடைக்கவில்லை.

"இப்போதுதானே கேட்டிருக்கிறாய்? ஒவ்வொன்றாகப் பார்க்கிறோம். இதில் சம்பந்தப்பட்ட யு.எஸ். கம்பெனி அவ்வப்போது நம்முடைய வரைபடத்தில் சிற்சில மாற்றங்களைச் செய்து கொள்கிறார்கள். அவற்றையெல்லாம் மொத்தமாகத் தொகுத்து புதிய வரைபடங்களைத் தயாரிக்க வேண்டும். நம் டிராப்ட்ஸ்மேன்கள் எல்லோரும் இப்போது ஏக பிஸி. கொஞ்சம் பொறுத்துக் கொள்..."

ஒரே ஒரு கணம் காளிமுத்துவிற்குள் ஒரு வித பயமும் கிலியும் பரவியது – இங்கு ஏதோ விபரீதமாக நடக்கப் போகிறது என்று.

சனிக்கிழமை காலை எப்போதும் போல் வேலைத் தளத்திற்குப் போனபோது, அது வெறிச்சோடிப் பயமுறுத்துகிற நிசப்தத்தில் இருந்தது. சுற்றிலும் எச்சரிக்கை ரிப்பன் சுற்றப்பட்டு உள்ளே நுழைய அனுமதி மறுக்

கப்பட்டிருந்தது. தொங்கு சாரத்தின் ஒரு பகுதி தரையில் சரிந்து, குலைந்து தாறுமாறாகச் சிதறிக் கிடந்தது.

வேகமாய்க் கிளம்பி அலுவலகத்திற்கு ஓடினான். அங்கு விபரம் கிடைத்தது. முந்தின இரவு எட்டரை மணி அளவில் ஒரு விபத்து நடந்திருக்கிறது. எல்லோரும் இரவு சாப்பாட்டிற்கு இறங்கிப் போய்விட, மூன்று பேர் மட்டும் அந்தக் குறிப்பிட்ட தொங்குசாரத்தின் மட்டத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தபோது அது சரிந்து விட்டது. இரண்டு பேர் ஸ்பாட்டிலேயே செத்துப் போக, ஒருத்தன் மட்டும் மரணத்தின் இறுதிக் கட்டத்தில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறான்.

"அந்த மூன்றாவது இந்தோனேஷியன் இப்பொழுது எப்படி இருக்கிறான்?" ஆதங்கமும் ஆர்வமுமாய் லூவிடம் காளிமுத்து விசாரித்தான்.



"அந்தப் பத்திரிகையோட பொருளாதார நிலை கவலைக்கிடமா இருக்கிறதா எப்படிச் சொல்றே...?"

"பத்திரிகையோட சர்க்குலேஷன் அதிகரிக்க, "தினம் ஒரு திருவோடு" திட்டம் அறிவிச்சிருக்காங்க!"

– பூனாம்பாளையம்
ஆர்.பி. ஜெயச்சந்திரன்

"யாருக்குத் தெரியும்? அநேகமா செத்துருப்பான்..." என்றான் லூ. எதற்கும் அலட்டிக் கொள்ளாத அவனுடைய வழக்கமான முகபாவத்துடன்.

"என்ன இப்படிப் பொறுப்பில்லாம பதில் சொல்கிறாய்? அவன் உன் கம்பெனி லேபர்தானே! அவனைப் போய் நீ பார்க்கவில்லையா? அவனுடைய உடல் நிலை பற்றி உங்களின் அரசாங்கத்திற்கு ரிப்போர்ட் தருவதற்காகவேனும் அவனைப் போய் நீ பார்த்திருப்பாயே..."

லூவிற்குப் பயங்கரமாய் கோபம் வந்தது. அவனின் பளபள முகம் செந்தூரமாய் சிவக்க, கத்துகிற தொனியில் சொன்னான்.

"அதெல்லாம் என் வேலையில்லை. அவன் எங்களுடைய சப்-கான்ட்ராக்டரின் லேபர்தான். நீ சொல்கிற ரிப்போர்ட் சடங்குகளை எல்லாம் அவன்தான் கவனித்துக் கொள்வான்..."

மூன்று உயிர்கள். கண்ணிமைக்கும் நேரத்திற்குள் கருகிப் போய்விட்டன. மூன்று பேரும் வாலிபத்தின் ஆரம்ப வயதுகளில் இருந்தவர்கள். மூன்று பேருக்கும் கல்யாணமாகி மனைவிகளும் குழந்தைகளும் இருந்தார்கள். அந்தப் பெண்கள் அழுத அழுகையும் ஒப்பாரியும் மொழி புரியாவிட்டாலும் நெஞ்சைப் பிழிந்தது. மனசு ரொம்பவே கனத்தது காளிமுத்துவிற்கு.

அதைத் தொடர்ந்து சம்பவங்கள் அவனின் வேதனையை இன்னும் அதிகப்படுத்தின. முழுசாய் மூன்று உயிர்களை பலிகொண்ட விபத்து பற்றிப் பெரிதாய் எந்த விசாரணையும் நடைபெற்றதாகவே தெரியவில்லை. கட்டுமானத்தில் சம்பந்தப்பட்டவர்களே கூடிக் கூடிப் பேசி, விபத்திற்கானக் காரணத்தை அலசினார்கள். அரசாங்க சார்பில் பாதுகாப்பிற்குப் பொறுப்பான டிபார்ட்மெண்ட் ஆட்கள் மட்டும் வந்து அவ்வப்போது மீட்டிங்கில் கலந்து கொண்டார்கள்.

கடைசியில், தொங்கு சாரத்தை தாங்கும் பிரதான போல்ட்டின் அடியில் பொருத்தப்பட வேண்டிய ஒரு சின்ன போல்ட் தவறாகப் பொருத்தப்பட்டிருந்ததால் பளுவைத் தாங்க மாட்டாமல் சாரம் சரிந்து விட்டது என்று ரிப்போர்ட் கொடுத்தார்கள்.

"இதென்ன கொடுமை? உங்கள் நாட்டில் உயிர்களுக்கு இவ்வளவுதான் மதிப்பா? மூன்று பேர் செத்துப் போயிருக்கிறார்கள். ஒருத்தரைக்கூட போலீஸ் கைது செய்யவில்லை. உயர்மட்ட விசாரணை எதுவும் நடைபெற்றதாகவே தெரியவில்லையே ஏன்?" காளிமுத்து அவனுடைய உயர் அதிகாரியிடம் ஒருமுறை புலம்பினான்.

"நீ ஏன் இவ்வளவு குரூரமாக யோசிக்கிறாய்? கவனக்குறைவாக நடந்துவிட்ட ஒரு தற்செயல் விபத்திற்கு யாரைக் கைது செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகிறாய்?" அவருடைய குரலில் கடுமையான கோபம் வெளிப்பட்டது.

"கவனக்குறைவுதான். நானும் ஒத்துக் கொள்கிறேன். அதற்கான முழுத் தண்டனை

யார் மீது நாம் அதிக அன்பும் நம்பிக்கையும் கொள்கிறோமோ அவர்களிடம் தான் அடிக்கடி சினமும் கொள்கிறோம். சினம் என்பது தலைகீழான அன்பு.
— வேதாத்ரி மகரிஷி
தகவல் : ச. லாவண்யா

யும் செத்துப் போனவர்களுக்கு மட்டும்தான் என்பதைத்தான் என்னால் ஜீரணிக்கவே முடியவில்லை. இதற்கு வேறு யாருமே பொறுப்பில்லையா?"

"அவர்கள் அதிகம் படிப்பறிவில்லாத, சொன்னபடி செய்கிற லேபர்கள்தானே! அவர்களுக்கு எப்படித் தெரியும் ஒரு சின்னத் தவறுகூட பெரிய விபத்துகளை நிகழ்த்தி விடும் என்கிற விபரீதம்? அதை அவர்களுக்கு முதலிலேயே உணர்த்தாதது யாருடைய தவறு? யாரையாவது கைது செய்துதான் தீர வேண்டும் என்று நீ பிடிவாதம் பிடித்தால் முதலில் உன்னைத்தான் கைது செய்ய வேண்டியிருக்கும். ஏனென்றால் நீதானே விபத்து நடந்த தினத்தில் பொறுப்பில் இருந்த ரெசிடென்ட் என்ஜினியர். நாங்கள் மிகவும் பெருந்தன்மையாக உன்னை கைது செய்ய விடாமல் தப்பிக்க விட்டதற்கு நீ எங்களுக்கு நன்றி பாராட்ட வேண்டும்..."

இருபது நாட்களுக்கு எந்த வேலையும் நடக்கவில்லை. அப்புறம் ஒரு தினத்தில் விபத்து நடந்த பகுதி தவிர்த்து மற்ற பகுதிகளில் வேலைத் தொடங்க அரசாங்கம் அனுமதித்து விட்டது என்று லூ உற்சாகமாகச் சொல்ல, வேலை தொடங்கியது.

"லூ, செத்துப்போன இந்தோனேஷியர்களின் குடும்பங்களுக்குச் சேர வேண்டிய இன்ஷூரன்ஸ், நஷ்ட ஈடு எல்லாம் கிடைக்க ஏற்பாடு செய்து விட்டீர்களா?" பேச்சுவாக்கில் ஒருமுறை காளிமுத்து கேட்க, அவன் மெல்லச் சிரித்தான்.

"இன்ஷூரன்ஸா? செத்துப் போன மூன்று பேருமே எங்கள் நாட்டில் வேலை செய்ய முறைப்படியான அரசாங்க அனுமதி பெற்று வந்தவர்கள் இல்லை. அவர்கள் சட்டவிரோதமாக உள்ளே நுழைந்து வேலை செய்து கொண்டிருந்தவர்கள். இந்த உண்மை எங்களுக்கே இப்போதுதான் தெரிந்தது. இதில் இன்ஷூரன்ஸ் எப்படி கிடைக்கும்?"

காளிமுத்துவிற்கு அதிர்ச்சியாக இருந்தது. வாழ்க்கை சிலருக்கு இப்படிக்கூடவா குரூரமாக இருக்கும்?

நீண்ட நீண்ட விளக்கங்கள், நிறைய சமாதானங்களுக்கு அப்புறம் ஒருவழியாய் முழு அளவில் வேலை தொடங்க அரசாங்கம் அனுமதித்து விட்டது. ஆனாலும் பதினாறாவது மாடியில் ஏறி தொங்கு சாரத்தின் மீது நடக்கவே பெருந் தலைகள் எல்லோருக்கும் ஒருவிதமான பீதியும் பயமும் இருந்தது.

தொங்கு சாரம் பகுதிக்கு வருவதை கூடிய மட்டும் எல்லோரும் தவித்தார்கள். வேலைத் தளத்திற்குள்ளும் நடக்கவே அஞ்சிப் பலரும் சுற்றிக் கொண்டுதான் வந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

ஆனாலும் பழைய இந்தோனேஷிய வேலையாட்களிடம் அந்த உயிர்ப்பயம் துளியும் இல்லாமல் அவர்கள் வழக்கம் போல் சுறுசுறுப்பாகத்தான் இயங்கிக் கொண்டிருந்தார்கள். இந்த முறை எல்லோருக்கும் சேஃப்டி பெல்ட் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் பெரும்பாலானவர்கள் அதை முறைப்படி பயன்படுத்தாமல் பேருக்கு இடுப்பில் சுற்றிக் கொண்டு வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

காளிமுத்து அவர்களை சேஃப்டி பெல்ட்டின் மறுமுனையை சேஃப்டி லைனில் பொருத்திக் கொண்டு வேலை செய்யும்படி கட்டாயப்படுத்தியபோது, "அது சிரமம் பிரதர், சுதந்தரமாய் அலைய முடியாது. வேலை ஓடாது. அப்புறம் எதிர்பார்த்தக் கூலி வராது" என்று மலாயில் சொல்லிச் சிரித்தார்கள்.

"உங்கள் நண்பர்கள் மூன்று பேர் இதே சைட்டில் உங்களின் கண்ணுக்கு முன்னால் விழுந்து செத்துப் போயிருக்கிறார்கள்..."

"உள்ளுக்குள் பயமாகத்தான் இருக்கிறது. ஆனாலும் பயந்தால் எப்படித்தான் பிழைப்பது? வயிறா, உயிரா எது பெரியதென்று மனசுக்குள் தினசரி போராட்டம் நடந்து கொண்டுதான் இருக்கிறது. ஒவ்வொரு முறையும் வயிறுதான் ஜெயிக்கிறது. ஏனென்றால் உயிர் வாழ்தலுக்கும் வயிறுதானே பிரதானம்..."

சோகம் இழையோட அவன் சொன்னது காளிமுத்துவை உறையச் செய்தது. இவர்களுக்காவது எல்லோருக்கும் இந்த நாட்டில் வேலை செய்வதற்கான 'வேலை அனுமதி' இருக்குமா என்று யோசித்தபோது பரிதாபமாக இருந்தது. எது எப்படியாகிலும், இன்னொரு விபத்தை இங்கு அனுமதிக்கலாகாது என்று தீர்மானித்துக் கொண்டான் காளிமுத்து. ●



கோழிக்கு எட்டணா!

ஒரு எழுத்தாளர். அவருக்கும் சங்கீதத்துக்கும் சுமார் நூறு கிலோமீட்டர் தூரத்து உறவு. சரியான ஔரங்கசீப்! ஆனா, ஒருசமயம் ஒரு நண்பரோட ஏற்பாட்டால, திருவீழிமிழலை சகோதரர்கள் அவர் வீட்டுக்கு வந்து நாதஸ்வரம் வாசிச்சாங்களாம். திருவீழிமிழலை பிரதர்ஸ் எப்பேர்ப்பட்ட இசை ஜீனியஸ்னு தெரியுமில்லையா?

பெரிய எழுத்தாளர் முன்னால் வாசிக்கறோமேன்னு அவங்களும் ரொம்ப சிரத்தையா, படு அற்புதமா வாசிச்சிருக்காங்க.

But, எழுத்தாளருக்கு அது அவ்வளவா ரசிக்கலை. பார்த்தார்; பேசாம ஒரு புஸ்தகத்தை எடுத்து வெச்சிப் படிக்க ஆரம்பிச்சுட்டார்.

நாதஸ்வர வித்வான்கள் ரொம்பக் கடுப்பாகிப் போயிருக்கணும். ஆனா அதுக்கு நேரெதிர் மனோபாவத்தோட, எழுத்தாளருக்கு ரொம்ப நெருங்கி, ஃப்ரெண்ட் ஆயிட்டாங்க. எழுத்தாளர் ரொம்ப ஆசைப்பட்டு, அவங்ககிட்டேருந்து ஒரு நாதஸ்வரத்தைப் பரிசா வாங்கி, பிராக்டிஸ்(!) பண்ண ஆரம்பிச்சுட்டார்!

நண்பர்களுக்கு ஒரே ஆச்சர்யம். என்னடா இவர் திடீர்னு இப்படி இசைப்புரட்சி பண்ண ஆரம்பிச்சிட்டாரேன்னு. அவர்கிட்டயே போயி, "உங்களுக்கு எதுக்கு இந்த வேண்டாத வேலையெல்லாம்?"னு கேட்டிருக்காங்க.

எழுத்தாளர் அதுக்கு ரெண்டு பதில் சொல்லியிருக்கார்:

1. வெட்டி அரட்டைக்கு வர்றவங்களை, நாதஸ்வரம் வாசிச்சிக் காண்பித்து விரட்டலாம்.

2. ராஜரத்தனம் பிள்ளை கட்டுரை எழுதும்போது நான் ஏன் நாதஸ்வரம் வாசிக்கக் கூடாது?

மேதைகள் விசித்திரமானவர்கள். அந்த எழுத்தாளர் புதுமைப்பித்தன்.

ரகுநாதனோட 'புதுமைப்பித்தன் வரலாறு'ல இதைப் படிச்சேன்.

திருட்டு வீடியோவை ஒழிக்கற விஷயம் பத்தி டைம் கிடைக்கறபோதெல்லாம் பேசிட்டிருக்காங்க. But, சென்னைல இப்பல்லாம் புதுப்படம் பார்க்கத் தியேட்டருக்கே போக வேண்டாம். ஒரு நாளைக்கு ரெண்டு புதுப்படம் அநேகமா எல்லா ஏரியா கேபிள்லேயும் போட்டுடறாங்க. ரீஸன்டா தென்சென்னைப் பகுதிகள்ல காட்டப்பட்ட படங்கள்: டைப் இப் பாக்ட், சொல்லாமலே, குருதிப்புனல்

சுமி சூப்பர்மார்க்கெட்





"தலைவருக்கு ஐஸ் வைக்கறதுக்கு ஒரு அளவே இல்லையா?"

"என்ன சொல்றீங்க?"

"பாருங்க; 'ஒரு நாளைக்கு 25 மணி நேரமும் அயராது உழைக்கும் அற்புதத் தலைவா'ன்னு பேனர் வெச்சிருக்காங்க!"

— யமுனா ரெங்கநாதன்

(இது பழக இல்லை?), ஜீன்ஸ், Zorro, ரெட்டை ஜடை வயசு, உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்.

இதுல, எனக்குப் பார்க்கக் கிடைச்சதெல்லாம் சுத்தமான ப்ரிண்ட்ஸ். கேஸட்டுக்காகவே படமெடுத்தாமாதிரி அப்படியொரு Sound&Picture accuracy. தியேட்டர் பிரின்ட்டுன்னெல்லாம் சொல்ல முடியாது.

சினிமாத் துறையிலேயே மேல் மட்டத்துல இருக்கறவங்க தயவில்லாம இதெல்லாம் சாத்தியம்னு தோணலை. பெரிய போலீஸ் ஆசாமிங்களெல்லாம் சும்மா வீடியோ கடைக்காரங்களை அரெஸ்ட் பண்ற ஜோலி பார்க்கறது வெறும் வேஸ்ட். சூத்ரதாரிகளைக் கண்டுபிடிக்கறது ரொம்பக் கஷ்டம். பட்டுக்கோட்டைக்காரர் சொன்னதுதான் சரி. திருடனா பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க வழியில்லை.

Column ரைட்டர்ஸ் பத்தி இந்த Columnல ஒரு பேரா எழுதலாம்னு லிஸ்ட் எடுக்க ஆரம்பிச்சேன். ஐயோ, இன்னிக்கு எழுதிட்டிருக்கற இண்டியன் Columnists மட்டும் குறைஞ்சது அம்பது பேர் கவனத்துக்கு வராங்க தெரியுமா? ஷோபா டே, தவ்லீன் சிங், ராஜீவ் சுக்லா, விநோத் மெஹ்ரா தொடங்கி பெரும் படையே இருக்கு.

தமிழ்ல இந்த கல்சர் இப்ப அவ்வளவா வளரலை. கணையாழில சுஜாதா காலம் மட்டும்தான் விடாம வந்துட்டிருக்கு. தென், வாரமலர் அந்துமணி.

கவிதை, சிறுகதை, நாவல் இலக்கிய வளர்ச்சி அந்தந்தக் காலத்துல எப்படி இருந்திருக்குன்னு தெரிஞ்சிக்க சுஜாதாவோட பழைய 'கடைசிப் பக்கங்கள்' உதவும்.

தமிழ்நாட்டுப் பெண்களோட - குறிப்பா மத்தியதர வர்க்கம் - சிந்தனைப் போக்கு, அவங்களோட பிரச்னைகள், சுவாரஸ்யமான பத்திரிகை உலகத் தகவல்கள், ஜோக்ஸ்னு அந்துமணியோட ஸ்டைலுக்குப் பல பெண் விசிறிகள்.

'நினைத்தேன், எழுதுகிறேன்'னு சோ பண்ணிட்டிருக்கார். அவரோட பழைய ஹ்யூமரஸ் டச் காணலை. நான் விரும்பிப் படிக்கறது, துக்ளக்ல வண்ணநிலவன் எழுதற சின்னத்திரை விமர்சன Column. கடுமையான கோபம் + அபாரமான நகைச்சுவை.

இந்த காம்பினேஷன் ரொம்ப நல்லா அவருக்கு ஒர்க் அவுட் ஆவுது.

ஒரு ஜோக்:

ஒரு விவசாயி, கோழி வளர்க்க லோன் வாங்கினார். ஒரு மாசம் கழிச்சி, இன்ஸ்பெக்ட் பண்ண வந்த அதிகாரி, "கோழிங்களுக்கெல்லாம் என்ன தீவனம் தரே?"ன்னு கேட்டார்.

"நான் ஒண்ணும் தரதில்லைங்க. குப்பை மேட்டுல மேஞ்சிக்கும் அதுங்களா."

"அடப்பாவி! சரியான உணவு தரதில்லையா? உனக்கு அபராதம் நூறு ரூபா"ன்னு கரந்துட்டுப் போயிட்டார் அடுத்த மாசம் மறுபடி இன்ஸ்பெக்ஷன். மறுபடி "என்ன தீவனம்?"னு கேட்க,

"நல்ல பாதாம், முந்திரிப் பருப்பெல்லாம் தரேங்க!" (அனுபவம்!)

"அடப்பாவி! அதிக கொழுப்புள்ள உணவு கொடுத்துக் கோழிங்களை சாகடிச்சிப் பிரியாணி பண்ணப் பார்க்கறியா? ஃபைன் நூறு ரூபா."

மூணாவது மாசம் அதிகாரி வந்தப்போ, விவசாயி பயந்து தானே முந்திக்கிட்டுச் சொன்னார்:

"நான் ஒண்ணும் தீவனம் குடுக்கறதில்லைங்க. ஒவ்வொரு கோழிக்கும் எட்டணா தினம் குடுத்திருவேன். வேண்டியதை அதுங்களே வாங்கிக்கும்!"

('மூணு வருஷம் முன்னால் எதிலோ படிச்ச' ஜோக்னு குறிப்பிட்டு அனுப்பியவர்: திருப்பரங்குன்றம் டி.கே. சுப்ரமணியன்.)

— சுபி



போயஸ் தோட்டத்தில் போலீஸ் விசாரணை?

● "சென்னையைச் சுற்றி கார் தொழிற்சாலைகள் வருவது ஒரு பக்கம் இருக்கட்டும். பெருங்களத்தூரில் மூடப்பட்ட தொழிற்சாலையின் கதி என்ன? பாதிக்கப்பட்ட தொழிலாளர்களில் இதுவரை 26 பேர் வறுமையின் காரணமாகத் தற்கொலை செய்து கொண்டு விட்டார்கள். புதிதாகத் துவங்க இருக்கும் தொழிற்சாலைகளில் வேலையிழந்த அந்தத் தொழிலாளர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படலாமே. கலைஞர் மனது வைத்தால் நடக்கும்'' என்கிறார் யூனியன் தலைவர் ஒருவர். நெடுஞ்சாலையை ஒட்டி இருக்கும் அந்தத் தொழிற்சாலையை காலப் போக்கில் பிளாட் போட்டு விற்றுவிட ஏற்பாடு நடக்கிறதாம். "இப்படிச் செய்யாவிட்டால் வாங்கியுள்ள அரசுக் கடனை எப்படி அடைப்பது?'' என்று கேட்கிறதாம் நிர்வாகம். கலைஞர் அரசு என்ன செய்யப்போகிறது?

● அம்மா பெட்ரோலியம் இலாகா மீது குறியாக இருப்பது ஏன்? பா.ஜ.க.விற்குத் தேர்தலின்போது அள்ளிக் கொடுத்த வட இந்தியத் தொழிலதிபர், இந்தியாவில் இப்போது பெட்ரோலிய ரசாயனத் துறையில் கொடி கட்டிப் பறக்கிறார். அந்தத் தொழிலதிபர் வாழப்பாடிக்கும் தோஸ்த். அவரை போயஸ் தோட்டத்துக் கதவுக்குக் கொண்டு வர வேண்டுமென்றால் பெட்ரோலியத் துறை கைவசம் இருக்க வேண்டும். ஆகையால்தான் முதலில் கொஞ்சம் ஏமாந்துவிட்டு, இப்போது கைப்பற்றப் பார்க்கிறார் அம்மா. ஆனால் வாழப்பாடியார் இதைப் பற்றியெல்லாம் கவலைப்படுவதாக இல்லை. தம் கட்சி சார்பாக அமைக்கப்பட்டுள்ள அறக்கட்டளைக்கு நிதி சேர்ப்பதில் பிஸியாக இருக்கிறார். கட்சி அலுவலகத்துக்காக இரண்டு கோடி செலவில் காளியப்பா ஆஸ்பத்திரி அருகில் கட்டடம் வாங்கப்பட்டுள்ளது. வருகிற நவம்பர் 19ம் தேதியன்று இந்திராகாந்தியின் பிறந்த நாளை ஒட்டி, பேரணியும் பொதுக்கூட்டமும் நடத்துகிறார் வாழப்பாடி. அன்று பிரதமரையும் சென்னைக்கு அழைக்கும் திட்டம் இருக்கிறது. அம்மா என்ன செய்யப் போகிறார்?

● "இரண்டு அமைச்சர்களுக்குப் பதிலாக இரண்டு அமைச்சர்கள். அதுவும் அதே இலாகாக்கள். அவ்வளவுதான் அ.தி.மு.க.வுக்குத் தர முடியும்'' என் பதில் உறுதியாக இருக்கிறதாம் பா.ஜ.க. சில பா.ஜ.க கூட்டணிக் கட்சிகளை அப்படியே நேரம் வரும்போது காங்கிரஸுக்கு ஆதரவாக ஹைஜாக் செய்யவிருந்த அம்மாவின் சதி வெளி வந்து விட்டதாம்.

''அவரது 'integrity' கேள்விக்குறியாக இருக்கிறது. எனவே, இனி எந்தவித கூடுதல் சலுகையும் எங்களிடமிருந்து எதிர்பார்க்க முடியாது'' என்கிறார் பா.ஜ.க பிரமுகர் ஒருவர்.

● ராமநாதபுரம் கலவரம் தொடர்பாக போயஸ் தோட்டத்திலும் போலீஸாரால் விசாரணை மேற்கொள்ளப்படும் என்று நம்பகமான தகவல் சொல்கிறது!

● சமீபத்தில் நடைராஜன் தமது பயணத்தை முடித்தாரல்லவா! தமிழகத்தின் முக்கியமான ஊர்களில் அவரை வரவேற்றவர்கள் யார்? யார்? என்று போயஸ்தோட்டத்திற்கு முக்கிய நகரங்களில் எடுக்கப்பட்ட வீடியோ காஸெட்டுகள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றனவாம். கட்சிக்காரர்கள் ஒருவரை ஒருவர் போட்டுக் கொடுக்கத் தவறான தகவல்கள் தருவதால் படத்தைப் பார்த்து முடிவு செய்யத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதாம். ◙

— தில்லப்பா

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager; Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax : 2345621
Annual Subscription : India Rs. 250/-; Overseas Rs. 1600/- (Air Mail)
Half Yearly Subscription : India Rs. 125/-; Overseas Rs. 800/- (Air Mail)



மிரட்டும் அழகு!

தமது அடுத்தப்படமான 'முதல்வன்' அழைப்பிதழை 'மிரட்டும் அழகுடன்' வடிவமைத்து அனுப்பியிருந்தார் ஷங்கர். புகைப்படக் கலையின் அசாத்திய வளர்ச்சி மட்டுமின்றி, தம் கலையுணர்வையும் அந்த எட்டுப் பக்க ஆல்பத்தில் வெளிப்படுத்தியிருந்தார். (ஸாம்பிளுக்கு இங்கே ஒரு படம் – பூக்களோடு பூவாக மனீஷா கொய்ராலா) இதே அழகு படத்திலும் வெளிப்பட வேண்டும்.



அருமையான உங்கள் வீடுகளுக்கு

அழகும் உறுதியும் நிறைந்த

மாயூரம் டிம்பர்


கதவுகள்

★ தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்தர மரம்

★ ஈரப்பதம் குறைக்கப்பட்டது.

★ ரசாயன கலவை பாதுகாப்பு

★ நேர்த்தியான இயந்திர வடிவமைப்பு



MADE TO ORDER BY:

MAYURAM TIMBER

& General Trading Corpn.


Showroom: 13, Rameswaram Road, T. Nagar, Chennai - 600 017.

Phone: 4345207

H.O.: 83, G.S.T. Road, Tambaram, Chennai - 600 045, Tel: 2368297

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392/ 98 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka

ஆண்டிற்கு 12.5% என்றவாறு உறுதியான மாதாந்தர வருமானத்தை 5 ஆண்டுகளுக்கும் அளிக்கிறது.



யூடிஐ-ன்

மன்த்லி

இன்கம்

பிளான் 98 (IV)

யூடிஐயின் மன்த்லி இன்கம் ப்ளான் 98 (IV) ஒரு பாதுகாப்பான, கூடவே மதிப்புமிகு முதலீட்டு வாய்ப்பு ஆகும். இதன் சிறப்பம்சங்கள் :

- தேர்வுகள் : மாதாந்திர வருவாய், வருடாந்திர வருவாய் மற்றும் க்யூமுலேட்டிவ் தேர்வுகள்
- மாதாந்திர வருவாய் தேர்வு : ஆண்டிற்கு 12.5% அனைத்து 5 ஆண்டுகளுக்கு மாதாந்திரமாக வழங்கப்படும். ஒவ்வொரு ஆண்டிற்கான பின் தேதியிட்ட மாதாந்திர வருவாய் விநியோக வாரண்டுகள் முன்கூட்டியே உங்களுக்கு அனுப்பப்படும்.
- வருடாந்திர வருவாய் தேர்வு : ஆண்டிற்கு 13.25% உறுதிப்படுத்தப்பட்ட வருடாந்திர வருவாய் அனைத்து 5 ஆண்டுகளுக்கு
- க்யூமுலேட்டிவ் தேர்வு : ரூ. 5000 குறைந்தபட்சம் ரூ. 9314 ஆகிறது முதிர்வடையும்போது
- மூலதன மதிப்புயர்வு : மூன்று தேர்வுகளிலும் மூலதன மதிப்புயர்வுக்கு வாய்ப்பு உண்டு
- காலவரை : அனைத்து மூன்று தேர்வுகளுக்கும் 5 ஆண்டுகள்.
- பாதுகாப்பு : திட்டத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ள மூலதனத் தொகை முதிர்வடையும்போது பாதுகாப்பாக இருக்கும் என உத்தரவாதம் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் உறுதி செய்யப்பட்டுள்ள ரிட்டர்ன் மற்றும் முதிர்வடையும் மூலதன பாதுகாப்பு ஆகியவை டிரஸ்டின் டெவலப்மெண்ட் ரிசர்வ் ஃபண்டின் உத்தரவாதம் பெற்றுள்ளது. காலவரைக்கு முன்பே மறுகொள்முதல் செய்ய விரும்பினால் இந்த உத்தரவாதம் பொருந்தாது. மேலும், இத்தகைய கொள் முதல்களில் மறுகொள் முதல்விலை அப்போது நிலவிவரும் என்ஏவி அடிப்படையில் அமையும்.
- லிக்விடிட்டி : 3 ஆண்டுகளுக்கு பிறகு என்ஏவி அடிப்படையிலான விலையில் திரும்ப வாங்கும் வசதி கூடவே எக்ஸ்சேஞ்சில் பட்டியலிடும் வசதி அனைத்து மூன்று தேர்வுகளுக்கு கீழ்.
- குறைந்தபட்ச முதலீடு : மாதாந்திர வருவாய் மற்றும் வருடாந்திர வருவாய் தேர்வுகளின் கீழ் ரூ. 10,000 மற்றும் க்யூமுலேட்டிவ் தேர்வின் கீழ் ரூ. 5,000 உச்சவரம்பு ஏதும் இல்லை.
- வரிச்சலுகைகள் : வருமான வரிச்சட்டம் 1961 பிரிவுகள் 80L, 48 மற்றும் 112ன் கீழ்
- மூலத்தில் வரிக்கழிப்பு : வருமான வரிச்சட்டம் 1961 ன் படி

ஆண்டிற்கு 13.25% வட்டியுடன் வருடாந்தர வருமானம் மற்றும் க்யூமுலேட்டிவ் தேர்வுகளுடன்.

அதோடு வருமான வரிச்சட்டம் 1961 பிரிவு 54 இஏ-ன் கீழ் மூலதன லாப வரிவிலக்கு

CWFL-TAM-98

யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா
உங்கள் மேலான எதிர்காலத்திற்கு.

பிளான் செப்டம்பர் 28 முதல் 11 நவம்பர் 1998 வரை நடப்பிலிருக்கும்

[illegible]

மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் : யூடிஐ அலுவலகங்கள், சென்னை : போன் : 517101, 517190 மதுரை : போன் : 38186, திருச்சி : போன் : 760060. கோவை : போன் : 214973. யூடிஐ பேங்க், சென்னை : போன் : 8231085-89, அல்லது முக்கிய பிரதிநிதிகள், ஏஜெண்டுகள்